வாணீபுர வணிகன்

இந்த தமிழ் நாடகம்

நாடகப் பேராசிரியர்

ப. சம்பந்த முதலியார், பி. ஏ. பி. எல்

அவர்களால் இயற்றப்பட்டவை

இவரது மற்ற நூல்கள்

லீலாவதி - சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம் இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், தாசிப்பெண், மெய் காதல், பொன்விலங்கு, சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி—சுலோசனா, புஷ்பவல்லி, உத்தம பத்தினி, அமலாதித்யன், கள்வர்தலைவன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்ரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள், நாடகத்தமிழ், யயாதி, பிராமணனும் சூத்திரனும், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன்' மார்க்கண்டேயர், ரத்னாவளி, மூன்று விநோத நடிகைகள், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக்கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக் கலையில் தேர்ச்சிபெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காட்சி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளிமணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுர நாடக சபை சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீந்தார், சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலும்— சிவாலய சிற்பங்கள், சதி சக்தி, மனை ஆட்சி, இந்தியனும் ஹிட்லரும், தீபாவளி வரிசை, காலக் குறிப்புகள், சுப்ரமண்ய ஆலயங்கள், தீயின் சிறு திவலை, கலையோ காதலோ, உணவுப் பொருள்கள், சபாபதி துவிபாஷி, சபாபதி துணுக்குகள், இல்லறமும் துறவறமும், சபாபதி முதலியாரும் பேசும் படமும், நான் குற்றவாளி. நீண்ட ஆயுளும், தேக ஆரோக்யமும்.

மூன்றாம் பதிப்பு

காபிரைட்] 1957 [விலை ரூ. 2-50

என் தாய் தந்தையர்

ப. விஜயரங்க முதலியார்
ப. மாணிக்கவேலு அம்மாள்

ஞாபகார்த்தமாக அச்சிடப்பட்டது.

வாணீபுர வணிகன்.

நாடக பாத்திரங்கள்

வாணீபுரத் தரசன்		
மார்த்தாண்ட சேதுபதி அருகபுரத் தரசன்	....	சரோஜினியை மணக்கவந்த மன்னர்கள்.
அநந்தநாதன்	....	வாணீபுர வணிகன்.
பானுசேனன்	... .	அநந்தநாதனுடைய நண்பன்.
சோமேசன் சாம்பநாதன் கிரிஜாநாதன்	....	அநந்தநாதன் பானுசேனன் இருவருக்கும் நண்பர்கள்.
லீலாதரன்	....	ஜலஜாவின் காதலன்.
ஷாம்லால்	....	ஒரு மாறுபாடி.
தூப்லால்	... .	ஒரு மாறுபாடி, ஷாம்லால் நண்பன்.
லாவண்யகபீரன்	... .	விதூஷகன், ஷாம்லால் வேலையாள்.
வயோதிக கபீரன்	...	லாவண்யன் தகப்பன்.
கேசரிநாதன்	... .	பானு சேனனுடைய வேலையாள்.
பாலதாசன் ஸ்தாவிரன்	... ...	சரோஜினியின் வேலையாட்கள்.
சரோஜினி	... ...	ஒரு செல்வச் சீமாட்டி.
நீலகேசி	....	சரோஜினியின் தோழி.
ஜலஜா	....	ஷாம்லாலுடையபெண்.

வாணீபுரத் தரசனுடைய மந்திரிகள். காவற்காரன், வேலையாட்கள் முதலியோர்.

கதை நிகழிடம்:—*சிலபாகம் வாணீபுரத்திலும். சிலபாகம், மணிபுரத்திலும்.*

வாணீபுர வணிகன்

முதல் அங்கம்.

முதற் காட்சி

இடம்—வாணீபுரம், ஒரு வீதி.

அநந்தநாதன், சாம்பநாதன், சோமேஸ்வரன் வருகின்றனர்.

அ. நான் ஒருவாறு யிருப்பதின் காரணம் நானே உண்மையில் அறிகிலேன். இது எனக்கே கஷ்டமா யிருக்கின்றது; உங்களுக்கும் கஷ்டத்தைத் தருவதாக உரைக்கின்றீர். இது என்னை எப்படிப் பீடித்தது, எவ்விதம் தொடர்ந்தது, எப்படி இதற் காளானேன், எதனு லாயது, எப்படி உற்பவித்தது, இவையெல்லாம் இனியே நான் அறியவேண்டும். இந்த விசாரமானது என் அறிவை மழுங்கச்செய்வதினுல், என்னை நானே அறிந்துகொள்ளல் கஷ்டமாயிருக்கிறது.

சா. அருகிற் பறந்தோடும் அற்ப தோணிகள் வணக்கத்துடன் மரியாதை செய்ய, அவைகளை யிகழ்வதுபோல் அகன்ற பாய்மரங்களோடு ஆர்கலியின் கனவான்களை நிகர்த்து பவனி வரும், உம்முடைய நாவாய்களின்மீது உம் மனம் நாடுகின்றதினுல், இவ்வாறு தத்தளிக்கின்றது.

சோ. ஐயா, என் வார்த்தையை நம்பும். என்னுடைய சகல சரக்குகளும் சமுத்திரத்தின் மீதிருப்ப தானுல், என்னுடைய மன முழுதும் அவைகளெல்லாம் குறைவின்றி வந்துசேரவேண்டு

மென்று எந்நேரமும் கோரிக்கொண் டிருக்கும்; புல்லைப் பறித் தெறிந்து காற் றடிக்கும் திசையை எந் நேரமும் கவனித்துக்கொண் டிருப்பேன். படங்களில் எந் நேரமும் பாதைகளையும் துறைமுகங்களையும் பார்த்துக்கொண்டே யிருப்பேன். இதனால் என் சரக்குகளுக்கு ஹானி நேரிடக்கூடும் என்று நான் பயப்படத்தக்க ஒவ்வொரு விஷயமும், சந்தேகமின்றி எனக்கும் சஞ்சலத்தை யுண்டுபண்ணும்.

சா. காற்றினால் கஞ்சி யாறினால், இக் காற்று பலமாய் அடித்தால், கடலில் என்ன கஷ்டம் நேரிடுமோ என்று எண்ணின வனாகி நடுங்குவேன், ஜுரம் பிடித்தவன்போல். மணலைப் பார்க்கும் பொழுதெல்லாம், கடலில் ஆழ மில்லா இடங்களும், மணற் றிட்டைகளும் எனக்கு நினைவு வந்து, என் செல்வம் நிறைந்த மரக்கலமானது எங்கு சென்று மணற் றிட்டில் அகப் பட்டு, உன்னதமான பாய்மரம் முறிந்து மாண்டு புதைக்கப் படுங்கால், அதற்கு முத்த மிடுவது போல், சாய்கிறதோ என்று மயங்கிடும் என் மனம். கோயிலுக்குச் சென்று கல்லாற் சமைத்த கோபுரத்தைப் பார்ப்பேனாயின், கடல் மத்தியில் அதைப் போன்ற உன்னதமான கற் பாறைகளிருந்து, என் மிருதுவான மரக்கலங்களின் பக்கங்களில் தாக்க, அவைகள் மீதிருந்த திரவியமெல்லாம் திரை கடலின் மீது சிதறுண்டுபோக, சப்திக்கின்ற சமுத்திர ராஜன் பட்டு வஸ்திரங்களை யெல்லாம் உடுத்திக் கொள்ள அபகரிக்க, சற்று முன் அதிக விலை பெற்றிருந்த கப்பல் க்ஷணநேரத்தில் கவைக் குதவாத தாகிப்போகுமே, என்னும் கவலை யன்றோ பாதிக்கும். இவைகளையெல்லாம் பற்றி யோசிக்கப் புத்தி யிருக்கும்பொழுது, அந்தச் சிந்தையே, அவைகள் அகஸ்மாத்தாய் நேர்ந்தால் எனக்கு என்ன துயரத்தைத் தரும், என்னும் கவலையை உண்டாக்கா திருக்குமா? எனக்கு நீர் காரணம் கூறவேண்டிய தில்லை. அவரது வாணிபத்தின்மீது மனது செல்வதால் வருத்தத்துட னிருக்கிறார் அநந்தநாதர்.

அ. நான் சொல்வதை நம்புங்கள்; அப்படியன்று. என் செல்வ மெல்லாம் ஒரே கப்பலிலாவது அல்லது ஒரே யிடத்திற் காவது ஏற்றப்பட்டிருக்க வில்லை என்று நான் சந்தோஷப் படுகிறேன்; அன்றியும் என் ஐஸ்வரியமானது கேவலம் இவ் வருஷத்திய லாப நஷ்டத்தையே பொறுத்ததுமன்று. ஆகவே எனக்கிப்பொழு திருக்கும் வருத்தம் வர்த்தக விஷயத்தால் வந்த தன்று.

சோ. சரி, அப்படியானால் காதல் கொண்டிருக்கிறீர் நீர்.

அ. சீ! சீ!

சோ. காதலு மல்லவா? ஆனால் சந்தோஷமா யில்லாதபடியால் சஞ்சலத்தோ டிருக்கின்றீர் என்போம். இவ்வாறே, நான் துக்கத்துட னில்லாதபடியால், சந்தோஷமா யிருக்கிறேன் என்று சிரித்து குதூஹலத்துட னிருக்கக்கூடும் எளிதில். அசுவனிதேவர்மீது ஆணைப்படி, அகிலத்தில் என்ன என்ன ஆச்சரியகரமான ஜன்மங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன! சிலரோ, நாகஸ்வரம் வாசிப்பவனைக் கண்டு இடைவிடாது நகைக்கும் கிள்ளைகளைப்போல், எந்நேரமும் மலர்ந்த கண்க ளுடையராய் நகைத்த வண்ணம் காலம் கழிக்கின்றனர். மற் றும் சிலரோ, பிரம்ம ரிஷி தூர்வாசரே நகைக்கத்தக்க பரி ஹாச வார்த்தையைக் கேட்டபோதிலும், நகைப்பதற் கறி குறியாகப் பல்லைத் திறவாது, முகத்தைச் சுளித்த வண் ணம் வாழ்ந்து வருகின்றனர்.—இதோ வருகின்றார் உமது ஆருயிர்த் தோழன் பானுசேனர், கிரிஜநாதர், லீலாதரர் எங்களுக்கு விடையளியும். அவர்களுடன் சாம்பாஷித் தாவது சந்தோஷ மாயிரும்.

சா. உம்மை உற்சாகப்படுத்தும்பொருட்டு இன்னும் கொஞ்ச நேரம் இருந்திருப்பேன், எம்மைப் பார்க்கிலும் ஆப்த நண் பர்களான இவர்கள் வந்திராவிட்டால்.

அ. உங்களுடைய நட்பையும் நான் அருமையாகத்தான் பாவிக் கிறேன். உங்களுக்கேதோ வேலை யிருக்கின்றது, அதன்

பொருட்டுப் போகின்றீர் இந்தப் போக்கைச் சொல்லி, என்றெண்ணுகிறேன்.

பானுசேனன், லீலாதரன், கிரிஜாநாதன் வருகின்றனர்.

சா. ஐயா, உங்களையெல்லாம் கண்டது, இன்று சுதினம்.

பா. எங்களுக்கும் அப்படியே. எப்பொழுது நாம் எல்லாம சந்தோஷமாய்க் காலம் கழிப்பது? எந்தச் சமயம் சொல்லுங்கள்? வர வர உங்களைக் காண்பதே கடினமா யிருக்கிறதே!—இப்பொழுதே போகவேண்டிய தவசியமா?

சா. உங்களுக்குச் சாவகாசமாய் யிருக்கும் சமயம் பார்த்து எங்களுக்குச் சாவகாசத்தை உண்டுபண்ணிக்கொள்கிறோம் உம்மைக் காண.

[சாம்பநாதனும், சோமேஸ்வரனும் போகிறார்கள்.]

லீ. ஐயா, பானுசேனரே, அநந்தநாதர் உமக்கு அகப்பட்டு விட்டபடியால் நாங்க ளிருவரும் விடைபெற்றுக்கொள்ளுகிறோம். சாப்பாட்டு வேளையில் நாம் சந்திக்கவேண்டிய இடத்தைப் பற்றி சற்றே கவனிக்க வேண்டுகிறேன்.

பா. நான் உங்களை எப்படியும் சந்திக்கின்றேன்.

கி. என்ன ஒரு மாதிரி யிருக்கின்றீர், அநந்தநாதரே? உலக விஷயங்களைப்பற்றி அதிகமாகப் பாராட்டுகின்றீர் என்று நினைக்கின்றேன். அதிக கவலைப்பட்டு அதைச் சம்பாதிப்பவர் அதன் சுகத்தை யிழப்பார். என் வார்த்தையை நம்பும், நீர் மிகவும் மாறியிருக்கின்றீர்.

அ. கிரிஜாநாதரே, நான் உலகத்தை உலகமெனவே பாராட்டுகின்றேன்—ஓர் நாடக சாலையாக. இதில் ஒவ்வொரு மனிதனும் அவனவன் ஆட்டத்தை ஆடவேண்டும்; என்னுடைய பாகம் சோககர மானது, அவ்வளவே.

கி. ஆனால் ஹாஸ்ய பாகம் என்னுடையதாக இருக்கட்டும். சந்தோஷத்திலும் சிரிப்பிலும் காலம் கழித்தே எனக்கு வயோதிகம் வரட்டும்; துக்கப்பட்டுக்கொண்டே துன்ப மனுபவிப்பதைவிட, மது வுண்டு நான் மதர்த்து வாழ்வேனாக! ஒரு மனிதன் தன்னுடலில் உயிரிருக்கும்பொழுதே சிலையில் செதுக்கப்பட்ட தன் பாட்டனாரின் பிம்பத்தைப்போல் உட்கார்ந்திருப்பானேன்? கண் விழித்த வண்ணம் உறங்குவானேன்? சுடுசுடுத்த முகத்துடன் சும்மா இருந்து சோகையை வரவழைப்பானேன்? அநந்தநாதரே, நான் உமக்கொன்று சொல்லுகிறேன். உம்மீதுள்ள பிரீதியால் இதைச் சொல்லுகின்றேன். இவ்வுலகத்தில் சிலர் இருக்கிறார்கள், அவர்கள் பாசி படர்ந்த அசைவற்ற தடாகங்களைப்போல் தங்கள் முகத்தை வைத்துக்கொண்டு, ஆழ்ந்த அறிவும் அளவற்ற ஞானமும் அதிக புத்தி கூர்மையுமுடையவரென்று மண்ணுலகத்தோர் மதித்திட விரும்பி வேண்டுமென்று மௌனம் சாதிக்கின்றனர். அவர்களைப் பார்த்தால் "நான்முற்று முணர்ந்த மௌனி, நான் வாயைத் திறந்தால் நாயும் குலைக்க லாகாது" என்று கூறுவதுபோலிருக்கும். அநந்தநாதரே, இம்மாதிரி மனிதரை நான் நன்கு யறிவேன். பேசா திருப்பதினாலேயே அவர்கள் பேரறிவாளரென மதிக்கப்படுகிறார்கள். வாயைத் திறந்தால் அவர்கள் புல்லறிவாளரெனப் பூவுல கெங்கும் பிரசித்தமாகும். இதைப்பற்றி இன்னும் கூறுவேன் உம்மிடம் வேறொரு சமயம். நீர் இப்பொழுது இம்மாதிரியாய்ச் சோகை பிடித்தவன் போலிருந்து சுத்த மூடர் பெற விரும்பும் பட்டப் பெயரைப் பெற முயல வேண்டாம்.—லீலாதரரே, வாரும் நாம் போவோம்.—நீர் சுகமாய் இரும் அதுவரையில்; மத்தியான போஜனம் கொண்டபின், மற்றப் போதனையையும் கூறி முடிக்கின்றேன்.

லீ. சரி, ஆனால் மத்தியான போஜன காலம்வரையில் உம்மை விட்டுப் பிரிந்திருக்கிறோம். கிரிஜாநாதர் கூறிய மௌன

ச்ரேணிகளில் நானும் ஒருவனாய் இருக்கவேண்டி யிருக்கிறது; ஏனெனில், அவர் என்னவோ எனக்குப் பேச இடம் கொடுக்கப்போகிற தில்லை.

கி. சரி, என்னுடன் இன்னும் இரண்டு வருஷம் உமது காலத்தைக் கழியும், உம்முடைய நாவின் ஒலியையே, உமது செவி யறியாதிருக்கும்படி செய்கிறேன்.

அ. போய் வாரும், இதைக்கொண்டு வாயாடுவதில் வல்லவனாக முயல்கிறேன்.

கி. உண்மையில் மிகவும் சந்தோஷம். ஏனெனில் மௌனமானது நாவுலர்ந்த நரனிடத்தும், நாணய மற்ற நாரியிடத்துமே சோபிக்கத் தக்கது.

[லீலாதரன், கிரிஜாநாதன் போகிறார்கள்.]

அ. அவன் கூறியதில் ஏதாவ திருக்கின்றதா ?

பா. வீண் வார்த்தையாடுவதில் வாணீபுர முழுவதிலும் கிரிஜாநாதனுக்கு ஒப்பானவர் ஒருவரு மில்லை. அவன் நியாயத்தை அறியவேண்டில், இரண்டு மரக்கால் தவிட்டில் இரண்டு அரிசியைத் தேடிக் கண்டுபிடிப்பதுபோல் பிரயாசைப்படவேண்டும், நாள்முழுவதும் நாடிக் கண்டுபிடிக்கவேண்டும் ; அங்ஙனம் கண்டுபிடித்தாலோ, கஷ்டத்திற்குக் கூலியாகாது.

அ. சரி, அதிருக்கட்டும். எந்தத் தேவியையோ தரிசிக்கவேண்டி இரகசியமாய் யாத்திரை போகவேண்டுமென்று பிரமாணம் செய்திருக்கிறாயே, அது யார் அது? அவளைப்பற்றி இன்று என்னிடம் கூறுவதாக வாக்களித்தனை யல்லவா ?

பா. என் அற்ப வரும்படிக்கு அமைந்தபடி வாழாது, ஆடம்பரமாய்ச் செலவிட்டு என் ஆஸ்தியை அதிகமாய் அழித்திருக்கிறேன் என்பது, அநந்தா, நீ அறியாத விஷயமன்று. அச் செல்வாக்கினின்றும் நீங்கி, செலவைக் குறைத்து வாழவேண்டி யிருக்கின்றதே என்று இப்பொழுது நான் சிந்தைப்

படவில்லை. கணக்கின்றிச் செலவழித்ததினுல் உண்டான பெருங் கடன்களினின்றும், கௌரமாய் என்னை மீட்டுக்கொள்வதே, எனக் கிப்பொழுது பெருங் கவலையாம் அநந்தா, உனக்கே நான் அதிகமாய்க் கடன்பட் டிருக்கிறேன், பணத்திலும் பிரீதியிலும்; என்மீ துனக் குள்ள பிரீதியானது, நான் கொடுக்கவேண்டிய கடன்களை ஒழித்து நான் கடைத்தேறுவதற்குச் செய்துள்ள யோசனைகளையும் சூழ்ச்சிகளையும், உன்னிடம் வெளியிடலாமென்று என்னை நம்பும்படிச் செய்கிறது.

அ. பானுசேனு, உன்னை நான் வேண்டுகிறேன், உடனே அதை எனக்குத் தெரிவி; உன்னை எப்பொழுதும் நான் மதிப்பது போலவே, அதையும் நான் கௌரவமாய் மதிக்கக்கூடு மாயின், என் செல்வமும், நானும், என்னுடைய சர்வ ஆஸ்தியும், உன் ஆபத்திற் குதவ அடிமைப்பட்டிருக்கின் றன வென்று உறுதியாய் நம்பு.

பா. நான் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பருவத்தில், நான் எய்த ஓரம்பு காணுமற்போக, அதைக் கண்டுபிடிக்க வேண்டி, அதே வேகத்துடன் செல்லும்படியான வேருெரு அம்பை அதே திக்காக கவனத்துடன் எய்து, இரண்டையும் இழக் கத் துணிந்து இரண்டையும் கண்டெடுத்திருக்கின்றேன். நான் இப்பொழுது கூறப்போகின்ற யோசனையும், இவ் வாறே கபட மறியாப் பேதமை யாதலால். பால்யத்தில் நான் செய்ததை உதாரணமாகக் கூறினேன். நான் உனக்குச் செலுத்தவேண்டிய கடன் அதிக மிருக்கிறது, மனம் போன வழி செலவழித்ததினுல் அதனைத் தீர்க்க அசக்தனு யிருக் கின்றேன். முதலில் எய்த அம்பின் பின்பாக, மற்றெரு அம்பை எய்ததுபோல், கொடுத்த கடனுடன் இன்னும் கொஞ்சம் கடன் கொடுப்பையாயின், நான் ஜாக்கிரதையாய்க் கவனித்து, இரண்டு கடன்களையும் ஒன்றாய்க் கழிக்கவாவது கழிக்கின்றேன், இல்லாவிடின் இரண்டாம் முறை கொடுத்

தைத் திட்டும் கொடுத்துவிட்டு, முதற் பட்ட கடனுடனிருக்கின்றேன்.

அ. என்னை நீ நன்று யறிந்திருந்தும் இவைகளை யெல்லாம்பற்றி இவ்வளவு என்னிடம் சுற்று வழியாகக் கூறிக் காலத்தை விருதாவில் கழிப்பானேன்? நீ இவ்வாறு என் சக்தி யுள்ளளவு உனக்கு உதவுவேனோ என்னவோ என்று சந்தேகம் கொள்வது, என்னுடைய ஆஸ்தி முழுவதையும் நீ அழிப்பதைப் பார்க்கிலும், பெருங் குற்ற மிழைப்ப தாகும் எனக்கு; சந்தேக மின்றி, என்னால் செய்யக் கூடுமென்று உன் புத்தியில் என்ன படுகின்றதோ, அதை இந்த க்ஷணம் வாய் திறந்து சொல்; அதைச் செய்து முடிப்பது என் பாரம். ஆகவே, சொல் உடனே.

பா. மணிபுரத்தில் ஓர் கன்னிகை யிருக்கின்றாள், மிகுந்த செல்வவதி, மிகுந்த ரூபவதி; அந்த ரூபத்தினும் மேம்பட்ட ஆச்சரியகரமான குணவதி. சில சமயங்களில் அப் பெண்மணி என்னைத் தன் கடைக் கண்ணினால் காதலோடு பார்த்து தன் கருத்தை யறிவித்திருக்கிறாள். அவள் பெயர் சரோஜினி, மிதிலை மன்னன் புதல்வி ஸ்ரீராமன் மனைவிக்குக் குறைந்தவளல்ல. பார் முழுவதும் அவள் பெருமை பரவியிருக்கின்றது, நான்கு திக்குகளிலிருந்தும் இவளை நாயகியர்கப் பெற நாநிலத்துச் சீமான்களெல்லாம் போய்ச் சேருகிறார்கள். ஜானகியின் பேரழகைக் கேட்டு மன்னர் மன்னரெல்லாம் மிதிலையைச் சேர்ந்ததைப்போல், இக்கட்டழகியைக் கடி மணம் புரியவரும் கனவான்களால், மணிபுரம் மிதிலை ஆயது. அந்தோ, அவர்களுக் கெதிராக நானுமொருவனாக நிற்க, எனக்கு வகை யிருக்குமாயின், நான் வேண்டியதைப் பெற்று பெரும் பாக்கிய சாலி யாவேன் என்பது திண்ணமென்று, என் மனத்தில் ஏதோ தோன்றுகிறது.

அ. என் செல்வமெல்லாம் செறி கடலின்மீ திருக்கின்றதென்பது நீ அறிந்த விஷயமே. என்னிடமோ பணமில்லை, வைத்

துக் கடன் வாங்கப் பொருளு மில்லை; ஆகையால் நீ உடனே புறப்பட்டுப் போய் என் நாணயத்தின்மீது, வாணீபுரத்தில் எவ்வளவு கடன் வாங்க முடியுமோ பார். எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சேகரித்து, மணிபுரம் போய் அந்த சரோஜினியைக் காண உடனே புறப்படுவாய். பணம் கிடைக்கத் தக்க இடத்திற்கு உடனே புறப்பட்டுப் போய் விசாரி. நானு மவ்வாறே செய்கின்றேன். எனக்காகவென்று சொல்லி வாங்கினும் சரிதான், என் ஜாமீன்மீது வாங்கினும் சரியே, எனக்கொரு ஆட்சேபனையு மில்லை. [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்:—மணிபுரம். சரோஜினியின் வீட்டிலோர் அறை.

சரோஜினியும், நீலகேசியும், வருகிறார்கள்.

ச. உண்மையில் நீலகேசி, என் சிற்றுடலுக்கு இப் பெரிய உலகத்தின்மீது வெறுப் புண்டாயிருக்கிறது.

நீ. என் அம்மணி, உமக்கு எவ்வளவு நற்பாக்கிய மிருக்கின்றதோ அத்தனைத் துர்ப்பாக்கிய மிருக்குமாயின், நீர் அவ்வாறு வெறுப்படைதல் நியாயமாகும். ஆயினும் எனக்குத் தெரிந்தவரையில், அதிகமாய்ப் புசிப்பவர்களும் ஆகார மின்றி வருந்துவோர்களைப்போலவே வியாதிக்கு ஆளாகிறார்கள். ஆகவே, இரண்டு மின்றி நடு நிலையிலிருப்பது சுவல்பமான சுகமன்று; அபரிமிதம் அதி சீக்கிரத்தில் மூப்பை அடைவிக்கும். மிதமா யிருத்தலே நெடுநாள் வாழ்க்கைக்கு அநுகுணமாம்.

ச. நல்ல பழமொழிகள், கேட்பதற்கு அழகா யிருக்கின்றன.

நீ. அதன்படி நடந்தால் இன்னும் அழகா யிருக்கும்.

ச. செய்யவேண்டியது இன்னது என்று அறிவது எவ்வளவு சுலபமோ, அவ்வளவு சுலபமா யிருந்தால் அதன்படி செய்வது, கூரை வீடுகளெல்லாம் குபேரன் மாளிகைகளாகும், குடிசைகளெல்லாம் கோபுரங்க ளாகிவிடும். தான் போதிக்கும் வண்ணம் நடக்கின்றவனே சத்குரு வாவான். நடக்க வேண்டிய ஒழுக்கத்தைப்பற்றி நாலைந்து பேருக்கு நான் உபதேசம் செய்வது சுலபம், அந்த நாலைந்து பெயரில் ஒருத்தியாய், என் உபதேசப்படி நானே நடத்தல்தான் கஷ்டம். அறிவானது, நமது இந்திரியங்களை அடக்குதற்பொருட்டு, கோட்பாடுகளை ஏற்படுத்தலாம். ஆனால் அடக்க முடியா மனதானது, அக் கோட்பாடுகளை யெல்லாம் குதித்துத் தாண்டிப்போம். யௌவனமென்னும் பித்தம் பிடித்த முயலானது, அடக்கியாள விரும்பும் அறிவென்னும் வலைக்குள்கப்படாது மீறிப் போம். ஆயினும் இந்த நியாயங்களெல்லாம் நான் ஒரு கணவனை வரிப்பதற்குப் பிரயோஜனப்படுவன வல்ல:— ஐயோ ! ஈசனே ! நான் வரிப்பதாவது ? விரும்பிய புருஷனை வரிப்பதற்கும், வேண்டாப் புருஷனை வெறுப்பதற்கும் எனக்கென்ன சுதந்தர முண்டு ? உயிரோ டிருக்கின்ற ஒரு பெண்ணின் மனமானது இறந்துபோன அவளது தந்தையின் வாக்கினால் இவ்வாறு கட்டப்பட்டிருக்கின்றது !—நீலகேசி, ஒரு புருஷனை வரிக்கவும் மற்றவர்களை வெறுக்கவும் சுதந்தரமில்லா திருப்பது பெரும் துர்ப்பாக்கிய மல்லவா ?

நீ. உம்முடைய பிதா மிகவும் நற்குணமுடையவர் ; அப்படிப்பட்ட புண்ணியாத்மாக்களுக்கு, அந்திய காலத்தில் மனத்தில் தோன்றுவது தவறாகாது. ஆகவே அவர் ஏற்படுத்திய, பொன் வெள்ளி ஈயத்தா லாகிய இம் மூன்று பெட்டிகளுள், அவர் அர்த்தத்தைத் தெரிந்தெடுப்பவனே, உம்மை மணக்கவேண்டி யிருப்பதால், 'உமது காதலுக்குரிய கணவனன்றி, வேறொருவனும் சரியாகக் கண்டெடுக்க மாட்டான் என்பது திண்ணம். அதிருக்கட்டும்—இப்பொ

பூது உம்மை வரிக்க வந்திருக்கும் சீமான்களைப்பற்றி உமது மனம் எப்படி இச்சை கொண்டிருக்கிறது ?

ச. நீ அவர்களின் பெயரை ஒவ்வொன்ருகச் சொல்லிக்கொண்டு வா. அப்படி நீ சொல்லிக்கொண்டுவரும்பொழுது அவர்களை நான் வர்ணித்துக்கொண்டு வருகிறேன். அந்த வர்ணனையி னின்றும் என் மனத்தி னிச்சையை யறிந்துகொள்.

நீ. முதலில், நேபாளத்து அரச குமார னிருக்கின்ருர்.

ச. அவரா ? அவர் ஒரு குதிரைக்குட்டியே. தன் குதிரையைப் பற்றிப் பேசுவது தவிர வேெருன்றும் அறியார். தன் குதிரைக்குத் தானே லாடம் அடிக்கத் தெரியும் என்பதை, தன் னிடமுள்ள நற் குணங்களில் முக்கியமானதாக மதிக்கிருர். அவர் தாயார் தனித் திருந்த காலத்தில் கருமான் ஒருவன் அரண்மனைக்குச் சென்றிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

நீ. அதற்குப் பிறகு, பாடலீபுரத்துப் பிரபு.

ச. முகத்தைச் சுளிப்பது தவிர ஜகத்தில் வேெருன்றும் செய்வதில்லை அவர். "என்னை விரும்பாவிட்டால், உன்னிஷ்டம்" என்பதுபோல் முகத்தை வைத்துக்கொண்டிருக்கிருர். வேடிக்கைக் கதைகளைக் கேட்கின்ருர், நகைப் பென்பதைக் காணேம் முகத்தில் ; இளம்வயதிலேயே இப்படி ஒழுங்கற்ற சோகத்தோ டிருப்பவர், முது வயதில் முற்றும் துறந்த வேதாந்தி யாவர் என்று அஞ்சுகிறேன். இவ் விருவரிலொருவரை நான் விவாகஞ்செய்துகொள்வதைவிட, இடு காட்டிலுள்ள பிரேத மொன்றை மணப்பேன். இவர்களிட மிருந்து ஈசன் என்னைக் காப்பாற்றுவாராக !

நீ. பஸ்சிமதேசத்துப் பிரபு லாவண்யருக்கென்ன சொல்லுகிறீர்?

ச. ஈசன் மனிதனுக அவரைச் சிருஷ்டித்தார் ; ஆகவே நாமும் அவரை மனிதனுகப் பாவிப்போம். உண்மையில் பரிஹாசம் செய்வது பாபமென நான் அறிவேன். ஆயினும் இவரை

ஐயோ! நான் என்னென் றுரைப்பது? குதிரைப் பயித்தியத்தில் நேபாளத் தரச குமாரனுக்கு மேம்பட்டிருக்கின்றார். கடு கடுத்த முகத்திலோ, பாடலீ புரத்துப் பிரபுவைத் தோற்கடிக்கிறார். எல்லா மனிதருடைய துர்க்குணங்களும் குடிகொண் டிருக்கின்றன அவரிடம். ஆயினும், அவரை ஒரு மனிதனாகக் கூறக்கூடாது. குயில் பாடினால் கூத்தாட ஆரம்பிக்கின்றார்; தன்னிழலுடன் போர்புரிவார். அவரைக் கலியாணம் செய்துகொண்டால், இருபது பெயரை நான் கலியாணம் செய்துகொண்டதாகும். அவர் என்னை வெறுத்தாலும் நான் பொறுப்பேன். அவர் என்மீது பித்தம்பிடித்த படி காதல் கொண்டாலும், அதற்குப் பிரதி செய்ய வகையறியேன்.

நீ. சிங்கள தேசத்திலிருந்து வந்த இளஞ்சீமான் பற்குணருக்கென்ன சொல்லுகின்றீர்?

ச. அவரிடம் நான் ஒன்றும் கூறுவ தில்லை என்று உனக்குத் தெரியுமே? அவர் பேச்சு எனக்குத் தெரியாது, என் பேச்சு அவருக்குத் தெரியாது. அவருக்குத் தமிழ்தெலுங்கு கன்னடம் மலையாளம் ஒன்றுந் தெரியாது. எனக்கோ அவரது சிங்கள பாஷையில் ஒரு பதமும் தெரியாதென்று, நீயே நியாயஸ்தலத்தில் நின்று சத்தியம் செய்வாய். ஆள், உருவத்தில், ஒழுங்காய்தா னிருக்கிறார். ஆயினும், ஐயோ! ஊமையுடன் யார் வார்த்தையாடுவது? அவருடைய உடை என்ன அலங்கோலமா யிருக்கிறது பார்த்தனையா? அவர் அங்கியை ஐதராபாத்திலும், தலை குட்டையைத் தக்காணத்திலும், அங்கவஸ்திரத்தை வங்க தேசத்திலும், நடை யொழுக்கங்களை நாநு தேசங்களிலும் விலைக்கு வாங்கியிருக்கவேண்டும்.

நீ. அவரது தேசத்துக்குப் பக்கத்துள்ள சகேதநாட்டுப் பிரபுவைப்பற்றி என்ன எண்ணுகின்றீர்?

ச. அயலாரிடத்து அவருக்கு அன்பு அதிகமுண்டு என்றே, சிங்கள தேசத்துச் சீமானிடமிருந்து கன்னத்தில் ஒரு அறை

கடன் வாங்கி இருக்கிறார்; இப்பொழுது எனக்குச் சக்தி யில்லை, சக்தி வந்தவுடன் கடனைத் தீர்க்கின்றேன், என்று சபதம் செய்திருக்கிறார். அதற்கு ஜாமீனாக இருந்து, பஸ்சிம நாட்டுப் பிறபு மற்றொரு கன்னத்தில் ஒரு அறை முத்திரை வைத்திருக்கிறார் என எண்ணுகின்றேன்.

நீ. சௌராஷ்டிரத்தை யாளும் சேரமான் மருகனைப்பற்றி என்ன எண்ணுகின்றீர்?

ச. அவர் காலையில் சாதாரணமா யிருக்கும்பொழுதே, கடு வெறுப்பா யிருக்கின்றது. மது பானம் செய்தபின் மத்தியானத்தில் யோசிக்க வேண்டியதே யில்லை. நல்ல குணத்திலிருக்கும்போதே நர ஜன்மத்துடன் சேர்க்க லாகாது; கெட்ட குணம் வந்துவிட்டாலோ, காட்டு மிருகத்திற்கும் கடைப்பட்டவர்தான். எனக்கு எப்படிப்பட்ட கேடுகெட்ட ஸ்திதி சம்பவித்தபோதிலும் அவர் கையிற்படாதபடி கடைத்தேறும் உபாயத்தைக் கண்டுபிடிப்பேனெனக் கோருகிறேன்.

நீ. ஒருவேளை பெட்டிகளுள் தெரிந்தெடுப்பதாகக் கூறி, சரியான பெட்டியைக் கோருவா ராயின், அப்பொழுது நீர் அவரைக் கணவனாக ஒப்புக்கொள்ளாவிட்டால், உமது தந்தையின் வாக்கைத் தட்டியதாகுமே?

ச. ஆகவே அப்படிப்பட்ட கெடுதி ஒன்றும் நேரிடா வண்ணம், தவறான பெட்டி யொன்றின்மீது, ஒரு பெரிய புட்டி கொழும்பு சாராயத்தை வை. அந்தப் பெட்டிக்குள் பிசாசே யிருந்தாலும், மேலே அந்தப் புட்டியைக் காண்பாராயின் அதைக் கோருவார் என்பதற்குச் சந்தேக மில்லை. இப் பஞ்சையை மணம் புரிவதைவிடப் பாரில் நான் வேறு எதையும் செய்வேன்.

நீ. அம்மா, இவர்களில் எவரையாவது மணக்கவேண்டி வருமே என்று தாம் ஒன்றும் அஞ்ச வேண்டிய தில்லை. அவர்கள் தங்களது தீர்மானங்களை எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள்;

அதென்னவென்றால், உம்முடைய தகப்பனார் ஏற்படுத்திய இந்தப் பெட்டிகள் பரிசோதனையா லன்றி, வேறுவிதத்தால் உம்மை விவாகஞ்செய்துகொள்வது அசாத்தியமானால், உம்மைத் தொந்தரவு செய்யாது பேசாமல் வந்த வழி பார்த்து, தங்கள் தங்கள் வீடு போய்ச் சேரவேண்டு மென்பதே.

ச. ஔவையாரைப்போல், அத்தனைக் கிழவியானாலும், என் தகப்பனார் மனப்படி என்னை யாராவது மணம் புரிந்தா லொழிய, கன்னிகையாகவே என் காலத்தைக் கழித்து மரிப்பேன். இவர்களெல்லாம் அவ்வளவாவது அறி வுள்ளவர்களா யிருக்கின்றார்களே, அது எனக்கு மிகவும் சந்தோஷம். அவர்களில் ஒவ்வொருவரும் எப்படியாவது தொலைந்தால் போதுமென் றிருக்கின்ற தெனக்கு.—சுவாமியின் கடாட்சத்தினால் சவுக்கியமாய்ச் சீக்கிரம் வீடுபோய்ச் சேருவார்களாக!

நீ. அம்மணி, உம்முடைய தந்தையின் காலத்தில், வாணீபுரத்திலிருந்து ஒரு பிரபு இங்கு வந்திருந்தாரே, ஞாபக மிருக்கின்றதா? நல்ல வித்வான், சுத்த வீரன், மகத தேசத்து மந்திரியுடன் வந்திருந்தாரே?

ச. ஆம், ஆம், அவர் பெயர் பானுசேனர்,—அப்படித்தான் அவர் அழைக்கப்பட்டதாக எனக்கு ஞாபகம்.

நீ. ஆம், உண்மைதான். அம்மணி, நான் என் பேதைக் கண்களைக் கொண்டு பார்த்தவர்களுக்குள், அவர்தான் கட்டழகிக்கேற்ற காதலன்.

ச. அவர் எனக்கு நன்றாய் ஞாபக மிருக்கிறது, நீ கூறிய புகழ்ச்சிக்குத் தகுந்தவரே.

ஒரு வேலையாள் வருகிறான்

என்ன இப்பொழுது? என்ன சமாசாரம்?

வே. புதிதாய் வந்த நான்கு பெயரும் தம்மிடம் விடைபெற்றுச் செல்லக் காத்துக்கொண் டிருக்கின்றார்கள். அன்றியும் ஐந்

தாவது ஆசாமி மறவ நாட்டின் மன்னனிடமிருந்து ஒரு தூதன், தன் எஜமானன் தம்மைக்காண இன்றிரவு வருவதாகச் சேதி கொண்டுவந்திருக்கிறான்.

ச. மற்ற நால்வருக்கும் எவ்வளவு மன சந்துஷ்டியுடன் போகும்படி விடையளிக்கின்றேனோ அவ்வளவு சந்தோஷத்துடன் இந்த ஐந்தாவது புருஷனை வரவழைப்பேனாயின், அவர் வருகைக்காக நான் சந்தோஷப்பட வேண்டியதே. தேவர்களின் குணமும் ராட்சதர்களின் முகமு முடையவரா யிருந்தால், அவர் எனக்குக் கணவனாவதைவிட ஆசாரியனாயிருக்கும்படி கோருவேன்—வாராய், நீலகேசி.—அடே, நீ போ முன்பு.—ஒரு காதலனை வெளியில் தள்ளி, கதவைத் தாளிடுமுன் மற்றொருவன் வந்து கதவைத் தட்டுகிறான்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது

மூன்றாம் காட்சி

இடம்.—வாணீபுரம் வணிகர் வீதி.

பானுசேனன், ஷாம்லால் வருகிறார்கள்.

ஷா. மூவாயிரம் பொன்.—சரி.

பா. ஆம், ஐயா,—மூன்று மாதத்திற்கு.

ஷா. மூன்று மாதத்திற்கு.—சரி.

பா. அதற்காக—நான் சொன்னபடி, அநந்தநாதர் ஜாமீனாக இருப்பார்.

ஷா. அநந்தநாதர் ஜாமீனாக இருப்பார்.—சரி.

பா. எனக்கு உதவி புரிவீரா ? எனக்குச் சந்தோஷம் உண்டுபண்ணுவீரா ? உமது உத்தரம் நான் அறியலாமா ?

ஷா. மூவாயிரம் பொன், மூன்று மாதத்திற்கு, அதற்காக அநந்த நாதர் ஜாமீன்.

பா. அதற்கு உமது பதில் ?

ஷா. அநந்தநாதர், நல்ல மனுஷ்யன் தான்.

பா. அப்படி யல்லவென்று ஏதேனும் அவதூறு கேள்விப்பட்டிருக்கிறீரா ?

ஷா. ஓ! இல்லை, இல்லை, இல்லை, இல்லை!—நான் நல்ல மனுஷ்யன் என்று சொன்னதற்கு அர்த்தமென்னவென்றால் அவர் பொறுப்பான ஜாமீன் என்று நான் எண்ணுவதாக நீர் அறியும்பொருட்டே.—ஆயினும் அவருடைய சொத்துகளெல்லாம் கொஞ்சம் சந்தேகத்திற் கிடமானது. அவருடைய ஒரு நாவாய் திரிபுரத்துக்குப்போயிருக்கிறது. இன்னொன்று வங்காளம் போயிருக்கிறது. அன்றியும் ரேவு துறையில் நான் அறிகிறபடி, மூன்றாவது நாவாய் நாவல் தீபத்திலும் நான்காவது சிங்களத்திற்கும் போயிருக்கின்றது, இன்னும் மற்றப் பொருள்களை யெல்லாம் ஆங்காங்கு இறைத்திருக்கின்றார் யோசனையில்லாமல். ஆயினும் மரக்கலங்களெல்லாம் மரத்தாலானவை, மாலுமிகளோ மனிதர்கள் தான்; நிலத்திலும் எலிக ளிருக்கின்றன, சமுத்திரத்திலும் எலிகளிருக்கின்றன ; பூமியிலும் திருடர்களிருக்கிறார்கள், தண்ணீரின் பேரிலும் திருடர்களிருக்கிறார்கள்; அதாவது கப்பல் கொள்ளைக்காரர்களிருக்கிறார்கள்; இதல்லாமல் நீரினால் அபாயம், காற்றினால் அபாயம், கற்பாறைகளினால் அபாயம், எல்லாமிருக்கின்றன. இருந்தாலும் அந்த மனுஷ்யன் பொறுப்பான ஜாமீன் தான், மூவாயிரம் பொன்—அவருடைய பத்திரத்தின்மீது கடன் கொடுக்கலாம் என்று எண்ணுகிறேன்.

பா. நிச்சயமாகச் செய்யலாம், சந்தேக மின்றி.

ஷா. எனக்கு நிச்சய மாகவேண்டும் சந்தேகமின்றி, அப்படிச் செய்யலாமென்று நிச்சயிக்கும் பொருட்டே நான் இப்

பொழுது நன்றாக யோசிக்கவேண்டும்:—நான் அநந்தநாத ருடன் நேரிற் பேசக்கூடுமோ ?

பா. இன்றைத்தினம் எங்களுடன் போஜனம் செய்யப் பிரிய மிருக்குமாயின்.

ஷா. ஆமாம், வந்து பன்றியின் மாமிசத்தை முகர்வதற்கு ! உங்க ளுடைய சுவாமி மூன்றாவது அவதாரம் எடுத்தாரே, அதன் இறைச்சியைத் தின்பதற்கு ! நான் உங்களிடம் விலைக்கு வாங்குவேன், உங்களுக்கு விற்பேன், உங்களோடு பேசு வேன், உங்களோடு நடப்பேன், இன்னும் இவைபோன் றனவெல்லாம் செய்வேன். ஆனால் உங்களோடு புசியேன், உங்களுடன் குடியேன், உங்களுடன் தொழேன்—என்ன விசேஷம் ஐயா, ரேவில் ? யார் அது, இங்கு வருகிறது ?

அநந்தநாதன் வருகிறான்.

பா. இவர்தான் அநந்தநாதர்.

ஷா. [தன்னுள்] இச்சகம் பேசித் திரியும் இறை தண்டுவோனைப் போன்ற இவன் முகத்தைப்பார் ! இந்து மதஸ்த னாதல் பற்றி இவனை வெறுக்கின்றேன் நான். இதைப்பார்க்கிலும் இவனை அதிகமாய் வெறுப்பதற்கு இன்னொரு காரண முண்டு ; புத்தி ஹீனத்தினால், வட்டிவாங்காமல் கடன் கொடுத்து, வாணீபுர மெங்கும் நாங்கள் செய்கிற வட்டி லாவாதேவியைப் பாழாக்குகின்றான். ஒருதரம் இவன் குடுமி என் கையிலகப்பட்டால், எத்தனையோ நாளாயிருக்கும் என் துவேஷத்தை யெல்லாம் திருப்தியாய்த் தீர்த்துக்கொள் வேன். எங்களுடைய பரிசுத்தமான ஜாதியார்மீது துவே ஷம் பாராட்டுகின்றான். அன்றியும் நான் கஷ்டப்பட்டு சம்பா திப்பதை வட்டி யென்று பெயரிட்டிழித்து, என்னையும் என் வியாபாரத்தையும், எல்லோர் முன்னிலையிலும், அனேக வியாபாரிகள் ஒருங்கு சேரும் பயிரங்கமான இடங்களிலும்,

ஏளனம் செய்கின்றான்.—இவனை நான் சும்மா விட்டேனுயின் என் ஜாதியெல்லாம் நாசமாய்ப் போகட்டும்!

பா. ஷாமலால், கேட்கிறதா ?

ஷா. தற்காலம் எனனிடத்திலுள்ள சொத்தைப்பற்றி கணக்கிட்டுப் பார்க்கிறேன். இப்பொழுது எனக்கு ஞாபகமிருக்கிற வரையில், உடனே மூவாயிரம் பொன் மொத்தமாய்ச் சேகரிக்க என்றால் முடியாது. ஆயினும் அதைப்பற்றி என்ன ? எங்கள் ஜாதியான் தூப்லால் என்னும் செல்வவந்தனுகிய ஜைனன், எனக்குதவுவான்.—ஆயினும் கொஞ்சம் பொறும்! எத்தனை மாதத்திற்கு வேண்டும் என்று விரும்புகிறீர்? [அநந்தநாதனைப் பார்த்து] மஹாப்பிரபு, க்ஷேமமாயிருப்பீராக! பிரபு, தங்களைப்பற்றிதான் இப்பொழுது பேசிக்கொண்டிருந்தோம் கடைசியில் நாங்கள்.

அ. ஷாம்லால், நான் வட்டிக்காக கடன் கொடுப்பதுமில்லை வாங்குவதுமில்லை யென்றாலும், எனது நண்பனுடைய அவசியமான குறையைத் தீர்க்கும் பொருட்டு, என் ஏற்பாட்டினின்றும் வழுவலானேன்.—உனக்கெவ்வளவு வேண்டுமென்பதைத் தெரிவித்தனையா இவனுக்கு ?

ஷா. ஆம், ஆம்; மூவாயிரம் பொன்.

அ. மூன்று மாதத்திற்கு.

பா. அதை மறந்தேன்.—மூன்று மாதத்திற்கு.—நீர் அப்படித்தான் சொன்னீர். சரி ஆனல், உமது ஜாமீன்.—ஏதோ பார்க்கின்றேன்.—ஆனல் ஒரு வார்த்தை கேட்பீராக; நீர் வட்டிக்காக கடன் கொடுப்பது மில்லை வாங்குவது மில்லை யென்று கூறினதாக எனக்கு ஞாபகம்.

அ. ஆம், என் வழக்கமல்ல அது.

ஷா. திகம்பரர் தன்னுடைய மாமன் ஸ்வேதாம்பரருடைய ஆடு மாடுகளை மேய்த்தபொழுது—இந்த திகம்பரர் பரிசுத்தமான

தீர்த்தங்கரருடைய மூன்றும் கால்—ஆம் மூன்றுங் கால் தான்.—

அ. அவரைப்பற்றி என்ன ? அவர் வட்டி வாங்கினரா ?

ஷா. இல்லே; வட்டி வாங்க இல்லே. அதாவது, நீங்கள சொல்லு கிறபடி, நேராக வட்டி வாங்கவில்லே. அவர் செய்ததைக் கவனியும் நன்றாய். தன் வச மிருந்தபொழுது, அந்த ஆடு மாடுகள் போட்ட குட்டிகளே யெல்லாம் எடுத்துக்கொண்டார் அபிவிர்த்தி யடைவதற்கு இது ஒரு மார்க்கம் ; அவருக்கு அருகன் கருணேயு முண்டாயிற்று. பொருளே விர்த்தி செய்தல் நன்மையே, திருட்டு வழியாய் அங்ஙனம் செய்யா திருப்பார்களாயின்.

அ. அத் திகம்பரர் தான் மேற்கொண்ட ஊழியத்தின் கூலிக்காக அதைப் பெற்றார். உங்களுடைய வேத சாஸ்திரத்தில் வட்டி வாங்குவதற்கு இது ஒரு நியாயமாக எடுத்துக் கூறியிருக்கின்றதா என்ன ? அல்லது உமது வெள்ளியும் பொன்னும் ஆடு மாடுகளா, தெய்வச் செயலால் விர்த்தியாவதற்கு?

ஷா. அது எனக்குத் தெரியாது, ஆடு மாடுகள விர்த்தியாவதைப்போல் அத்தனே வேகமாய் விர்த்தியாகும்படி செய்கிறேன் அவைகளே நான்.—ஐயா, ஆயினும் நான் சொல்வதைக் கவனியும்.—

அ. பார்த்தனேயா பானுசேனு, இந்த நியாயத்தை ? தர்ம சாஸ்திரங்களேப் பேய்களும் எடுத்துரைக்கும் தமது காரியத்தின் பொருட்டு, தூயதான வேத வாக்கியத்தைத் தனக் கத்தாட்சியாக எடுத்துக் கூறும் துராத்மாவானவன், நகை முகமுடைய பாதகனேப்போன் றிருக்கிருன்,—வெளிக்கு அழகாயும், உள்ளே அழுகியு மிருக்கும் அத்திப் பழத்தை ஒத்திருக்கின்றுன். கபடமானது மேலுக்கு என்ன நல்ல வேஷம் தரிக்கின்றது !

ஷா. மூவாயிரம் பொன்—பெருத்த தொகை யாகும். பன்னிரண்டு மாதங்களில் மூன்று—என்ன வட்டி யாகிறதோ பார்க்கிறேன்.

அ. என்ன, ஷாம்லால் ? எங்களுக் குதவுவையா ?

ஷா. மஹாப்பிரபு, அநந்தநாதரே, பன் முறை பயிரங்கமாகப் பல ரறிய ரேவு துறையில் என்னை, என் பணத்தின்பொருட்டும், நான் வாங்கும் வட்டியின்பொருட்டும், வைதிருக்கின்றீர். அந்த வசை மொழிகளையெல்லாம் பொறுமையாகப் பொறுத்திருக்கின்றேன் பதில்பேசாது. அந்தப் பொறுமை எங்கள் ஜாதியாருக்கு ஓர் அறி குறியாம். என்னை நாஸ்திகனென்றும், கழுத்தை யறுக்கும் பாதகனென்றும் திட்டியிருக்கின்றீர் ; என்னுடைய ஜைன ஆடையின்மீது காரி யுமிழ்ந்திருக்கின்றீர். எதற்காக ? எல்லாம் என் பொருளை என்னிச்சைப்படி உபயோகிப்பதற்காக ! இப்பொழுதோ, உங்களுக்கு என் உதவி வேண்டியிருப்பதாகக் காண்கின்றது. ஆகவே அதற்காக என்னிடம் வருகின்றீர். வந்து, “ ஷாம்லால், எங்களுக்குப் பணம் வேண்டும்.” என்கிறீர்,—அங்ஙனம் சொல்கிறீர்—நீர், என் தாடியின்மீது காரி யுமிழ்ந்து, ஏழை நாயை உதைத்து உமது வாசற்படிக்கு வெளியே தள்ளுவதுபோல் என்னை உதைத்த, நீர், உங்களுக்குப் பணம் வேண்டும். நான் உங்களுக் கென்ன பதில் சொல்லவேண்டும் ? “ நாயிடம் பணமேது ? கேடுகெட்ட நாய் மூவாயிரம் பொன் கடன் கொடுக்குமா ?” என்று சொல்லவேண்டாமா ? அல்லது முழந்தா ளிட்டுப் பணிந்து, அடிமையைப்போல் மெல்லிய வார்த்தைகளால், வாய் பொத்தி, மிருதுவாய் தாழ்மையுடன், இவ்வாறு சொல்வதா ? “ கனம்பொருந்திய ஐயா, சுவாமி ! போன புதன் கிழமை என்மீது காரி யுமிழ்ந்தீர் ! அன்றைத்தினம் என்னை உதைத்துத் தள்ளினீர் ! இன்னொரு முறை என்னை நாயென் றழைத்தீர்! இத்தனை மரியாதையெல்லாம் நீர்

எனக்குச் செய்ததற்காக, இவ்வளவு பணத்தை உமக்குக் கடன் கொடுக்கிறேன்," என்று கூறுவதா ?-

அ. மறுபடியும் நானுன்னை அவ்வாறு வைது, காரி யுமிழ்ந்து காலா லுதைத்தாலும் உதைப்பேன் ; நீ இந்தப் பணத்தைக் கடனாகக் கொடுப்பதானால், உன் சிநேகிதருக்குக் கொடுப்பதுபோல் கொடாதே.—எந்த மனிதன் தன் சிநேகிதனுக்குத் தன் பணத்தைக் கடன் கொடுத்து வட்டி வாங்கி அதை விர்த்தி செய்தான் ?—உன்னுடைய பகைவனுக்குக் கடன் கொடுப்பதுபோல் கொடு. ஏனெனில், அவன் தவறிப்போனால் உன் மனத்தில் கஷ்ட மில்லாமல் அபராதத்தை அவனிடம் வசூல் செய்யலாம் நீ.

ஷா. ஏனையா ! இதோ பாரும்.—இத்தனைக் கோபமேன் உமக்கு ? நான் உங்களோடு சினேகமாய், உங்கள் பிரீதியைப் பெற்று என்னை இழிபடச் செய்த அவமானத்தை யெல்லாம் மறந்து, உங்கள் தற்காலக் குறையைத் தீர்க்க விரும்புகிறேன் ; என் பணத்திற்கு எனக்கு வட்டி அரைக் காசும் வேண்டாம் என்று சொன்னால், நீர் கேட்கமாட்டேனென்கிறீரே. நான் செய்யக் கருதிய பட்சம் இதுவே.

பா. இது பெரிய உபகார மாகும்.

ஷா. இந்த உபகாரம் எப்படியும் செய்வேன் ; வாருங்கள் என்னுடன், கணக்கனிடம் போவோம். அங்கு நீர் ஒரு வென்னிலைப் பத்திரம் எழுதிக் கொடும் ; அதில் வேடிக்கையார்த்தமாய், " இன்ன தினத்தில், இன்ன இடத்தில், ஏற்பாட்டின்படி அதில் கண்ட தொகை அல்லது தொகைகளை நீர் எனக்குத் திருப்பிக் கொடுக்காவிட்டால், அதற்கு அபராதம் உம்முடைய உடலினின்றும் எனக் கிஷ்டமான இடத்தில் சரியாக ஒரு ராத்தல் மாமிசத்தை நான் அறுத்து எடுத்துக் கொள்ளக்கடவேன் " என்று எழுதுவோம்.

அ. சரிதான், அப்படியே ஆகட்டும். அந்தப் பத்திரத்தில் கையெழுத்து செய்து, மாறுபாடியிடத்தில் மட்டிலாக் கருணை உளதெனக் கூறுகிறேன்.

பா. இம்மாதிரி பத்திரத்தை எனக்காக நீ எழுதிக் கொடுக்க வேண்டாம். அதைவிட என் கஷ்டத்துடன் எப்படியாவது நான் வாழ்வேன்.

அ. என்ன! ஏன் பயப்படுகின்றாய், பானுசேனா? நான் அபராதத்திற்கு ஆளாகமாட்டேன். இன்னும் இரண்டு மாதங்களுக்குள்—அதாவது இந்தப் பத்திரத் தவணைக்கு ஒரு மாதம் முன்னதாகவே—இந்தப் பத்திரத் தொகைக்குப் பதின் மடங்கு என்னிடம் வந்துசேரவேண்டி யிருக்கிறது.

ஷா. ஐயோ! அருகக் கடவுளே! அருகக் கடவுளே! இந்த ஹிந்துக்கள் தான் என்ன மனிதரோ! இவர்கள் ஒருவரை யொருவர் மோசம் செய்கிற வழக்கம், உலக மனத்தையும் அவ்வாறே சந்தேகிக்கும்படி கற்பிக்கிறதே.—ஐயா, இதை மாத்திரம் எனக்குக் கொஞ்சம் சொல்லும்படி வேண்டுகிறேன். அவர் தவணைப்படி கொடாமல் தவறிப்போனால், இந்த அபராதத்தை வசூல் செய்து, நான் அடையும் பலன் என்ன? ஒரு ராத்தல் நர மாமிசம், மனுஷ்யனிடமிருந்து எடுக்கப்பட்டது, அவ்வளவு ஆடு மாடுகளின் இறைச்சிக்குச் சமானமாகுமா? அவ்வளவு விலைதான் பெறுமா? நான் இந்தச் சினேகம் பாராட்டுவது, அவருடைய நன் மதிப்பைப் பெறும் பொருட்டே. அவர் அதற் குடன்பட்டால், சரி, இல்லாவிட்டால், உத்தரவளியும். நான் வருகிறேன். நான் விசுவாசம் காட்டவந்ததற்காக, என்னை வைது அனுப்பாதீர்.

அ. சரிதான், ஷாம்லால் நானவ்விதமே பத்திரம் எழுதித் தருகிறேன்.

ஷா. ஆனால் உடனே புறப்பட்டு, கணக்கனிடம் வந்து சந்தியும் என்னை; இந்தப் பரிஹாசப் பத்திரத்தை எழுதிவைக்கும்

படி கட்டளை யிடும். நான் நேராகப் போய்ப் பணத்தைப் பைகளில் கட்டிக்கொண்டு, ஒரு செலவாளியான துஷ்டப் பையனிடம் ஒப்பித்த என்வீட்டைப் பார்த்துவிட்டு, உடனே உங்களிடம் வந்து சேர்கிறேன்.

அ. தயையுடைய மாறுபாடியே, போய்வா சீக்கிரம்.

[ஷாம்லால் போகிறான்.]

இந்த ஜைனன் சீக்கிரத்தில் ஹிந்து வாவான்; இவ்வளவு தயை பிறந்துவிட்டதே இவனிடம்.

பா. வாக்கில் நயமும் மனத்திற் கொடுமையும் எனக்குத் திர்ப்தியாயில்லை.

அ. வா, வா : இதி லொன்றும் பய மில்லை; என் கப்பல்கள் தவணைக்கு ஒரு மாதம் முன்பாக வந்து சேரும்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது

இரண்டாம் அங்கம்

முதற் காட்சி

இடம்—மணிபுரம். சரோஜனியின் வீட்டிலோர் அறை.
வாத்தியகோஷம்,

மார்த்தாண்டசேதுபதி தன் பரிவாரங்களுடன் வருகிறான்.
நீலகேசி முதலிய பரிவாரங்கள் சூழ
சரோஜனி வருகிறாள்.

மா. ஆயிரங் கிரணங்களுடன் பிரகாசிக்கின்ற ஆதித்யன் அருகாமையில் உதித்து வளர்ந்தமையால் உண்டான எனது நிறத்தைக் குறித்து, நீ என்னை வெறுக்கவேண்டாம். பரிதியின் கிரணங்கள் பனிக்கட்டிகளையும் உருக்கச்செய்யச் சக்தியில்லா திருக்கிற இமய மலைச் சாரலிற் பிறந்த அழகனை

வரவழை; உன்மீதுகொண்ட ஆசையின்பொருட்டு இரு வரும் எங்கள் இரத்தத்தைக் குத்தி எடுக்கின்றோம்; அவனது இரத்தமோ என்னுடைய இரத்தமோ, அதிக மாய்ச் சிவந்தது என்று நீயே பார். பெண்கள் நாயகமே, உனக் கொன்றுரைக்கிறேன் நான்; எனது இவ் வடிவைக் கண்டு எப்படிப்பட்ட வீரர்களும் பயந்திருக்கின்றனர். உன் மீது எனக்குள்ள ஆசையின்மீ தாணைப்படி சொல்லுகின் றேன். எங்கள் தேசத்துச் சிறந்த களங்க மற்ற கன்னியர்க ளெல்லாம் இதைக் கண்டு காதல் கொண்டிருக்கின்றனர். அன்றியும், பெண்ணரசே, உன் மனத்தைக் கவர வன்றி என் நிறத்தை மாற்றிக்கொள்ள நான் விரும்பேன்.

ச. புருஷனை வரிக்கும் விஷயத்தில், மற்ற கன்னிகைகள் தம் கண் நிறைந்த கணவனையே வரிப்பதுபோல், நான் வரிக்கும் படியானவ ளல்ல. அன்றியும், எனக் கேற்பட்டிருக்கிற சுல் கத்தின்படி, நானாக வரிக்கச் சுதந்தரமற்றவள். உமக்கு நான் தெரிவித்திருக்கிறபடி, அவர் ஏற்படுத்திய பிரகாரம் எந்தப் புருஷன் என்னை வெல்கின்றாரோ, அவருக்கே நான் மனைவி யாகவேண்டுமென்று, என் தகப்பனார் தன் புத்தியின் யுக்தி யால், என் சுதந்தரத்தைக் குறைத்து என்னைக் கட்டுப் படுத்தி யிராவிட்டால், அவனி புகழ் அரசே, இதுவரையில் என் காதலைப் பெற வந்தவர்களைவிட, நான் கண்ணுற்ற வரையில் தாம் ஒன்றுங் குறைந்தபடி யன்று.

மா. அவ்வளவாவது கூறினதற்காக வந்தனம் செய்கிறேன். ஆகவே, என் அதிர்ஷ்டத்தைப் பார்க்கப் பெட்டிகளிடம் தயவு செய்து அழைத்துச் செல்லும்படி உன்னை வேண்டு கிறேன். இந்தக் கத்தியினால், சோழனைக் கொன்றிருக் கிறேன்; சுல்தான் சூலைமானிடமிருந்து மூன்று நாடுகளைச் ஜெயித்த பார்த்திப அரச குமாரன் சென்னியைச் சேதித் திருக்கிறேன். இதன்மீ தாணைப்படி சொல்கிறேன்—, உத் தமியே, உன்னைப் பெறவேண்டி, உலகிலுள்ள எப்படிப்

பட்ட கடூரமான கண்களையுடைய உத்தம வீரனையும் என் கண் பார்வையினால் நடுநடுங்கச் செய்வேன்; எப்படிப் பட்ட சூராதி சூரனானாலும் அவனது தைரியத்தை அரை க்ஷணத்தில் நிலை குலையச் செய்வேன்; பெட்டைக் கரடியி னின்றும் பாலருந்தும் அதன் குட்டிகளைப் பலாத்காரமாய்ப் பிரித்துவிடுவேன்; இரை யகப்படாது கோபத்துடன் கர்ஜிக் கின்ற ஆண் சிங்கத்தின் எதிர் நின்று பரிஹஸிப்பேன். ஆயி னும், என்ன துர்ப்பாக்கியம்! பீமசேனனும் பிருங்கி மஹ ரிஷியும் யார் பலசாலியென்று கண்டுபிடிக்கும்பொருட்டு பாய்ச்சிகை உருட்டினால், அதிர்ஷ்ட வசத்தால் அதிக பந்தயம் பலஹீனனான பிருங்கியின் கரத்தினின்றும் விழுந் தாலும் விழலாம். அம்மாதிரியே அர்ஜுனனானவன், அவ னது அற்பக் காலாள் ஒருவனால் தோற்கடிக்கப்படலாம். அம்மாதிரி குருட்டு அதிர்ஷ்டத்தால் இவ்விஷயத்தில் நான் தவறிப்போய், ஹீனன ஒருவன் ஜெயித்திட, நான் துயரத் தால் மடிய நேரிட்டாலும் நேரிடலாம்.

ச. உம்முடைய அதிர்ஷ்டத்தின்படி நடக்கவேண்டும். நீர் கோர முயல்வதை விடவாவது விடவேண்டும், அல்லது கோருவ தானால், அங்ஙனம் செய்யுமுன், ஒரு வேளை தவறுகக் கோரி னால், மறுபடியும் மண விஷயமாக மாதரின் முகத்தைப் பார்ப்பதில்லை என்று பிரமாணம் செய்யவேண்டும். ஆகவே, யோசித்துத் தீர்மானியும்.

மா. நான் யோசியேன் இனி. என் விதியிடம் என்னை அழைத் துச்செல்.

ச. முதலில் கோயிலுக்குப் போம், பிரமாணம் செய்திட; பிறகு போஜனம் கொண்டபின், உமது அதிர்ஷ்டத்தின்படி கோரலாம்.

மா. நற் சகுனம் வாய்க்குமாக! ஏனெனில், இதனுல் மனிதர்களுக்குள் நான் அதிர்ஷ்டமுடையவனே, அதிர்ஷ்டஹீனனே, என்பது தீர்மானிக்கப்படும்.

[வாத்யகோஷம், எல்லோரும் போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி.

இடம்—வாணீபுரம். ஒரு வீதி.

லாவண்ய கபீரன் வருகிருன்.

லா. என் எஜமானனுகிய இந்த ஜைனனைவிட்டு நான் ஓடிப்போக என் மனசு எனக்கு உதவி செய்யும். பிசாசு என் பக்கத்தில் நின்றுகொண்டு 'கபீரா, லாவண்ய கபீரா, நீ நல்லவன், ரொம்ப நல்லவன்; காலை நீட்டு, கம்பி காட்டு, நல்ல வாட்டம், பிடி ஓட்டம்' என்று சொல்லி என்னை ஏவுகிறது. என் மனசே, வேண்டாம், ஜாக்கிரதை. நீ நல்ல யோக்கியன். கபீரா, நீ நிரம்ப யோக்கியன், ஜாக்கிரதையாயிரு! ஓடிப் போகாதே! ஓட்டம் பிடிக்கிறது நல்ல தல்ல,' என்று சொல்லுகிறது. தைரியசாலியான பிசாசு, ' ஓடிப்போ ' என்கிறது; ' போய்விடு' என்கிறது பிசாசு; ஓடிப்போ ஓடிப்போ, நிற்காதே, மனசை தைரியம் பண்ணிக்கொண்டு ஓட்டம் பிடி' என்கிறது பிசாசு. என் மனசோ, என் கழுத்தைக் கட்டிக்கொண்டு, புத்திசாலித்தனமாய்ச் சொல்கிறது என்னிடம், ' அப்பா, கபீரா, நீ நிரம்ப யோக்யன், நல்ல யோக்யனுக்குப் பிறந்தவன், உம்—யோக்கியமான தாயாருக்கு என்று சொல்லியிருக்க வேண்டும், ஏன் என்ருல் என் தகப்பனுர் ஒருமாதிரி, கொஞ்சம் உண்டு, அந்த விஷயத்தில் கொஞ்சம் ருசி.—என் மனசு சொல்லுகிறது; ' லாவண்யா, போகாதே' என்று பிசாசுசொல்லுகிறது 'போ'

என்று. மனசு சொல்லுகிறது 'போகாதே' என்று. நான் மனசுக்குச் சொல்லுகிறேன், "நீ சொல்லுகிற புத்தி சரி தான்" என்று இந்தப் பிசாசுக்கும் "நீ சொல்லுகிற புத்தி சரி தான்" என்று சொல்லுகிறேன். என் மனசு சொல்லு கிற படி கேட்பதா யிருந்தால், என் எஜமானன் மாறுபாடி யிடத் திலேயே காலம் கழிக்கவேண்டியதுதான். அவன் என் னமோ ஒருவித பிசாசு! இந்த எஜமானப் பிசாசு, பெரிய பிசாசு இருக்கிறதே—அப்படிச்சொல்வதற்காக நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது—அதைவிட்டு, ஓடிப் போவது என்றால், சின்ன பிசாசு உத்திரவுபடி கேட்ப தாகும். இந்த ஜைனன் என்னமோ சாட்சாத் பிசாசின் அவ தாரம்; ஆகவே, இந்த ஜைனனிடத்திலேயேயிரு என்று எனக்குப் புத்தி சொல்லுகிற என் மனசு இருக்கிறதே, ரொம்ப கடினமான மனசா யிருக்கவேணும். ஆகவே இந்தப் பிசாசு சொல்லுகிறதுதான் நல்ல புத்திமதி. ஆகவே பிசாசே, நான் ஓடிப்போகிறேன். உன் கட்டளைப்படி கம்பி காட்டு கிறேன், ஓட்டம் பிடிக்கிறேன்.

ஒரு கூடையை எடுத்துக்கொண்டு வயோதிக கபீரன் வருகிறான்.

வ. க. அப்பா! பிள்ளையாண்டானே! உன்னைத்தான் கேட்கிறேன். அந்த மாறுபாடி ஐயா வீட்டுக்கு வழி எப்படி?

லா. [ஒரு புறமாக] அடடா! இதோ என்னைப் பெற்றெடுத்த என் தகப்பனார்; கண்கள் இரண்டும் தெரியாது நல்ல குருடா யிருப்பதனால், என்னை அறிந்துகொள்ள வில்லை. அவரோடு கொஞ்சம் வேடிக்கை பண்ணுகிறேன்.

வ. க. ஐயா! பிள்ளையாண்டான், உங்களைத்தான் கேட்கிறேன். அந்த மாறுபாடி ஐயா வீட்டிற்கு வழி எப்படி?

லா. நேராகப் போய் திரும்பும்போது உம்முடைய வலது கையின் பக்கம் திரும்பும்; அதற் கப்புறம் திரும்பும்பொழுது

இடது கை பக்கம் திரும்பவேண்டும்; அதற் கப்புறம் திரும்பும்பொழுது, எந்தக் கையின் பக்கமும் திரும்பாது, மாறுபாடியின் வீட்டுக்குள் மாறித் திரும்பும்.

வ. க. அப்பா ஆணை! நீ சொல்கிற வழி கண்டுபிடிக்க என்னால் முடியாது அப்பா. அவரிடத்திலே இருந்த லாவண்யன் என்ற பையன் இப்பொழுது அவரோடே இருக்கிறனா, இல்லையா?—சொல்லக்கூடுமா உன்னால்?

லா. யாரைப்பற்றி கேட்கிறீர்கள்? வாலிபனான லாவண்ய துரையைப்பற்றியா? [ஒரு புறமாக] இதோ பார் ஒரு வேடிக்கை, வாயைக் கிளப்பிவிடுகிறேன்!—ஏனையா, அந்த வாலிபனான லாவண்ய துரையைப்பற்றியா கேட்கிறீர்கள்?

வ. க. அவன் துரை யல்ல, ஐயா. ஒரு ஏழையினுடைய பிள்ளை. அவன் தகப்பன், நானே சொல்லிக்கொள்வதானாலும், நிரம்ப ஏழை; ஏழையா யிருந்தாலும், நிரம்ப யோக்கியன்; சாமி தயவினாலே சாப்பாட்டுக்குக் குறைச்ச லில்லை.

லா. சரி, அவன் தகப்பன் எப்படிப்பட்டவனாகவாவது இருக்கட்டும். நாம் வாலிபனான லாவண்ய துரையைப்பற்றிப் பேசுவோம்.

வ. க. சுவாமி, அந்த லாவண்யன் தங்களுடைய சினேகிதனா?

லா. உம்மைக் கேட்டுக்கொள்ளுகிறேன், ஆகையால், கிழவனாரே, ஆகையால், உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்—இளைஞனான லாவண்ய துரையைப்பற்றியா பேசுகிறீர் என்று.

வ. க. ஆம், லாவண்யனைப்பற்றிதான், தாங்கள் அடியேன்பேரில் தயவு செய்யவேண்டும்.

லா. அப்படியானால் லாவண்ய துரை என்று சொல்லும். அப்பா! என்னை அந்த லாவண்ய துரையைப்பற்றி கேட்கவேண்டாம் பிள்ளையாண்டான் கலா சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறபடி, தலை விதியாலோ, கிரக சாரத்தாலோ, யமன் உத்தர

வாலோ மரித்துவிட்டான் உண்மையில்; அதாவது நீர் சொல்லுகிற சாதாரண வார்த்தையின்படி, மேல் உலகத்துக்குப் போய்விட்டான்.

வ. க. ஐ ஐயோ! தெய்வமே! அப்படியில்லாதிருக்குமாக! அந்தப் பையன் என் கிழ வயதில் எனக்கு ஊன்றுகோலாச்சுதே—என்னைத் தாங்குவதற்கு!

லா. ஏனையா! என்னைப் பார்த்தால், என்ன உங்கள் கண்ணுக்குத் தடியைப்போ லிருக்கிறேனு, கட்டையைப்போ லிருக்கிறேனு, தூணைப்போ லிருக்கிறேனு?—அப்பா, என்னைத் தெரிகிறதா?

வ. க. ஐயோ! என்ன கஷ்ட காலம்! ஐயா, பிள்ளையாண்டான், உம்மை எனக்கு இன்றென்று தெரியவில்லை. ஐயா! உம்மை வேண்டிக்கொள்கிறேன். என் பையன்—சுவாமி அவனை ரட்சிப்பாராக!—இருக்கிறனு போய்விட்டானு? சொல்லும்.

லா. அப்பா, என்னைத் தெரியவில்லையா உமக்கு?

வ. க. ஐயோ! இரண்டு கண்ணும் பொட்டையா யிருக்கிறேனே! எனக்கும்மைத் தெரியவில்லையே!

லா. அது வாஸ்தவம்தான். உமக்கு இரண்டு கண்ணும் சரியாயிருந்தால்கூட என்னைக் கண்டுபிடிக்கிறது உமக்குக் கஷ்டமாயிருக்கலாம். புத்திசாலியான தகப்பனுக்குத்தான் பிள்ளையின் சூட்சுமம் தெரியும். சரி! கிழவனுரே, உங்கள் பிள்ளையின் சமாசாரம் சொல்லுகிறேன். எனக்கு ஆசிர்வாதம் செய்யுங்கள். [முழந்தா ளிடுகிறுன்.] எப்படியும் உண்மை வெளியாகிவிடும், மூடி வைக்க முடியாது கொலையை நெடுங்காலம். ஒருவனுடைய குமாரன் என்பதைமாத்திரம் அப்படி மறைத்து வைக்கலாம்; ஆயினும் கடைசியில் உண்மை வெளியாகிவிடும்.

வ. க. ஐயா, நீங்கள் எழுந்திருங்கள் கொஞ்சம். நிச்சயமாய் என் பையன் லாவண்யன் அல்ல நீங்கள், என்று கூறுவேன்,

லா. போனது போகட்டும்; இனிமேல் இதைப்பற்றி விளையாட்டு வேண்டாம். எனக்கு உமது ஆசீர்வாதம் கொடுங்கள். நான்தான் லாவண்யன், உங்கள் பையனு யிருந்தவன், உங்கள் குமாரனு யிருக்கிறவன், உங்கள் குழந்தையா யிருக்கப் போகிறவன்.

வ. க. நீதான் என் பிள்ளை என்று எண்ண முடியவில்லை.

லா. அதைப்பற்றி நான் என்ன நினைக்கவேண்டுமென்பதை அறியேன். நான்தான் லாவண்யன், மாறுபாடியின் வேலைக்காரன். ஆயினும் உங்கள் பெண்சாதி மரகதம்மாள்தான் என் தாயார் என்பதற்கு என்னவோ சந்தேகமில்லை.

வ. க. ஆமாம், அவள் பேர் மரகதம்தான். நீ லாவண்யன் என்பது நிஜமானல், நீ என் சொந்த சதையும் இரத்தமும் என்று நான் சத்தியம் பண்ணுவேன். ஸ்வாமி உன்னைக் காப்பாற்றுவாராக! அப்பா உனக்கு எத்தனைப் பெரிய தாடி யிருக்குதடா! என் டப்பா குதிரைக்கும் வாலிலிருக்கும் மயிரைவிட, உன் முகத்தில் தாடி பெரிதாயிருக்கிறதே!

லா. ஆனல் உங்கள் டப்பா குதிரைக்கு மயிர் குறுகிப்போயிருக்கவேண்டும். நான் கடைசியில் பார்த்தபொழுது, என் முகத்திலே இப்பொழுது இருக்கிறதைவிட வாலில் மயிர் அதிகமா யிருந்தது.

வ. க. அப்பா, திடீரென்று எவ்வளவு மாறிப்போனுய்! உன் எஜமானும் நீயும் எப்படி ஒத்து இருக்கிறீர்கள்? அவருக்குக் காணிக்கையாக இதைக் கொண்டுவந்திருக்கிறேன். இப்பொழுது, எப்படி ஒத்திருக்கிறீர்கள்?

லா. அப்படி இருக்கிறேம், ஒரு மாதிரியாக; ஆனலும், நான் என்னமோ அவரை விட்டு விட்டு ஓடிப்போகத் தீர்மானித்து விட்டேன்; ஆகவே அவரை விட்டு ஓடிப்போகிற வரையில் என் மனசு சும்மா இருக்காது. என் எஜமான் என்னமோ கேடு கெட்ட மாறுபாடி; அவனுக்குப் போய் காணிக்கை

கொடுப்பதாவது! அதைவிட ஒரு கயிறு கொடுங்கள், தூக்குப் போட்டுக்கொள்ள! செத்துப் பிழைக்கிறேன் நான், அவனிடம் வேலைசெய்து. என் கையில் விரல் எத்தனை என்று என் விலா எலும்பினால் எண்ணிப் பார்த்துச் சொல்லலாம். அப்பா! அந்தமட்டும் நீங்கள் சரியான வேளைக்கு வந்தீர்கள்! நல்ல சந்தோஷம்; உங்கள் கையில் கொண்டுவந்ததை பானுசேனர் என்று ஒரு நல்ல பிரபு இருக்கிறார், அவருக்குக் கொடுங்கள். அவரென்னமோ நல்ல எஜமான், வேலைக்காரர்களுக்கெல்லாம் நல்ல புதிதான விலை யுயர்ந்த உடுப்புகள் கொடுக்கிறார். அவரிடத்தில் நான் போய் வேலையில் அமராவிட்டால், நான் இந்த உலகத்தையே விட்டு ஓடிப்போய்விடுவேன்.—அடடா! என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! இதோ வருகிறார் அவர்! அவரிடம் போம். இனிமேல் ஒரு க்ஷணமும் நான் அந்த மாறுபாடியிடம் வேலை செய்வேனாயின், நானும் ஒரு மாறுபாடிதான்.

கேசரிநாதன் முதலிய வேலையாட்களுடன் பானுசேனன் வருகிறான்.

பா. அப்படியே செய்யலாம் நீ, ஆனால் துரிதப்படுத்தி எப்படியாவது ஐந்து மணிக்குள்ளாக போஜனம் சித்தமா யிருக்கும்படிச் செய். இந்த நிருபங்களை யெல்லாம் கொடுத்துவிடும்படிச் செய். வேலையாட்களுடைய உடுப்புக ளெல்லாம் சித்த மாகட்டும். கிரிஜாநாதரை சீக்கிரம் என் வீட்டிற்கு வரும்படி சொல், போ.

[ஒரு வேலையாள் போகிறான்.]

லா. அப்பா, போம் அவரிடம்.

வ. க. ஐயா, அடியேன் நமஸ்காரம்.

பா. வந்தனம். என்ன விசேஷம்? என்னுடன் ஏதாவது பேச வேண்டுமோ?

வ. க. இதோ இருக்கிறானே என் பையன், ஐயா, ஏழைப் பையன்.

லா. ஏழைப் பையனல்ல, ஐயா! பணக்கார மாறுபாடியின் வேலைக்காரன், என் இஷ்டம் இப்பொழுது—என் தகப்பனுர் சொல்லுகிற பிரகாரம்—

வ. க. அவனுக்கென்னமோ வேலை செய்யவேணும் என்று நிரம்ப விக்கம். அதாவது உலகத்தில் சொல்லுகிருர்களே—நிரம்ப—

லா. நான் சுருக்கிச் சொல்லுகிறேன்; இப்பொழுது, நான் மாறுபாடியிடம் இருக்கிறேன், அவரை விட்டுவிட்டு, என் தகப்பனுர் சொல்கிற பிரகாரம்—

வ. க. அவன் எஜமானனுக்கும் அவனுக்கும்—நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது—அவ்வளவாக வருத்தம் இல்லை—

லா. நான் சீக்கிரம் சொல்லிவிடுகிறேன்! வாஸ்தவத்திலே. இந்த மாறுபாடி என்னைக் கஷ்டப்படுத்துகிருன். ஆகவே, என் தகப்பனுர், வயசானவர், அவர் உங்களுக்குத் தெரிவிக்கிற பிரகாரம்—

வ. க. இதோ கொஞ்சம் புருக் கறி கொண்டுவந்திருக்கிறேன். அதை உங்களுக்குக் காணிக்கையாகச், சமர்ப்பிக்க விரும்புகிறேன்—நான் கேட்டுக்கொள்வது என்னவென்ருல்—

லா. நான் விரைவிற் சொல்லிவிடுகிறேன். நாங்கள் கேட்கவந்த சமாசாரம் என்னைப் பற்றிக்கொண்டது. அதைப்பற்றி இந்த யோக்கியமான பெரியவர் தங்கள் சமுகத்துக்குத் தெரிவிக்கிருர்; அதைப்பற்றி நானே சொல்வதாயிருந்தாலும், இவர் கிழவனு யிருந்தபோதிலும், எளியவர்—என் தகப்பனுர்—

பா. இரண்டு பெயருக்காக யாராவது ஒருவன் பேசட்டும். என்ன வேண்டும் உனக்கு?

லா. தங்களிடத்தில் வேலைக்காரனுக இருக்கவேண்டும், ஐயா!

வ. க. அதுதான் நான் சொல்லவந்த சமாசாரத்துக்கு அர்த்தம்.

பா. உன்னை எனக்குத் தெரியும் நன்ருய். நீ வேண்டியதை உனக்கு அளித்தேன். ஷர்மலா லாகிய உன் எஜமான், இன்

றைத்தினம் என்னுடன் பேசியபொழுது உன்னைப்பற்றி சிபார்சு செய்திருக்கிறார். பணக்கார மாறுபாடியிடம் வேலை செய்வதை விட்டு, எளியவனான என்னிடம் வேலை செய்ய உனக்கு விருப்பமானால், அப்படியே செய்.

லா. 'பணமும் குணமும் ஒரு நிலை நில்லா' என்று ஒரு பழமொழியுண்டு. அதன்படி, என் எஜமானனான ஷாம்லாவிடத்தும் உம்மிடத்தும் அது பகிரப்பட்டிருக்கிறது சரியாக, உம்மிடம் அந்தக் குணம் இருக்கிறது, அவரிடம் அந்தப் பணமிருக்கிறது.

பா. அதை நன்று யுரைத்தாய்.—ஐயா, பெரியவரே, உம்முடைய பிள்ளையோடு போய் அவனுடைய பழய எஜமானனுடைய உத்தரவைப் பெற்று, என் வீட்டை விசாரித்துக்கொண்டு வந்து சேரும். [தன் வேலையாட்களுக்கு] மற்றவர்களுடைய உடையைப்பார்க்கிலும் சிறந்ததான உடுப்பை இவனுக்குக் கொடுங்கள், உடனே செய்தாக வேண்டும்.

லா. அப்பா, இப்படி வாரும்; எனக்கு வேலையே அகப்படாது, வாயில்லை, ஆகவே பிழைப்பது கஷ்டம் என்றீர்களே பார்த்தீர்களா இப்பொழுது! [தன் உள்ளங் கையைப் பார்த்து] என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! இதோ பாருங்கள் என் உள்ளங் கையை; இதைப்பார்க்கிலும் அதிர்ஷ்டமான கை வாணீபுர மெல்லாம் சுற்றினாலும் அகப்படாது என்று ராமாயணத்தின்மீது பிரமாணம் செய்வேன் நான். இதோ பாருங்கள்! ஆயுள் ரேகை எவ்வளவு தூரம் போகிறது. இதோ பெண்சாதிகளின் கணக்கு, ஐயோ! பதினைந்து பெயர்தான், அதிகமில்லை! பதினொறு கைம்பெண்கள், ஒன்பது கன்னிகள், போதாதா ஒரு மனுஷனுக்கு? பிறகு மூன்று நீர் கண்டம் தப்பவேண்டும். பஞ்சணை மெத்தையின் ஓரத்தினின்றும் பிராண அபாயம் ஒன்று; இவைகளை யெல்லாம் இலேசாகத் தப்பித்துக்கொள்ளலாம். லட்சுமி என்னமோ, பெண் பிள்ளையா யிருந்தபோதிலும், நல்ல அம்மாள்தான், இவைகளை யெல்லாம் எனக்குக் கொடுத்

தார்களே. அப்பா, போகலாம் வாரும்; கண்ணை மூடித் திறப்பதற்குள்ளாக, மாறுபாடியிடம் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்.

[லாவண்ய கபீரனும், வயோதிக கபீரனும் போகிறார்கள்.]

பா. கேசரிநாதா, நான் கூறியதெல்லாம் கவனத்திலிருக்கட்டும். இவைகளை யெல்லாம் வாங்கிச் சரியாக ஏற்பாடு செய்த பின், சீக்கிரம் வந்துசேர். நான் எனது ஆப்தரான சிநேகிதர்களுக்கு விருந்திடுகிறேன் இன்றிரவு. நீ போ சீக்கிரம்.

கே. இவ் விஷயத்தில் என்னா லியன்ற அளவு முயல்கிறேன்.

கிரிஜாநாதன் வருகிறான்.

கி. எங்கே உன் எஜமான்?

கே. அதோ போகிறார், ஐயா. [போகிறான்.

கி. ஐயா, பானுசேனரே!

பா. கிரிஜாநாதா!

கி. நான் உம்மை ஒன்று கேட்கவேண்டும்.

பா. அதை நீ பெற்றுக்கொண்டாய்.

கி. நீர் என்னைத் தடுக்கக்கூடாது — நானும் உம்முடன் மணிபுரத்திற்குப் போகவேண்டும்.

பா. ஆயின், நீ போகத்தான் வேண்டும் — ஆகவே ஒரு வார்த்தை, நான் சொல்வதைக் கேள், கிரிஜாநாதா, உன்னிடம் அடக்கமென்பதில்லை, முரட்டுத்தன மிருக்கிறது. உரத்த சத்தத்தோடு பேசுகின்றாய். இவைகளெல்லாம் உன் குணத்திற்கு ஒத்தவைகளாகத்தா னிருக்கின்றன; என்னைப் போன்றவர்களுடைய கண்களுக்கு இவைகள் குற்றமாகத் தோற்றவில்லை. ஆயினும், உன்னை நன்றுயறியாதவர்களுக்கு, அவைகள் தீய குணங்களாகக் காணப்படும். ஆகையால், உன் விளையாட்டுப் புத்தியை, அடக்க ஒழுக்கத்தினால், கொஞ்சம் கஷ்டப்பட்டாவது, சாந்தப் படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறேன். உன்னை இல்லா

விடின், உன் வேடிக்கை யாட்டத்தில், நான் போகிற இடத்தில், என்னைப்பற்றித் தவறான எண்ணங் கொண்டாலும் கொள்வார்கள், அதனால் என் கோரிக்கைக்கு ஹானி நேரிடினும் நேரிடும்.

கி. பானு சேனரே, நான் சொல்வதைச் சற்றுக் கேளும். அவ்விடத்திலிருக்கும்பொழுது, மிகுந்த அமரிக்கை யுடையவன் போல் நடித்து, நிரம்ப மரியாதையுடன் பேசி, கெட்ட வார்த்தைகளை அதிகமாக உபயோகியாமல், ருத்திராட்சம் முதலியனவெல்லாம் தரித்து, பரிசுத்தமாகக் காணப்பட்டு, போஜனத்திற்குமுன் பட்டை பட்டையாகக் குழையல்களெல்லாம் போட்டு, தினம் காலை மாலை சந்தியாவந்தனம் செய்து—, உலக பற்றையெல்லாம் விடுத்த வேதாந்தியைப் போல் மேலுக்கு வேஷம் போட்டு, அவர்களுக்கெல்லாம் நாமம் போடாவிட்டால், என் வார்த்தையை நம்ப வேண்டாம் பிறகு நீர்.

பா. ஏதோ, பார்ப்போம் உன் நடத்தையை இனிமேல்.

கி. ஆனால் ஒரு சமாசாரம், இன்றிரவு என்னை விட்டுவிட வேண்டும்; இன்றிரவு நாம் நடப்பதைக் கொண்டு நீர் என்னை மதிக்கலாகாது.

பா. சே! அப்படிச் செய்தல் தவறாகும்! இன்றிரவு நாம் வேடிக்கையை விரும்பும் நண்பர்களைச் சந்திக்கிறபடியால் உன்னால் எவ்வளவு வேடிக்கையாகக் காலம் கழிக்க முடியுமோ; அவ்வளவு வேடிக்கையா யிருக்கும்படி யல்லவோ நான் உன்னை வேண்டவேண்டும். சரி, நான் வருகிறேன். எனக்கு கொஞ்சம் வேலை யிருக்கிறது.

கி. நானும் லீலாதரர் முதலானோரிடம் போகவேண்டும். போஜன வேளைக்கு உம்மை வந்து காண்கிறோம்

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி

இடம்—வாணீபுரம், ஷாம்லால் வீட்டில் ஓர் அறை.
ஜலஜாவும், லாவண்யனும் வருகிறார்கள்.

ஜ. நீ இவ்விதம் என் தகப்பனாரை விட்டுப் போகின்றாயே என்று வருத்தமா யிருக்கிறது. எங்கள் வீடு நரகந்தான், ஆயினும் அந்த நரகத்தில் உன் வேடிக்கை விநோதத்தினால், கொஞ்சம் கவலை நீங்கிக் களிப்புற் றிருந்தேன். சுகமாய்ப் போய்வா.—இதோ உனக்கொரு பொன். லாவண்யா, பானுசேன ராகிய உன் புதிய எஜமான் வீட்டில் விருந்துண்ணச் சீக்கிரம் லீலாதரர் வருவதைக் காண்பாய். இந்நிருபத்தை அவரிடம் கொடு, இரகசியமாய் இதைச் செய். போய்வா, உன்னோடு நான் பேசிக்கொண் டிருப்பதை என் தந்தை காண்பது எனக்கிஷ்ட மில்லை.

லா. நான் போய்வருகிறேன் அம்மணி. நான் வாயாற் சொல்ல வேண்டியதை என் கண்ணீரானது தெரிவிக்கின்றது. என் அழகிய அம்மணி, என் இனிய தாயே, எப்படியாவது ஒரு ஹிந்து உம்மைத் திருடிக்கொண்டுபோய் மணம் செய்து கொள்ளாவிட்டால் நான் மோசம்போனவ னாவேன். நான் வருகிறேன் அம்மணி. இந்த மடத்தனமான கண்ணீரானது என் ஆண்மைக்குரிய தைரியத்தை அமிழச் செய்கிறது, நான் வருகிறேன் அம்மா. [போகிறான்.]

ஜ. போய்வா, லாவண்யா—ஐயோ! என் தகபபனாருடைய பெண்ணென்று வெளியிற் சொல்லவும் நான் வெட்கப் படும்படி என்ன பாப மிழைத்தேன் நான்! அம்மட்டும் பிறப்பில் அவருக்குப் பெண்ணாகியும், குணத்தில் அவருக்குப் பெண்ணாகாம லிருக்கின்றேனே!—லீலாதரரே, நீர் கூறிய மொழியினின்றும் தவறா திருப்பீராகில், கடிதினில் நான் இக் கஷ்டமெல்லாம் நீக்கி, உமதிஷ்டப்படியே ஹிந்துவாகி, உமது இனிய மனைவியுமாவேன். [போகிறாள்.]

காட்சி முடிகிறது.

நான்காம் காட்சி.

இடம்—வாணீபுரம், ஓர் வீதி.

கிரிஜாநாதன், லீலாதரன், சாம்பநாதன், சோமசேனன் வருகிறார்கள்

லீ. அப்படியல்ல, இராத்திரி விருந்தின் மத்தியில் நாம் ஒருவரு மறியாதபடி வெளி வந்து, எனது வீட்டில் நமது உருவை மாற்றி, ஒரு மணி நேரத்திற்குள்ளாகத் திரும்பி வந்துசேரலாம்.

கி. அதற்குத் தக்க ஏற்பாடுகளெல்லாம் நாம் செய்யவில்லையே.

சா. நமக்கு வேண்டிய தீவர்த்தி ஆட்களுக்கு நாம், இன்னும் ஏற்பாடு செய்யவில்லையே.

சோ. எல்லாம் தக்கபடி ஏற்பாடு செய்யாவிட்டால் அசங்கியமாய் முடியும்; அதைவிட இதில் கையிட்டுக்கொள்ளாதிருத்தலே மேலாம் என்று எனக்குத் தோற்றுகிறது.

லீ. இப்பொழுது நான்கு மணிதான் ஆயது; இன்னும் இரண்டுமணி சாவகாச மிருக்கிறது நமக்கு வேண்டியவைகளைச் சித்தம் செய்துகொள்ள—

ஒரு நிருபத்துடன் லாவண்யன் வருகிறான்

நேயா, லாவண்யா, என்ன விசேஷம்?

லா. தயவு செய்து இதை நீர் பிரித்துப் பார்ப்பீராயின், விசேஷ வர்த்தமானத்தை அது தெரிவிக்கும்.

லீ. இந்தக் கையெழுத்து எனக்குத் தெரியும். உண்மையில் இது அழகுடைய கையெழுத்தே; எழுதப்பட்ட காகிதத்தைவிட இதை எழுதிய அழகிய கை அதிக வெண்மையானது.

கி. ஆயின் உண்மையில் காதற் கடிதமே.

லா. ஐயா, எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்.

லீ. எங்கே போகிருய் நீ இப்பொழுது?

லா. உண்மையில், என் பழய எஜமானனுகிய ஜைனரை, என் புதிய எஜமானனுகிய ஹிந்துவுடன் விருந்துண்ணும்படி அழைப்பதற்காக.

லீ. பொறு கொஞ்சம்; இதைப் பெற்றுக்கொள்.—என் இனிய ஜலஜாவுடன் நான் தவறமாட்டேன் என்று கூறு—அதை இரகசியமாய்ச் சொல், போ. [லாவண்யன் போகிருன்.] ஐயா, இன்றிரவின் வேஷத்திற்கு எல்லாரும் சித்தமாகின் றீர்களா விரைவில்? என் தீவர்த்தியால் ஏற்பாடு செய் தாயது.

சா. சரி யானல், நான் சடுதியிற் போகவேண்டு மதற்காக.

சோ. நானு மப்படியே.

லீ. ஒரு மணி பொறுத்து, கிரிஜாநாதனையும், என்னையும், கிரி ஜாநாதன் வீட்டருகிற் சந்தியும்.

சா. நாம் அங்ஙனம் செய்வது நலமே,

[சாம்பநாதனும், சோமசேனனும் போகிருர்கள்.]

கி. அழகிய ஜலஜாவிடமிருந்து வந்த தல்லவா அக்கடிதம்?

லீ. உன்னிடம் நான் எல்லாவற்றையும் உரைத்திடவேண்டும். தன்னைத் தன் பிதாவின் வீட்டிலிருந்து எப்படி நான் கொண்டு போகலாமென்றும், தான் எவ்வளவு பொன் நகைகள் எடுத்து வைத்திருக்கிருள் என்றும், தனக்காக எம்மாதிரியான ஆண் உடை சித்தம் செய்துவைத்திருக்கி ருள் என்றும், எல்லாம் தெரிவித்திருக்கிருள். அவள் தந்தை எப்பொழுதாவது மோட்சம் எய்துவ தானல், தன் பெண்ணுகிய இவள் செய்யும் புண்ணியத்தின் பலனுகும் அது. சனி எப்பொழுதாவது அவள் பாதத்தைப் பிடிப்ப தானல், இந்த நாஸ்திகனுன ஜைனன் மகளா யுதித்த

போக்கைக் கொண்டு தான் அவனைப் பிடிக்கவேண்டும். வா, போவோம் நாம்; போகும் பொழுது இதைப் படித்துப் பார். அழகிய ஜலஜாவே உன் தீவிர்த்தி ஆளாகப் போகிறாள்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

இடம்—வாணீபுரம். ஷாம்லால் வீட்டிற் கெதிரில்

ஷாம்லாலும், லாவண்யனும் வருகிறார்கள்

ஷா. சரி! நீயே பார்க்கப்போகிறாய். உன் கண்களே உனக்குத் தெரிவிக்கும், கிழவனான ஷாம்லாலுக்கும், பானுசேன னுக்கும் உள்ள பேதம்.—யார் உள்ளே? ஜலஜா!—என் னிடம் இன்று கொழுத்ததுபோல் அங்கே முடியாது.—யார் அது ஜலஜா!—இங்கே குறட்டை விட்டுத் தூங்கிக் காலம் கழிப்பாயே, உடுப்புகளை யெல்லாம் கிழிப்பாயே, அந்த மாதிரி முடியா தங்கே.—யார் அங்கே? ஜலஜா! நான் கூப்பிடுகிறேன்!

லா. அம்மா, ஜலஜா!

ஷா. உன்னை யாரடா கூப்பிடச் சொன்னது! உன்னைக் கூப்பிடச் சொல்ல வில்லையே நான்.

லா. உத்தரவு கொடுத்தா லொழிய நான் ஒன்றும் செய்யலாகா தென்று பன்முறை சொல்லியிருக்கிறீர்கள் தாங்கள் எனக்கு.

ஜலஜா வருகிறாள்.

ஜ. அழைத்தீரா நீர்? என்னவேண்டும் உங்களுக்கு?

ஷா. ஜலஜா, என்னை விருந்துக் கழைத்திருக்கிறார்கள். இதோ என் சாவிகள்.—ஆயினும், நான் ஏன் போகவேண்டும்? பிரீதியினால் நான் அழைக்கப்படவில்லை—என் தயவுக்காக

எனக்கிவ்வாறு முகஸ்துதி செய்கிறார்கள். ஆயினும் நான் க்ஷாத்திரத்திற்காகப் போகிறேன், அவனுடைய விருந்தைப் புசித்து அச் செலவாளியின் செல்வத்தைக் கரைப்பதற்காக! பெண்ணே ஜலஜா, என் வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்.—போகிறதற் கென்னமோ எனக்கிஷ்டமேயில்லை. நேற்றிரவு பணப்பைகளைப்பற்றி நான் கனவு கண்டேன், ஆகவே, என் அமைதியைக் கெடுக்க ஏதோ விபரீதம் நேரிடப் போகின்றது என்று அஞ்சுகிறேன் நான்.

லா. ஐயா, புறப்படும்படி தங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். என் புதிய எஜமானன் உங்கள் 'வரவை' எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஷா. நானு மப்படியே அவருடையதை எதிர்பார்க்கிறேன்.

லா. அவர்களெல்லாம் ஒன்று கூடி யோசனை செய்திருக்கிறார்கள்.—நீங்கள் ஒரு வேஷத்தைப் பார்ப்பீர் என்று சொல்ல மாட்டேன். ஆயினும் அப்படிப் பார்ப்பீர்களாயின் நான்கு வருஷத்திற்கு முன், பொங்கல் பண்டிகை, திங்கட்கிழமை கருநாளில் வந்தபொழுது, காலை ஆறு மணிக்கு என் மூக்கு தினவு எடுத்த சகுனம், சரியாய் முடிந்தது என்று சொல்வேன்.

ஷா. என்ன! வேஷம் போடப்போகிறார்களோ?—ஜலஜா, நான் சொல்வதைக் கேள். என் வீட்டுக் கதவுகளை யெல்லாம் சாத்தி வை. மேள சத்தமாவது, இந்த குவைகுவை என்று காதுக்கு வெறுப்பாய்க் கூவுகிற குழலோசையாவது கேட்டால், மேல்மாடிக்கு ஓடிப்போய் பலகணி வழியாய்த் தலையை நீட்டிக்கொண்டு, வீதியிற் பார்க்காதே, முகத்தில் வர்ணத்தைப் பூசிக்கொண்டு வருகிற இந்த ஹிந்து முட்டாள்களைக் காண்பதற்காக. என் வீட்டின் கதவுகளை மூடி வை, அதாவது நான் சொல்வதென்ன வென்றால், என் வீட்டு ஜன்னல்களை நன்றாகச் சாத்தி வை. மூடர்கள்போடும் அர்த்த மில்லாக் கூச்சல் என் யோக்யமான வீட்டிற்குள்

நுழையவே வேண்டாம். திகம்பரர் பாதத் தாணை! இன்றிரவு எனக்கு வெளியே போய் விருந்துண்ண இச்சையேயில்லையென்று சத்தியம் செய்கின்றேன்.—ஆயினும் போய்த் தொலைக்கவேண்டும்.—போடா அப்பா, போ முன்னே. நான் வருகிறேன் என்று சொல், போ.—

லா. இதோ முன்னே போகிறேன் ஐயா.—அம்மணி, எதற்கும் பலகணி வழியாய்ப் பாரும் வெளியே.

"இந்த வழியோ ரிந்துவே வருவான்
ஜெயினன் மகளிரு நயனங் கவர்வான்."

[போகிறான்.]

ஷா. அந்த வாலியின் வம்சத்து மடையன் என்ன சொன்னான்?

ஜ. "அம்மணி, நான் போய்வருகிறேன்" என்று சொல்லிப் போனான், வேறொன்றுமில்லை.

ஷா. முட்டாள் பையன், நல்லவன்தான்; ஆனால் பெருந்திண்டிக் காரன். லாபம் சம்பாதிப்பதில் நத்தைதான். பகற்பொழுதெல்லாம் உறங்குகின்றான் காட்டுப் பூனையைப்போல். சோம்பேறிகள் என் வீட்டில் வாழ முடியாதென்னுடன். ஆகவே அவனை அனுப்பிவிடவேண்டியதாயிற்று. அனுப்புவதிலும், தான் என்னிடமிருந்து கடன் வாங்கிய பொருளை அவன் செலவழிப்பதில், இவன் அவனுக்கு உதவி செய்யும்படி சரியானவனிடந்தான் அனுப்புகிறேன்.—சரி, ஜலஜா, நீ போ உள்ளே. நான் உடனே திரும்பி வந்தாலும் வந்துவிடுவேன் ஒருவேளை, நான் சொன்னபடி செய். உன் பின்னால் கதவைச் சாத்திக்கொள்.—"கெட்டியாய்க் கட்டினால், திடமாய்க் காணலாம்." இப்பழமொழி சிக்கனமாம் மனத்திற்கு எப்பொழுதும் அர்த்தமுடையதாகும். [போகிறான்.]

ஜ. போய்வாரும்; என் அதிர்ஷ்டம் கெடாதிருந்தால், சீக்கிரத்தில் எனக்கொரு தந்தை நஷ்டம், உமக்கொரு பெண் நஷ்டம்.

[போகிறாள்.]

காட்சி முடிகிறது.

ஆரும் காட்சி

இடம்:—வாணீபுரம், ஷாம்லால் வீட்டிற்கு எதிர்.
கிரிஜாநாதனும், சாம்பநாதனும் வேஷம் பூண்டு வருகிறார்கள்.

கி. இக் கொட்டிலின் கீழ்தான் நின்றுகொண் டிருக்கும்படி லீலாதரர் விரும்பினார்.

சா. அவர் குறித்த கால மாய்விட்டதே சற்றேறக் குறைய.

கி. அவர் குறித்த மணிப் பிரகாரம் வாரதது பெருத்த ஆச்சரிய மாகும். ஏனெனில் காதலர்கள் குறித்த மணிக்கு முன்ன தாக ஓடி வருவார்கள் என்றும்.

சா. நண்பர்களுக் குரைத்த மொழியினைக் காத்திட நாடும் வேகத் தினும், புதிய காதலின் தளைகளைப் பூட்டுதற்குப் பதின் மடங்கு வேகமாய்ப் பறந்து செல்லும், மதனன் கிள்ளைகள்.

கி. எக்காலத்தும் அப்படித்தான் அது. விருந்திற்கு உட்காரு முன் இருக்கும் பசியின் விருப்பத்துடன், எவனொருவன் அதினின்றும் எழுகிறான்? முதலிற் சென்ற வேகத்தின் தீவ ரத்துடன், அதே வழியில் திரும்புங் காலை, கால் தளராது கடந்து செல்லும் கடிமா எங்குளது? உலகத்தில் உள்ள எல்லா விஷயங்களிலும், அவைகளை நாடும்பொழு திருக்கும் உற்சாகம், அவைகளை அனுபவிக்கும்பொழுது கிடையாது. துறைமுகத்தினின்றும் புறப்படும்பொழுது நாவாயானது, மதம் பிடித்த காளையைப்போல் அழகுறச் சீலைகளைத் தரித்து, வேசிபோன்ற காற்றினால் அணைத்து ஆதரிக்கப்பட்டு, என்ன ஆடம்பரத்துடன் போகிறது! திரும்புங் காலையோ, அதே வேசையாம் காற்றினால் பக்கங்களெல்லாம் ஒடிந்து, வெயிலிலும் மழையிலும் அடிபட்டு, பாய்மரங்களெல்லாம் முறிந்து பாழாக்கப்பட்டு, தளர்ந்து மெலிந்த தரித்திரனைப் போல் வந்து சேர்கிறது.

சா. இதோ வருகிறார் லீலாதரர்.—அதைப்பற்றி அப்புறம் பேசுவோம்.

லீலாதரன் வருகிறான்.

லீ. என் இனிய நண்பர்களே, உங்களை நெடுநேரம் காக்கச் செய்ததற்காக உங்கள் மன்னிப்பைக் கேட்கிறேன். நானாக உங்களுக்கு இவ்வளவு கஷ்டம் கொடுத்தபடியன்று, என் வேலையே இவ்வாறு தாமதிக்கச் செய்தது. உங்கள் காதலிகளைப் பெற நீங்கள் கள்ள வேடம் பூணச் சமயம் வாய்க்குங்கால், உங்களுக்காக, நீர் காத்தபடி, அப்பொழுது நானும் காக்கின்றேன். வாருங்கள், அதுதான் என் ஜைன மாமனார் வீடு.—ஓய்! யார் உள்ளே?

ஆண் உடையுடன் ஜலஜா மேல்மாடியில் தோற்றுகிறாள்.

ஜ. யார் நீர்? உங்களுடைய குரல் எனக்குத் தெரிந்ததாக நான் சத்தியம் செய்யக்கூடுமாயினும், சந்தேகமேயில்லாதிருக்கும் பொருட்டு உங்கள் பெயரைச் சொல்லுங்கள்.

லீ. நான் லீலாதரன்—உன் காதலன்.

ஜ. லீலாதரர்தான்! சந்தேகமில்லை, என் காதலர்தான். இத்தனை காதல் உம்மீதன்றி யார்மீது வைத்துளேன்? உம்மையன்றி, நான் உமது காதலியென்று, யாருக்குத் தெரியுமிப்பொழுது?

லீ. நீ என் காதலி என்பதற்கு, உலகாளு மீசனும், உன் மனமுமே சாட்சி.

ஜ. இதோ இந்தப் பெட்டியைப் பிடித்துக்கொள்ளும். கஷ்டத்திற்குத் தகுந்த கூலியாகும் அது. இருட்டாயிருப்பது எனக்குச் சந்தோஷம்; உமக்கு என்னைத் தெரியாமலிருக்கின்றது. ஏனெனில் இந்தவேஷத்தைத் தரித்தது எனக்கு வெட்கத்தைத் தருகிறது. ஆயினும் காமத்துக்கு கண்ணில்லை அல்லவா? காமுகர்கள் செய்யும் அழகிய குற்றங்

களெல்லாம் அவர்கள் கண்ணுக்கே தெரியா தல்லவா? அப்படித் தெரிவதானல், இவ்வளவுக்கும் காரணமாயிருந்த அந்த மன்மதனே நானிவ்வாறு ஆண் வேடம் தரித்திருப் பதைக் கண்டால் நாணப்படுவான்.

ஸீ. இறங்கி வா, நீ என் தீபக்காரஞ யிருக்கவேண்டும்.

ஜ. என்ன? என் வெட்கம் வெளிப்படை யாகும்படி நானே வெளிச்சம் பிடிக்கவேண்டுமா? முன்பே உண்மையில் வெளிப்படையா யிருக்கிறது, அதற் கொரு வெளிச்சமும் வேண்டுமோ? காதலா, இதென்ன நியாயம்? இது என்னே வெளிப்படுத்தும் வேலே யாகுமே; நான் ஒருவரு மறியாதபடி மறைந் தல்லவோ செல்லவேண்டும்?

ஸீ. கண்ணே, இந்த அழகிய ஆண் உடையே உன் ரூபத்தை நன்ருய் மாற்றுகின்றது. சீக்கிரம் வா. இராக்காலம் விரை விற் கரந் தோடுகின்றது. பானுசேனர் வீட்டில் விருந்தின ரெல்லாம் நமது வரவை எதிர் பார்த்திருக்கின்றனர்.

ஜ. கதவுகளே யெல்லாம் சரியாகத் தாளிட்டுக்கொண்டு, என் னேடு இன்னும் கொஞ்சம் பணப்பைகளேயும் எடுத்துக் கொண்டு, சீக்கிரம் வந்துசேர்கிறேன் உம்மிடம்.

[மேல்மாடியிலிருந்து மறைகிருள்.]

கி. ஓ! பிறப்பில் இவள் ஜைன மதஸ்தளா யிருந்தாலும், குணத்தில் ஹிந்துவே.

ஸீ. அதன்பொருட்டே அவள்மீது நான் அடங்காக் காதல் கொண்டிருக்கிறேன். குணத்தை யறியும் சக்தி எனக் கிருக் குமாயின், அவள் குணவதியே. என் கண்களாற் காண்பது மெய்யாஞல், அவள் அழகியே. அவள் நிருபித்த ருசுவின் படி நிஜவதியே. ஆகவே, மாருத என் மனத்தினில், அழகும் குணமும் கற்பும் உடையவளாய் மதிக்கப்படுவாள் என்று முவள்.

ஜலஜா ஈழே வருகிருள்.

ஜ. என்ன வந்தனையா ?—புறப்படுங்கள் ! நண்பர்களே, புறப் படுங்கள் சீக்கிரம், வேஷம் பூண்ட நமது நண்பர்கள் நமக் காகக் காத்துக்கொண் டிருப்பார்கள் இந்நேரம்.

[ஜலஜாவுடனும் சாம்பநாதனுடனும் போகிருன்.]

அநந்தநாதன் வருகிருன்.

அ யார் அங்கே ?

கி. அநந்தநாதரே !

அ. சீ சீ ! கிரிஜாநாதா. எங்கே மற்றவர்களெல்லாம் ? ஒன்பது மணியாய் விட்டது. நமது சிநேகிதர்களெல்லாம் உங்களுக் காகக் காத்துக் கொண்டிருக்கிருர்கள், இன்றைக்குக் கூத்தாட்டம் எல்லாம் ஒன்றும் உதவாது. காற்று திரும்பி விட்டது. பானுசேனன் உடனே கப்பலேறுகிருன். உங் களைத் தேடிக் கண்டுபிடிக்க இருபது பெயரை அனுப் பினேன்.

கி. மிகவும் சந்தோஷம். உடனே இன்றிரவே புறப்பட்டு கப்ப லேறிச் செல்வதைவிட உத்தமமான சந்தோஷம் வேறென் றையும் விரும்பவில்லை நான்.

[போகிருர்கள்.]

காட்சி முடிகிறது

ஏழாம் காட்சி

இடம், மணிபுரம் சரோஜினியின் வீட்டிலோர் அறை
எக்காளம்.

சரோஜினியும் மார்த்தாண்ட சேதுபதியும் தங்கள்
பரிவாரங்கள் சூழ வருகின்றனர்.

ச. போய்த் திரைகளைத் தள்ளி, பெட்டிகளைக் காட்டுங்கள், இந்த உத்தம மன்னருக்கு.—இனி உமக் கிஷ்டமானதைத் தொடும்.

மா. முதற் பெட்டி.—பொன்னு லானது. இதன்மீது "என்னை விரும்புவோன் பலர் விரும்புவதைப் பெறுவான்" என்று எழுதி யிருக்கிறது. இரண்டாவது—வெள்ளி. "என்னை விரும்புவோன் தன் யோக்கியதைக்குத் தக்கப்படி பெறுவான்" என்று உறுதி கூறுகிறது. இந்த மூன்றுவது பெட்டி, ஒளியிலா ஈயத்தா லாயது, "என்னை விரும்புவோன் தனக்குற்றதை யெல்லாம் அளிக்கவும் அழிக்கவும் துணிய வேண்டும்," என்று, மட்டி ஈயத்திற்குத் தகுந்த மட்டி புத்திதான் கூறுகிறது. இவற்றுள் சரியானதைத் தொடுகின்றேனோ இல்லையோ, என்பது எனக்கு என்ன வாய்த் தெரிகிறது?

ச. அரசே, இவற்றுள் ஒன்றில் என்படம் இருக்கின்றது; அதைத் தொடுவீராயின், என்னையும் அதனோடு பெறலாம்.

மா. எந்த தெய்வமாவது என் புத்திக்குத் துணையா யிருக்குமாக!—எதோபார்க்கிறேன்.— இவைகளின் மீது எழுதியிருப்பதைத் திரும்பவும் வாசித்துப் பார்க்கிறேன்.—இந்த ஈயப் பெட்டி என்ன சொல்லுகிறது; "என்னை விரும்புவோன் தனக் குற்றதை யெல்லாம் அளிக்கவும் அழிக்கவும் துணிய வேண்டும்." அளிக்க வேண்டும்! எதற்காக? ஈயத்திற் காகவா இழக்கத் துணிய வேண்டும்? இந்தப் பெட்டி பய முறுத்துகிறது! எல்லாவற்றையும் இழக்கத் துணிவ

லென்றால் அதற்கேதாவது நல்ல பிரயோஜனத்தை அடையக் கூடும் என்று கோரியே, அங்ஙனம் செய்கிறார்கள் மனிதர்கள். பொன் போன்ற மேலான மனம் இந்த இழிவாகிய ஈயத்தைக் கண்டு இரங்காது, ஆகவே நான் இந்த ஈயத்திற்காக எதையும் கொடுக்கவுமாட்டேன், இழக்கத் துணியவுமாட்டேன். சுத்த வெண்ணிற முடைய வெள்ளி என்ன சொல்கிறது பார்ப்போம்: " என்னை விரும்புவோன் தன் யோக்கியதைக்குத் தக்கபடி பெறுவான் ".—தன் யோக்கியதைக்குத் தக்கபடி? பொறு இங்கே, மார்த் தாண்டா, உனது யோக்கியதையைப் பட்சபாதக மில்லாமல் ஆராய்ந்துபார். உன்னுடைய மதிப்பின்படி உன் யோக்கியதையை ஆராயும் பட்சத்தில் நீ பெறத்தக்கவனே! ஆயினும் நான் பெறத் தக்கது இந்தப் பெண்மணி வரையில் எட்டாமற் போகலாமே? ஆயினும் என் யோக்கியதையைப் பற்றி நான் சந்தேகிப்பது என்னை நானே இழிபடச் செய்வ தாகும்!—என் யோக்கியதைக்குத் தக்கதெது? ஏன், இந்தப பெண்மணிதான்!—குலத்திலும், குடிப்பிறப்பிலும், செல்வத்திலும், குணத்திலும் இவளைப் பெறத் தக்கவனே! இவைகளை யெல்லாம்விட, என் காதலால் இக் கன்னிகையைப் பெறத்தக்கவன் நான். மேலே போகாமல் இவ்விடம் கோரினால் என்ன? இன்னொரு முறைபார்ப்போம் இந்தப் பொன்னில் என்ன வரைந்திருக்கின்றதென்று : " என்னை விரும்புவோன் பலர் விரும்புவதைப் பெறுவான்."- ஏன், பலர் விரும்புவது இப்பாவையையே! உலகமுழுவதும் இவ் வுத்தமியை இச்சிக்கின்றது! நாலிலத்து நான்கு திக்குகளிலிருந்து, உயிருடைய இத் தேவதையைத் தரிசித்து வழிபட வருகின்றனரே! தண்டக ஆரணியமும், விசாலமான அரபி தேசமும், இக் கட்டழகியைக் காணவரும் அரசகுமாரர்களுக்குப் பெரும் பாதைக ளாயின! வானத்தையும் மதியாது தன் திரைகளால் காறி யுமிழும் சமுத்திரராஜனாலும், அயல்நாட் டரசர்களைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் அழகிய சரோஜினியைக் காண, ஆற்றைக் கடந்து

வருவதுபோல் வருகின்றனர்.—இந்த மூன்று பெட்டிகளுள் ஒன்றில் இவ் வணங்கின் அழகிய பட மிருக்கின்றது. ஈயப் பெட்டியில் அப்படம் வைக்கப்பட் டிருக்குமா? இழிவாக இவ்வாறு எண்ணுதலும் பாதக மாம்! சமாதியில் வைக்கும் படியான அவளது சாயச்சேலையை மறைக்கவும் தக்கதல்ல. அல்லது, நல்ல சுத்தமாக்கப்பட்ட பொன்னின் விலைக்குப் பத்திலொரு பங்கு ஆகாத வெள்ளிப் பெட்டியில், அவளுருவம் வைக்கப்பட் டிருக்கின்றதாக நான் எண்ணுவதோ? அப்படி எண்ணுதலே பாபமாம்! ஒப்புயர் வில்லா இம் மாணிக்கம் உத்தமமான தங்கத்தி லன்றி வைக்கப்படாது. சிங்களத்தில் தேவஸ்திரீயின் உருவமைந்த பொன் நாணயம் ஒன்றுண்டு.-ஆனால் அந்த உருவம் பொன்னின்மீது செதுக்கப் பட்டிருக்கிறது. இங்கோ, ஒரு அப்சரக் கன்னிகை பொன்னும் படுக்கையில் படுத் துறங்குகிருள்.—சாவியைக் கொடு என்னிடம், இதையே நான் கோருகின்றேன்; என் அதிர்ஷ்டத்தின்படி யாகுக!

ச, இதோ, வாங்கிக் கொள்ளும் அரசே, என் உருவம் உள்ளே யிருக்குமாயின், நான் உம்முடையவளே!

மா. [பொன் பெட்டியைத் திறந்து] ஆ! கோரம்! இதென்ன இருக்கிற திங்கே? யமனுடைய கபாலம்! இதன் ஓட்டைக் கண்ணில் காகிதச் சுருள் ஒன்றிருக்கின்றது! எழுதி யிருக் கின்றதைப் படிக்கிறேன், [படிக்கிருன்.]

“மின்னுவதெல்லாம் பொன்னல்லவெனச்
சொன்னதை நீயும் பன்முறை கேட்டாய்;
என் வெளி யுருவைப் பார்த்திடவே தம்
இன் னுயிரைப் பலர் விற்பனை செய்தனர்;
பொன்மூலாம் கோரியிற் புழுக்கள் வசிக்கும்.
வன்மனம் போலவே விவேக முடைத்தாய்
உருவினி லிளமையும் அறிவினில் முதுமையும்
இருந்ததேயேல் இத்திறம் உத்தரம் பெருய்நீ
வருவாய் சுகமாய் வாழ்ந்த துன் மணம்.”

வாழ்ந்தது தான்! பட்டதெல்லாம் படு சூரண மாயிற்று. தாபம் போய்த் தணிக்கை வரவேண்டியது தான். சரோஜினி, நான் வருகிறேன்.--பன் முறை சொல்லிப்போக என் னிதயம் பொருது. தோற்றவர்கள் கூறிப்போகும் மாற்றம் இது தான். [தன் பரிவாரங்களுடன் போகிருன்.]

ச. சுலபத்தில் தொலைந்தது.—திரையை மூடிவிடுங்கள், போங்கள். இவரைப்போன்ற நிறமுடையவர்களெல்லாம் இம் மாதிரியே கோருவாராக! [எல்லோரும் போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

எட்டாம் காட்சி.

இடம்—வாணீபுரம். ஒரு வீதி.

சாம்பநாதனும், சோமேஸ்வரனும் வருகிருர்கள்.

சா. ஏன் அப்பா, நான் தான் பானுசேனர் கப்பலேறிச் சென்றதைக் கண்டேனே; அவருடன் கிரிஜாநாதரும் போயிருக்கிருர்; அவர்களுடைய கப்பலில் லீலாதரர் இல்லையென்று நான் உறுதியாய்ச் சொல்வேன்.

சோ. பாதகனுன ஜைனன் தன் கூக்குரலினுல் அரசனை எழுப்ப, அவனுடன் போனுர் அரசர், பானுசேனர் கப்பலைத் தேடிப் பார்க்க.

சா. அவன் அதிக காலம் பொறுத்து வந்தான், அவன் வருமுன் கப்பல் புறப்பட்டுவிட்டது. ஆனுல், அவ்விடத்தில், லீலாதரரும் அவர் காதலியாகிய ஜலஜாவும் ஒரு தோணியிற் பார்க்கப்பட்டதாக அரசருக்குத் தெரிவித்தார்கள். அன்றியும், பானுசேனர் சென்ற கப்பலில், அவர்களிருவரும் இல்லையென்று அரசருக்கு அநந்தநாதர் தன் உறுதி மொழி கொடுத்தார்.

சோ. தெருவுகளில் அந்த ஜைன நாய், விகாரம் பிடித்தவன்போல், மதி கலங்கினவனாய், குணம் மாறி மாறி, கூக்குரலிட்டுக் கோலாகலமாய், நடித்ததுபோல், நான் வேறெங்கும் கேட்டதே யில்லை, "என் பெண்ணே ! ஹா ! என் பொன்னே ! ! ஹா ! என் பெண்ணே ! ஒரு ஹிந்துவுடன் ஓடிப்போய்விட்டாளே ! ஹா ! என் மிலேச்சப் பொன்னே ! நியாயமே ! நீதிச் சட்டங்களே !—என் பொன்னே ! என் பெண்ணே ! முத்திரை வைக்கப்பட்ட ஒரு பை, முத்திரை யிடப்பட்ட இரண்டு பொன் பைகள் !—என் பொன்னை என்னிடமிருந்து என் பெண்ணே திருடிக்கொண்டு போய்விட்டனளே ! அன்றியும் நகைகள் !—இரண்டு ரத்னங்கள் ! விலை யிலாத இரண்டு சிறந்த ரத்னங்கள் !-என் பெண் திருடிக்கொண்டு போய்விட்டனளே ! நியாயமே !—என் பெண்ணைக் கண்டு பிடி ! அந்த ரத்னங்களும் அந்தப் பொன்னும் அவள் வச மிருக்கின்றன !"

சா. ஏன், அவன் ரத்னமே, அவன் பெண்ணே, அவன் பொன்னே, என்று கூவிக்கொண்டு வாணீபுரத்திலுள்ள சிறு பிள்ளைகளெல்லாம் பின் தொடர்கின்றனர். அவனை.

சோ. நமது அநந்தநாதர் குறித்த தவணைப்படிச் செலுத்துவாராக, இல்லாவிடின், இதற்காக அவர் கஷ்டப்பட வேண்டிவரும்.

சா. ஆமாம், நன்றாய் ஞாபகப்படுத்தினாய் ; நான் நேற்றைத் தினம் பஸ்சிம தேசத்தான் ஒருவனுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தேன் ; அவன், நமது தேசத்துச் செல்வம் நிறைந்த ஒரு கப்பல், பஸ்சிம நாட்டிற்கும் சிங்களத்திற்கும் இடையிலுள்ள நெருக்கமாம் சமுத்திரத்தில், மூழ்கிப்போனதாகச் சொன்னான். இதை அவன் எனக்குச் சொன்ன பொழுது அநந்தநாதர் ஞாபகம் எனக்கு வர, அவருடைய கப்பலா யிராதிருக்குமாக, என்று என்மனத்திற்குள் கோரிக் கொண்டேன்.

சோ. நீ கேட்டதை அநந்தநாதருக்குத் தெரிவித்தல் நலமெனத் தோற்றுகிறது; ஆயினும் திடமென்று கூறுகிறேன்; ஏனெனில் அது அவருக்கு வருத்தத்தை யுண்டு பண்ணினும் பண்ணும்.

சா. அவரைவிட உத்தமமான மனிதன் இம்மண்ணுலகிலேயே கிடையாது. பானுசேனரும் அநந்தநாதரும் ஒருவரைவிட் டொருவர் பிரியும்பொழுது நான் பார்த்தேன் ; பானுசேனர் கூடிய சீக்கிரத்தில் திரும்பிவர முயல்வதாகக் கூறினார் அவரிடம்; "அப்படிச் செய்யவேண்டாம் பானுசேனா, என் பொருட்டு அவசரப்பட்டு வேலையைக் கெடுக்காதே. பக்குவமாம் காலம் வரையில் அங்கே தங்கியிரு; நான் ஜைனனுக்கு எழுதிக் கொடுத்திருக்கும் பத்திர விஷயம், காதலோடு கூடிய உன் மனத்தில், நுழையவேண்டாம். மனத்தில் சந்தோஷத்துடனிரு; உனது காதலியின் காதலைப் பெறுதற்குச் செய்யவேண்டிய காரியங்களில் உனது மனத்தை முக்கியமாய்ச் செலுத்துவாயாக. அவ்விடம் உனது சவுகர்யத்திற்குத் தக்கபடி உனது காதலை வெளிப்படுத்தக்கூடிய நன் மார்க்கங்களில் முயல்வாயாக" என்று பதில் உரைத்தார்; இதைக் கூறி முடிந்ததும், தனது கண்களில் நீர் ததும்ப, முகத்தைத் திருப்பிக்கொண்டு, பின் புறமாகத் தன் கரத்தை நீட்டி, அனைவரும் அதிசயப்படக்கூடிய அதிக அன்புடன், பானுசேனர் கரத்தைப் பற்றினார்; இங்ஙனம் அவர்கள் ஒருவரைவிட் டொருவர் பிரிந்தனர்.

சோ. உலகத்தில் அவர் பற்று வைத்திருப்பது, பானுசேனர் ஒருவர் பொருட்டே என எண்ணுகிறேன். நாம் போய் அவரைத் தேடிக் கண்டுபிடித்து, அவரது மனத் துயரை எந்த வேடிக்கை விநோதத்தினாலாவது மாற்றுவோமாக, வாரும் விரைவில்.

சா. அங்ஙனமே செய்வோம். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

ஒன்பதாம் காட்சி.

இடம்—மணிபுரம். சரோஜினியின் வீட்டில் ஓர் அறை.

நீலகேசி ஒரு வேலையாளுடன் வருகிறாள்.

நீ. *சீக்கிரம்! சீக்கிரம்! நான் உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன், திரையைத் தள்ளிவிடு சரியாக: அருகபுரத் தரசன் சத்தியம் செய்துவிட்டு, இதோ வந்துவிட்டார் கோருவதற்காக.*

எக்காளம். அருகபுரத்தரசனும், சரோஜினியும் தங்கள் பரிவாரங்கள் சூழ வருகின்றனர்.

ச. *அரசே, அதோ பாரும்.—பெட்டிகள் இருக்கின்றன. என் படமிருக்கும் பெட்டியை நீர் கோருவீராயின் உடனே நமது கலியாணச் சடங்குகள் நிறைவேற்றப்படும். நீர் அதில் தவறிப்போவீராயின், மறுபடி வார்த்தையாடாது, உடனே இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போகவேண்டும்.*

அ. அ. *மூன்று விஷயங்களை நான் கவனிப்பதாகச் சத்தியம் செய்திருக்கிறேன், முதலில், நான் எந்தப் பெட்டியைக் கோரினேன் என்பதை ஒருபொழுதும் ஒருவருக்கும் வெளியிடக்கூடாதென்றும், பிறகு, சரியான பெட்டியைக் கோராவிட்டால், மரிக்குமளவும் மற்றொரு மாதை வரிப்பதில்லையென்றும், கடைசியில், என் துரதிர்ஷ்டத்தால் நான் தவறிப்போவேனாயின், உடனே உன்னைவிட்டுப் பிரிந்து ஊர்போய்ச் சேரவேண்டும் என்பதே.*

ச. *பாக்கிய ஹீனையாகிய என்னைப் பாணிக்கிரஹணம் செய்துகொள்ளக் கோரி வரும் ஒவ்வொருவரும், இம்மாதிரிதான் சத்தியம் செய்யவேண்டியிருக்கிறது.*

அ. அ. *நானும் அதன் பொருட்டே ஆயத்தப்பட்டு வந்திருக்கிறேன். என் ஹிருதயத்தின் கோரிக்கையின்படி அதிர்ஷ்டமும் கைகூடுமாக!—பொன், வெள்ளி, மட்ட ஈயம். "என்னை விரும்புவோன் எல்லாவற்றையும் கொடுக்கவும் இழக்கவும்*

துணிய வேண்டும்.'' உன்பொருட்டு நான் கொடுப்பதன் முன், அல்லது இழக்கத் துணியுமுன், நீ இதைப்பார்க்கி லும் கொஞ்சம் அழகாய்த் தோற்றவேண்டும். பொன் பெட்டி என்ன சொல்கின்றது? ஆ! ஏதோ, பார்க்கிறேன்; "என்னை விரும்புவோன் பலர் விரும்புவதைப் பெறுவான்'' பலர் விரும்புவதை''—அந்தப் பலர் என்கிற பதத்திற்கு, மூடர் என்று அர்த்த மாயினு மாகும், உலகத்தில் சாதா ரண ஜனங்கள், உள்ளே யிருப்பதை ஆராய்ந் தறியாது, தூக்கணாங் குருவியானது அபாயம் நேரிடுவதற்கு நேர் வழி யில், சுவரின் வெளிப்புறத்தில், காற்றடிக்கும் பக்கத்தி லேயே கூடு கட்டுவதுபோல், தங்களுடைய மூடக் கண்கள் அறிவிப்பதைவிட அதிகமாய் ஆராய்ந் தறியாது, வெளிப் பார்வையைக் கொண்டு விரும்புவார்கள். பலர் விரும்பு வதை நான் விரும்பேன்; ஏனெனில், சாதாரண ஜனங்க ளுடன் ஒருங்கு சேர்ந்து நாகரீகமற்ற மனிதக் கூட்டத்தில் நானும் ஒருவனாக மதிக்கப்படுவது எனக் கிஷ்ட மில்லை.—சரி, ஆனால் வெள்ளிப் பெட்டியிடம் திரும்புவோம். உன்மீது எழுதியிருக்கும் பட்டத்தை மறுபடியும் தெரிவிப்பாய் எனக்கு. "என்னை விரும்புவோன் தன் யோக்கியதைக்குத் தக்கபடி பெறுவான்.'' நன்றாகச் சொல்லப்பட்டது. தன் னிடத்தில் யோக்கியதை யின்றி, அதிர்ஷ்டவசத்தால் மரி யாதையைப் பெறலாமென்று மதித்துச் செல்கின்றவ னெவன்? தனக்குத் தகாத கவுரவத்தை வஹிக்கவேண்டு மென்று தரணியில் ஒருவனும் ஆசைப்பட வேண்டாம். ஹா! உலகத்தில் உத்தம ஸ்திதிகளும், உன்னத பதவி களும், உத்தியோகங்களும், துர்வழியில் சம்பாதிக்கப்படா திருக்குமாக! களங்க மற்ற கவுரவத்தை ஒருவன் தன் நற் குணத்தைக் கொண்டே பெறுவானாக! அப்படி யிருக்கு மாயின், இப்பொழுது காலால் நடப்பவர்கள் எத்தனை பெயர்கள் கனக தண்டி ஏறவேண்டும்! இப்பொழுது எஜ மானர்களா யிருக்கும் எத்தனை பெயர் வேலைக்காரர்களா யிருக்கவேண்டும்! இப்பொழுது உத்தமர்கள் என்று மதிக்

கப்படுபவர்களுள் எத்தனை இழிந்தவர்களைப் பொறுக்கி எடுத்துவிட வேண்டும்! தவிட்டிலிருந்து அரிசியைப் பொறுக்குவதுபோல், காலகதியால் அழிந்தவர்களுக்குள், எத்தனை உத்தமர்களைப் பொறுக்கி எடுக்கலாம், புதிதாய்ச் சோபிக்கும்படியாக? சரி, அதிருக்கட்டும், நான் தீர்மானம் பண்ணவேண்டும். "என்னை விரும்புவோன் தன் யோக்கியதைக்குத் தக்கபடி பெறுவான்." என்னிடம் யோக்கியதை இருப்பதாக மதிக்கின்றேன். இதன் சாவியைக் கொடு; உடனே இதைத் திறந்து, இதில் என் அதிர்ஷ்டத்தைக் கண்டறிகிறேன்.

[வெள்ளிப் பெட்டியைத் திறக்கிறான்.]

ச. அதிலிருப்பதைப் பார்ப்பதற்கு அத்தனை நேரமேன்?

அ. அ. என்ன இருக்கின்றதிங்கே? எனக்கொரு காகிதச் சுருளைத் தருகிற முழு முண்டத்தின் படம் ஒன்று! அதைப் படித்துப் பார்க்கின்றேன்.—சரோஜினிக்கும் உனக்கும் எவ்வளவு பேதமிருக்கின்றது! நான் கோரியதற்கும் பெறுவதற்கும் எவ்வளவு வித்யாசம்! "என்னை விரும்புவோன் தன் யோக்கியதைக்குத் தக்கபடி பெறுவான்." முழு முண்டத்தின் தலை தவிர வேறொன்றும் பெறுதற்குத் தக்கவனல்லவா? இதுதானா எனக்குப் பரிசு? இதைவிட மேலானதைப் பெற எனக்கு யோக்கியதை இல்லையா?

ச. குற்றம் செய்வதும், தீர்ப்பு செய்வதும், குவலயத்தில் வெவ்வேறு தொழில்களாம்; அன்றியும் ஒன்றுக்கொன்று விரோதமான சுபாவமுடையது.

அ. அ. என்ன இருக்கிறது இங்கு?

"பழுதற அனலிலிது பரிசோதித்த தெழுவிசை;
பாரினில் தவறின்றி பகுத்தறியும் புத்தியும்
எழுவிசைச் சோதித்தே ஏற்றபடியாகும்;
நிழலை முத்தமிடும் நிர்மூடரு முண்டேதான்,
அன்னவருக்கோ அத்துணை தான் சுகமும்

வெள்வேடம்பூண் வெறியரு முண்டே,
அம்மா திரியே இதுவு மாகும்
காதலி எவளைக் கைப்பிடித்தாலு நீர்,
உமது தலையாய் உலகினி லிருப்பேன்.
உடனே போகலாம், வேலையு முடிந்தது !"
இன்னும் இருப்பனேல், இதனிலும் மூடனுவேன்.
மணக்க வந்தது, மடத்தலை யொன்றுடன்,
மறுத்தும் போவது மடத்தலை இரண்டுடன்.

பெண்மணி, விடை யளிப்பாய் ; செய்த சத்தியம் பிசகேன் ; என் வருத்தத்தைப் பொறுமையோடு சகிப்பேன்.

[தன் பரிவாரங்களுடன் போகிருன்.]

ச. இப்படித்தான், விளக்கு விட்டிலை எரித்தது ! அந்தோ ! என்ன சுத்த முட்டாள்கள் ! கோருகிற சமயத்தில், தங்கள் புத்தியினுலேயே தோல்வி யடையும் படியான யுக்திமாத்திரம் இருக்கின்றது.

நீ. "தலைவிதியின்படியே தாரமும் தண்டனையும்", என்கிற பழமொழி வீண் போகுமா ?

ச. வா, போவோம்.—திரையைத் தள்ளிவிடு, நீலகேசி.

ஒரு வேலையாள் வருகிருன்.

வே. எங்கே என் எஜமானி ?

ச. இதோ ; என்ன வேண்டும் உனக்கு ?

வே. அம்மணி, தமது வாசற்படியில் வாணீபுரத்து வாலிபர் ஒருவர் இழிந்திருக்கிருர்; தனது எஜமான் வரவைத் தான்முன்னதாகத் தெரிவிக்கவந்ததாகக் கூறுகிருர். அவரிடமிருந்து தக்க மரியாதைகளுடன் வந்திருக்கிருர். உபசார வார்த்தைகளும் உன்னத மொழிகளும் அன்றி, உயர்ந்த வெகுமதிகளையும் கொண்டுவந் திருக்கிருர். இவரைப்போன்ற உண்மையான காதலுக்குத் தகுந்த உத்தமமான தூதனை,

இதுவரையில் நான் கண்டதில்லை. சுகத்தைத் தரும் இளவேனிற் காலம் வந்துவிட்டது என்பதைக் குறிப்பதற்காகத் தென்றற் காற்று முன்னால் வீசுவதேபோல், தன் எஜமானனுக்கு முன்பாக இத்தூதர் வந்திருக்கிறார்.

சு. போதும் நிறுத்து, வேண்டுகிறேன் உன்னை ; இவ்வளவு அதிகமாய் நீ அவரைப்பற்றிப் புகழ்வதைப் பார்த்தால், சீக்கிரத்தில், அவர் என்னுடைய பந்து, என்று கூறி முடிப்பாயென அஞ்சுகிறேன் சற்று.—வா, வா, நீலகேசி, இவ்வளவு மரியாதையுடன் வருகிற வேகமுடைய மன்மதன் தபாலைக் காண விரும்புகிறேன் மிகவும்.

நீ. அந்த மன்மதன் கிருபையால் அவர் பானுசேனரா யிருப்பாராக ! [எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் அங்கம்

முதற் காட்சி

இடம்—வாணீபுரம். ஓர் வீதி.

சோமேஸ்வரனும் சாமிநாதனும் வருகிறார்கள்.

சோ. என்ன, ஐயா, இப்பொழுது ரேவில் விசேஷம் ?

சா. ஏன், விலை யுயர்ந்த சரக்குகள் நிறைந்த அநந்தநாதருடைய கப்பலொன்று நடுக் கடலில் முழுகிப்போனதாக எல்லோரும் பேசிக்கொள்ளுகிறார்கள். அது பொய்யென்று மறுப்பாரைக் காணோம். முழுகிப்போன இடத்தின் பெயர் பாம்பன் குடா என்று சொல்கிறார்களென நினைக்கிறேன். அது மிகவும் அபாயகரமான இடமாம். அவ்விடத்தில், அநேகம்

பெரிய கப்பல்கள் இதுவரையில் முழுகிப் புதைந்து கிடக்கின்றனவாம், வதந்தி உரைப்பதை உண்மையென நாம் நம்பக்கூடுமாயின்.

சோ. மற்ற அநேக விஷயங்களில் பொய்யா யிருப்பதுபோல், இதிலும் வதந்தி பொய்யா யிருக்குமாக. ஆயினும் வீண் வார்த்தை யாடாமல், வெறும் வார்த்தைகளில் காலம் போக்காமல், உண்மையைக் கூறுமிடத்து,—நமது தர்ம புருஷனுகிய அநந்தநாதர்—உத்தமனை அநந்தநாதர்—அவருடைய பெயருடன் சேர்த்துச் சொல்லத் தகுந்த யோக்யதையுடைய பட்டம் ஒன்று இருக்கலாகாதா !—

சா. முடிவைச் சொல்லும், சீக்கிரம்.

சோ ஆ !—என்ன கேட்கின்றீர் ?—ஏன், முடி வென்னவென்ருல், அநந்தநாதருடைய கப்பலொன்று அமிழ்ந்து போனது தான்.

சா. இதுவே அவருடைய துர் அதிர்ஷ்டத்தின் முடிவும் ஆகுமெனக் கோருகிறேன்.

சோ. 'ததாஸ்து' என்று நான் சொல்லும்முன், மாறுபாடு வடிவு கொண்ட இந்த மாயாவி வருகிருன்.

ஷாம்லால் வருகிருன்

ஷாம்லால், என்ன விசேஷம்? வர்த்தகர்களுக்குள் ஏதாவது விசேஷம் உண்டா ?

ஷா. என் பெண் வீட்டைவிட்டு ஓடிப்போன விஷயம் உங்களுக்குத்தான் தெரியுமே. உங்களுக்குத் தெரிந்தபடி வேறு யாருக்குத் தெரியும் ?

சா. அது வாஸ்தவம் ; என் வரைக்கும், அவள் பறந்துபோவதற்காக பட்சி இறகுகள் செய்துகொடுத்தானே, அந்த தையற்காரன் எனக்கு நன்ருய்த் தெரியும் ?

சோ. அவன் வரைக்கும், ஷாம்லாலுக்கு, அந்தப் பட்சிக்கு இறகு உண்டாகிவிட்டது என்று தெரியும். அந்தப் பருவம் வந்த

பிற்பாடு, அந்த ஜாதிப் பட்சிகளெல்லாம் தாயைவிட்டுப் பறந்து போவது சுபாவம்தான்.

ஷா. அப்படிச் செய்ததற்காக அவள் நாசமாய்ப் போகட்டும் !

சோ. உன்னை நியாயாதிபதி யாக்கினால் அப்படித்தான் தீர்மானம் செய்வாய்.

ஷா. என் சொந்த உதிரமும் ஊனும், எனக்கே விரோதியா கிறதா ?

சா. கிழப் பிணமே ! இன்னும் அந்த நினைவா ? இத்தனை வய தாகியும் இந்த விரோதமா ?

ஷா. என் பெண் என்னுடைய சொந்த உதிரமும் ஊனும் என்று சொல்கிறேன்.

சா. உன் உடலுக்கும் அவள் உடலுக்கும், அட்ட கரிக்கும் அழ கிய தந்தத்திற்கும் உள்ள பேதத்தைவிட, அதிக பேத மிருக்கிறது. அழகிய கோவைக்கும், அவிந்த கொள்ளிக் கும் உள்ள வர்ண பேதத்தைவிட, உங்களிருவருடைய உதிரத்திற்கும் அதிக வித்யாச மிருக்கிறது.—அதிருக்கட் டும், அநந்தநாதருக்குக் கடலில் ஏதாவது நஷ்டம் நேரிட்ட தாகக் கேள்விப்பட்டாயா இல்லையா? சொல் எங்களுக்கு.

ஷா. அதோ, அது ஒரு பேரிழவு. கையிலே இருக்கிறதை யெல் லாம் அழித்துவிட்டு திவாலானான்; தலையைக் காட்ட மாட்டேன் என்கிறான் ரேவில்; முன்பெல்லாம் என்ன ஒழுங் காக வருவான் கடைத் தெருவில், பிச்சைக்காரன்! அவன் பத்திரத்தின்மீது கவனம் வைக்கட்டும்! என்னை அநியாய வட்டி வாங்குபவன் என்று ஏளனம் செய்தவனல்லவா ? அவன் பத்திரத்தின்மீது கவனம் வைக்கட்டும்! பணத்தை வட்டியில்லாமல் பட்சத்துக்காகக் கொடுப்பவனல்லவா ? அவன் பத்திரத்தின்மீது கவனம் வைக்கட்டும் !

சா. இதென்ன! அவர் பத்திரத்தின்பிரகாரம் கொடுப்பதற்குத் தவறினுல் அவருடைய மாம்சத்தையோ எடுத்துக்கொள்ளப் போகிருய்? சீ! அது எதற் குபயோகப்படும்?

ஷா. மீன் பிடிக்க! அது வேறென்றின் பசியைத் தீர்க்காவிட்டாலும் என் க்ஷாத்திரத்தின் பசியையாவது தீர்க்கும்! அவன் என்னை அவமானப்படுத்தி, ஒரு அரைகோடி பொன் நஷ்டம் விளைத்திருக்கிருன். என் நஷ்டத்தைக் கண்டு நகைத்திருக்கிருன். நான் லாபம் பெறுவதைப் பார்த்து ஏளனம் செய்திருக்கிருன். என் ஜாதியைப் பழித்திருக்கிருன். என் லேவாதேவிகளுக் கெல்லாம் குறுக்காக வந்து கெடுத்திருக்கிருன். என் சினேகிதர்கள் பிரீதியையெல்லாம் தணித்திருக்கிருன். என் பகைவரை யெல்லாம் தூண்டிவிட்டிருக்கிருன்! இவ்வளவுக்கும் அவனுடைய காரணம் என்ன?—நான் ஒரு ஜைனன்! ஜைனனுக்குக் கண்களில்லையா? ஜைனனுக்குக் கைகளில்லையா? அவயவங்க ளில்லையா? அந்தக்கரணங்க ளில்லையா? இந்திரியங்களில்லையா? ஆசாபாசங்க ளில்லையா? ஹிந்துவைப்போலவே ஒரே உணவைக் கொள்கிற தில்லையா? ஆயுதத்தால் காயப்படுத்திறல் இவனுக்கிருப்பது போலவே அவனுக்கும் நோயிராதா? இவனுக்கு வருவதுபோலவே அவனுக்கும் வியாதி வருவதில்லையா? ஒரேவித சிகிச்சையால் இருவரும் சுவஸ்தப்படுகிறதில்லையா? வெயிலினுல் தாபமும், மழையினுல் குளிர்ச்சியும், இவனுக் குண்டாவதுபோலவே அவனுக்கு முண்டாவதில்லையா? நீங்கள் ஊசி எடுத்து எங்களைக் குத்திறல் எங்களுக்கு இரத்தம் வருவதில்லையா? நீங்கள் எங்களுக்குக் கூச்சம் காட்டினுல் நாங்கள் நகைப்பதில்லையா? எங்களுக்கு நீங்கள் விஷம் கொடுத்தால் நாங்கள் சாவ தில்லையா? இதெல்லாமிருக்கும்பொழுது, நீங்கள் எங்களுக்குத் தீங்கிழைத்தால் நாங்கள் பழி தீர்த்துக் கொள்ளமாட்டோமா? மற்ற விஷயங்களிலெல்லாம் உங்களை யொத்திருந்தால், இதிலும் உங்களை ஒத்திருக்கிறோம். ஒரு ஜைனன் ஒரு ஹிந்துவுக்குக் கெடுதிசெய்தால், எப்படிப் பொறுக்கின்றுன்?

உடனே பழி வாங்குகிறான். ஒரு ஹிந்து ஜைனனுக்குக் கெடுதி செய்தால், ஹிந்து நடந்து காண்பித்த வழியின் படியே, ஜைனன் அதை எப்படிப் பொறுக்க வேண்டும்? ஏன், உடனே பழி வாங்க வேண்டியதுதான். பழி வாங்கும் விதத்தை நீங்கள் எனக்குக் கற்பித்தபடி, நானும் செய்து முடிக்கிறேன்; அதுவும் நீர் கற்பித்ததை விர்த்திசெய்து காட்டுகிறேன்.

ஒரு வேலையாள் வருகிறான்,

வே. ஐயா, என்னுடைய எஜமானர், அநந்தநாதர், வீட்டி லிருக்கின்றார்; உங்களுடன் ஏதோ பேசவேண்டுமென்று விரும்புகிறார்.

சா. அவரைத் தேடித்தான் நாங்கள் இங்கும் அங்குமாய் அலைந்துகொண் டிருந்தோம்.

சோ. இதோ இவன் ஜாதி மனுஷ்யன் இன்னொருவன் வருகிறான். இவ் விருவர்களுக்குச் சமானமான மூன்றாவது ஆசாமி வேண்டுமானால், க்ஷாம தேவதைதான் மாறுபாடு வேஷம் போட்டுக்கொண்டு வரவேண்டும்.

[சோமேஸ்வரன், சாம்பநாதன், வேலையாள், போகிறார்கள்.]

தூப்லால் வருகிறான்.

ஷா. என்ன சமாசாரம், தூப்லால்? தூத்துக்குடியிலிருந்து ஏதாவது சமாசாரம் வந்ததா? என் பெண்ணைக் கண்டுபிடித்தனையா?

தூ. நான்தேடிப்போன இடங்கள் அநேகத்தில், அவளைப்பற்றி கேள்விப் பட்டேனே யொழிய, அவளை நேராகக் கண்டு பிடிக்கவில்லை.

ஷா- ஐயோ! போச்சே! போச்சே! போச்சே! போச்சே! போச்சுது, இரண்டாயிரம் பொன் கொடுத்து பிறங்கு கோட்டை

யில் வாங்கிய வயிரம் போச்சுது! இப்பொழுதுதான் நம் முடைய ஜாதிக்கு சனியன் பிடித்தது! இதுவரையில் என்னை வந்து அது பிடியாம லிருந்தது.—அது ஒரு இரண் டாயிரம் பொன்; இன்னும் எத்தனை எத்தனை விலை யுயர்ந்த நகைகள்!—ஐயோ! அந்தப் பாழாய்ப்போன பெண் என் காலண்டை செத்துக்கிடந்தாலும் பெரிதல்ல; அந்த நகை கள் மாத்திரம் அவள் காதிலிருந்தால் போதுமெனக்கு! என் கண்ணெதிரிலேயே அவளுக்குப் பாடை கட்டினாலும் பார்த் திருப்பேன், பக்கத்திற் பணமிருந்தால் போதுமே! அவர் களைப்பற்றி ஒரு சமாசாரமும் தெரியவில்லையா? அது ஏனப்படி?—தேடிக் கண்டு பிடிக்க எவ்வளவு செலவாச் சுதோ அறிகிலேன் நான். ஐயோ! நஷ்டத்தின்பேரில் நஷ்டமா? திருடிக்கொண்டுபோனதெவ்வளவு! அவனைத் தேடிக் கண்டுபிடிக்க எவ்வளவு! ஐயோ! இவ்வளவுக்கும் திர்ப்தி ஒன்றையும் காணேம், பழி வாங்கல் ஒன்றையும் காணேம். உலகத்திலுள்ள துர் அதிர்ஷ்டமெல்லாம் என் தலையில்தானு வடியவேண்டும்! உலகத்திலுள்ள பெருமூச் செல்லாம் என்னுடையதுதானு? உலகத்திலுள்ள கண்ணீ ரெல்லாம் நான் சொரிவதுதானு?

தூ. ஆம், ஐயா; மற்றவர்களுக்கும் துரதிர்ஷ்டம் நேர்கிறது. நான் தூத்துக்குடியில் கேள்விப்பட்டபடி அநந்தநாதருடைய

ஷா. என்ன! என்ன! என்ன! துரதிர்ஷ்டமா?—துரதிர்ஷ்டமா?

தூ. —திருப்பாப்புலியூரிலிருந்து சரக்குகள் கொண்டுவந்த பெருங் கப்பலொன்று, முழுகிப் போய்விட்டதாம்.

ஷா. கடவுளுக்கு ஸ்தோத்திரம் செய்கிறேன்! கடவுளுக்கு ஸ்தோத்திரம் செய்கிறேன்! இது உண்மைதானே? இது உண்மைதானே?

தூ. முழுகிப் போன கப்பலினின்றும் தப்பிவந்த சில மாலுமி களுடன் நேராகப் பேசினேன் நான்.

ஷா. தூப்லால், தூப்லால், உனக்கு வந்தனம் செய்கிறேன்! நல்ல சமாசாரம் கொண்டுவந்தாய்! சுப சமாசாரம்! ஹா! ஹா! —எங்கே அது? தூத்துக்குடியிலா?

தூ. தூத்துக்குடியில், நான் கேள்விப்பட்டபடி உமது பெண் ஒரு இரவில் எண்பது பொன் செலவழித்தாளாம்.'

ஷா. ஐயோ! என் ஹிருதயத்தில் ஈட்டியால் குத்துகின்றாயே! போன பொன்னை நான் திரும்பிப் பார்க்கப்போகின்றதில்லை; உட்கார்ந்தபடி எண்பது பொன்! எண்பது பொன்!

தூ. என்னோடு அநந்தநாதருக்குக் கடன் கொடுத்திருக்கும் அநேகர் வாணீபுரத்துக்கு வந்தனர், அவர்கள் அவன் எப்படியும் திவால் எடுக்கவேண்டியதுதான், என்று சொல்லுகிறார்கள்.

ஷா, நிரம்ப சந்தோஷம்! விடுகின்றேனா பார் அவனை! உயிரோடு வதைக்கின்றேன்! மிகவும் சந்தோஷம்!

தூ. அவர்களில் ஒருவன் உன் மகளுக்குத் தான் கொடுத்த ஒரு கிளிக்குப் பதிலாக அவள் கொடுத்த ஒரு மோதிரத்தைக் காண்பித்தான்.

ஷா. அவள் பாழாய்ப்போக! தூப்லால், என்செவியில் நாராசத்தை விடுகிறாயே! அது என் மாணிக்க மோதிரமாயிற்றே, அது லலிதா விவாஹ மாவதன் முன்பு எனக்குக் கொடுத்ததாயிற்றே! கோடி கிளிகளைக் கொடுப்பதானாலும் அதை நான் கொடுத்திருக்கமாட்டேனே!

தூ. ஆனாலும், அநந்தநாதர் என்னவோ திவால்தான்.

ஷா. ஆம், ஆம். அது உண்மையே, மிகவும் உண்மையே! தூப்லால், போய் உடனே எனக்காக ஒரு நியாயவாதியை ஏற்பாடு செய்துவை. பதினைந்து நாள் முன்பாகவே பேசிவிடு. அநந்தநாதன் தவறிப் போனால், அவன் ஹிருதயத்தை வெட்டி எடுக்கிறேன். அந்தப் பாபி எப்படியாவது வாணீபுரத்தை

விட்டுத் தொலைந்தால், என் வியாபாரத்தை என் னிச்சை படி நடத்துவேன். போ! போ! தூப்லால், நமது மடத் தண்டை வந்து என்னோடுசேர். போ, அப்பா, தூப்லால்,—நம்முடைய மடத்தண்டை,—தூப்லால்! [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி.

இடம்—மணிபுரம். சரோஜினியின் வீட்டில் ஓர் அறை.

பானுசேனன், சரோஜினி, கிரிஜாநாதன், நீலகேசி, பரிஜனங்கள் வருகிறார்கள்.

ச. உம்மை நான் வேண்டிக்கொள்ளுகிறேன், பொறும். நீர் உமது அதிர்ஷ்டத்தைப் பார்ப்பதன்முன், ஒரு நாள் இரண்டு நாள் நிதானியும்; நீர் தவறுகக் கோரினால், உம்மை நானிழக்கவேண்டி வரும்; ஆகவே கொஞ்சம் நிதானியும். எனக்குள் ஏதோசொல்லுகின்றது, உம்மை நான் இழக்க மாட்டேன் என்று. ஆயினும் அது காதல் அல்ல.—வெறுப் பினால் இம்மாதிரியான யோசனைகள் உண்டாகமாட்டா, என் பது உமக்கே தெரியும். மங்கையர் மனத்தி லெண்ணுவ தொழிய, மற்றும் வாய் திறந்து மொழிதல் அழ கலாத தாயினும், என் உள்ளத்தை எங்கு நீர் நன்றாய் அறியா திருக்கிறீரோ என அஞ்சினவளாய், நீர் எனக்காகத் துணி வதன் முன், உம்மை ஒரு இரண்டு மாத காலம் இவ் விடத்தே தங்கியிருக்கச் செய்வேன். நீர் சரியாகக் கோரும் படி சொல்லிக்கொடுக்க எனக்குத் தெரியும்.—ஆனால் அப் படிச் செய்வே னாயின், செய்த சத்தியம் தவறினவளாவேன், அப்படி ஒருகாலும் நான் ஆகமாட்டேன்; ஆகவே நீர் என்னை இழக்க வேண்டி வரினும் வரும். அப்படி இழப்பீ ராயின் சத்தியம் தவறியாவது நடந்திருக்க லாகாதா, என்று அந் தப் பாபத்தைக் கோரும்படிச் செய்வீர் என்னை. ஐயோ!

உமது கண்கள் செய்யும் கொடுமையைப் பாரும்! அவைகள் என்மீது பட்டபோதே என்னை இரண்டு பிரிவாக்கின ! என்னில் பாதி பாகம் உம்முடையதாம்.—மற்றொரு பாதியும் உம்முடையதாம் — என்னுடையது என்று சொல்ல வேண்டும், ஆனல் என்னுடையதானல், உம்முடையதே ! ஆகவே, எல்லாம் உம்முடையதே ! என்ன கலிகால மிது ! சொந்தக்காரர்கள் சொத்தை அனுபவிப்பதற்குத் தடைகளைப் போடுகின்றதே ! ஆகவே உம்முடையதா யிருந்தாலும், உம்முடையதல்ல ! உம்முடைய தென்று ரூபியும்.— அதன் பொருட்டு அதிர்ஷ்ட வசமானது அரு நரகிற்குப் போகட்டும்,—நான் போகேன். நான் அதிக நாழிகை பேசுகிறேன், ஆயினும் அங்ஙனம் செய்வது காலத்தை நீட்டி வளர்த்தி, அதிகப்படுத்தி, உம்மைக் கோருமுன் நிதானிக்கும்படிச் செய்யும் பொருட்டே.

பா. நான் கோருகின்றேன் விரைவில்,—ஏனெனில் இப்படி இருப்பது, முட்பீப்பாயில் இருப்பதுபோ லிருக்கின்றதெனக்கு.

ச. முட் பீப்பாயிலா ? ஆனல் உமது காதலுடன் என்ன துரோகமும் உம்மிடத் திருக்கிறது சொல்லும்.

பா. என் காதலை நான் அனுபவிப்பேனே என்று எனக்குள் பயப்படுகின்றேனே, அந்த அவலக்ஷணமுடைய சந்தேகமெனும் துரோகம் தவிர வேறொன்றுமில்லை. என் காதலுடன் துரோகமானது கலந்திருப்பதை விட, நீரும் நெருப்பும் ஒருங்கே சிநேகமாய் ஓரிடத்தில் வாழும்.

ச. ஆம், ஆயினும் முட் பீப்பாயி லிட்டால், பலாத்காரமாம் மனிதர் எதையும் சொல்வதைப்போல், நீரும் இவ்வண்ணாய் கூறுகிறீர் என்று அஞ்சுகின்றேன்.

பா. எனக்கு உயிரளிப்பதாகச் சொல், உண்மையை உரைக்கின்றேன்.

ச. சரி ! உண்மையை உரைத்து உயிர்வாழும்,

பா. உண்மையை உரைத்து உன் காதலைப் பெறவேண்டு மென்பதே என் உட்கருத்தாம் — ஹா! என்ன சுகமான ஹிம்சை! என்னை ஹிம்சிப்பவளே அந்த ஹிம்சையினின்றும் நீங்க வழி கற்பிக்கிருள்! அதிருக்கட்டும், பெட்டிகளைக் காட்டச் சொல், என் அதிர்ஷ்டத்தை நான் பார்க்கவேண்டும்.

[பெட்டிகளின் முன்னிருக்கப் பட்ட திரையானது தள்ளப் படுகிறது.]

ச. சரி, போம் ஆனுல்; அவைகளி லொன்றில் நான் பூட்டப்பட் டிருக்கின்றேன். என்மீது உண்மையான காதல் உமக்கிருக்குமாயின், எப்படியும் என்னைக் கண் டெடுப்பீர். —நீலகேசி, நீயும் மற்றவர்களும் ஒரு புறமாக நில்லுங்கள்; அவர் கோரும்பொழுது சங்கீதம் வாசிக்கப்படட்டும்; அவர் தோல்வி யடைவாராயின், கோரிக்கைகள் மரிக்கும் காலத்தில் பாடிய பாடல்களாகும். அந்த உபமானமானது முற்றிலும் சரியாகும்படி, என் கண்ணீரானது அவர் மூழ்கி மரித்திடும் வெள்ளப் பெருக் காகுக! ஒரு கால் அவர் ஜெயிக்கலாம்; அப்பொழுது இந்தச் சங்கீதம் என்னும்? அப்பொழுது இச் சங்கீதமானது, புதிதாய் மகுடாபிஷேகம் செய்துகொண்ட சக்கிரவர்த்திக்கு, சத்யவந்தர்க ளான பிரஜைகள் பணியுங்கால் முழங்கும் வாத்ய கோஷமாகும். அன்றியும், மணநாளில் அருணோதய காலத்தில், சுகமாய் நித்திரை செய்துகொண்டிருக்கும் மணமகன் காதில் மிருதுவாய் நுழைந்து, அவனை மணப் பந்தலுக்கு அழைக்கும், மங்கள வாத்தியத்திற்குச் சமான மாகும்.—அதோ போகின்ருர், புவியினிற் பிறந்த பூவியல் ஜானகியை மாலையிடப் புண்ணிய புருஷனை ஸ்ரீராமன் வில்லை யெடுத்து நாணேற்றிடப்போன காம்பீரத்துடனும், அவரைவிட அதிக காதலுடனும். நான்தான் மைதிலி, ஒரு புறமாய் நிற்கும் இப் பரிஜனங்கள், ஜானகியின் மணத்துக்கு வந்து, எப்படி முடியுமோ என்று ஏங்கி நிற்கும் அரசர்கள். — காதலா, போம், நீர் வாழ்ந்தால் நான் வாழ்வேன். அமர்

புரியும் உம்மைவிட, பார்த்திடும் நான், அதிக பய முள்ளவளா யிருக்கிறேன்.

[பானுசேனன் தனக் குள்ளாகப் பெட்டிகளைப்பற்றி யோசிக்குங் காலை சங்கீதம் முழங்கப்படு கிறது.]

[திரையுள் பாட்டு]

“இச்சை யெனும்பொருளுக் கெங்ஙனே யுற்பத்தி
மெச்சுமித யத்திலோ புத்தியிலோ—உச்சிதமாய்
எவ்வாறு தான்தோன்றி யெவ்வாறு தானோங்கும்
அவ்வாற்றைச் சொல்சொல்லை யால்
கண்ணிலே தோன்றுமது காட்சியா லேயோங்கும்
மண்ணில்தன் தொட்டிலிலே மாய்ந்துபோம்—எண்ணரிய
இச்சையின் சாவுமணி எல்லோரு மாட்டிடநா
னுச்சரிக்க ஒங்டாங் மணி.”

பா. ஆகவே, வெளித்தோற்றம் ஒன்றுக்கும் உதவாததா யிருக்க லாம். வெளி ஆபரணத்தைக் கண்டே உலகம் ஏமாந்து போகின்றது என்றும். நியாயஸ்தலத்தில் எப்படிப்பட்ட கெட்ட வழக்கும் எடுத்துப் பேசுபவன் இனிய குரலால் குற்றமெல்லாம் மறைக்கப்பட்டு குணமாய்த் தோற்றுகிறது! மத விஷயத்திலோ, எப்படிப்பட்ட நிகிரிஷ்டமான காரியமா யிருந்தாலும், அது பூஜிதமானது என்று புராண மெடுத் துக் கூறி, அவலட்சணத்தை மறைத்து அழகாய்த் தோற் றும்படி வியாக்யானம் செய்யும் புண்ணியவான்களு மிருக் கிறார்கள். எப்படிப்பட்ட தீய குண மாயினும் வெளிக்கு நற்குணம்போல் கொஞ்சமாவது வேடம் பூணாதது ஒன்று மில்லை. மண்ணினால் கட்டிய மெத்தையைப்போல் பலமற்ற ஹிருதயத்தை யுடைய எத்தனைப் பயங்காளிகள், பீமனை நிகர்த்த பலாட்டியாள் போலவும் தோற்றுகிறார்கள். உள்ளே ஆராய்ந்தாலோ ஒருவன் பிடிக்கவும் தைரிய மற்ற வர்கள்! இவர்களெல்லாம் வீரர்களைப்போல் வெளி வேஷம்

தரிக் கின்றனர், மற்றவர்கள் கண்டு மருண்டிட! அழகைப் பார். ஆடை யாபரணங்களின் இடையினுல் அது விலக்கு வாங்கப்படுகின்றது, என்பதைக் காண்பாய். அவைகளை அதிகமாய் அணிபவர்களின் சுபாவத்தை, ஆச்சரியப்படும் படி முற்றிலும் மாற்றி, அதிக அழ குடையவர்கள்போல் காட்டுகின்றது. காற்றில் அசைந்து விளையாடும், கட்டழகி எனக் கருதப்படும் காரிகையின் கரு முகில்போன்ற அளக பாரம், கிட்டிப் பார்த்தால் மொட்டைத் தலையிடத்திருந் தும் ஸ்வீகாரம் வாங்கியதா யிருக்கும் பெரும்பாலும்; அல் லது அதை உண்டுபண்ணின மண்டை மடிந்து மண் ணுய்ப்போ யிருக்கலாம். இவ்வாறு வெள் ஆபரணமெல் லாம் அபாயகரமான சமுத்திரத்தின் மோசகரமான கரை யாகும், உள் ளிருக்கும் அசங்கியத்தை மூடும் வெளி உத் தரீயமாம். ஒரு வார்த்தையில், விவேகிகளையும் மயக்கி, வலையிற் சிக்கச்செய்ய, மேலுக்கு வாஸ்தவம்போல் வேடம் தரிக்கும் கபடமே யாம். ஆகவே ஆடம்பரத்தோடு கூடிய ஆணிப் பொன்னே, ஆன்றோர் ஓட்டுக் கொப்பாய் மதித்த அபரஞ்சியே, நீ வேண்டா மெனக்கு. ஒருவர் கையினின்றும் ஒருவர் கைக்கு மாறிக்கொண்டிருக்கும், அற்பமாம் வெளுத்த வெள்ளியே, நீயும் வேண்டா மெனக்கு.—அழகிலா வெறும் ஈயமே, நீஏதேனும் கொடுப்பதாக வாக்களியாது பயமுறுத் திய போதிலும், நீ ஒன்றும் கூறுமலிருத்தலே, எனக்கு அதிகமாய்க் கூறுகின்றது. உன்னையே நான் கோருகின் றேன்; எனக்கு சந்தோஷ முண்டுபண்ணுவையாக!

ச. இதுவரையிலும் எனக் கிருந்த சந்தேகமான எண்ணங் கள், ஆய்ந் தறியா கிராசை, ஒடுக்க முறும் பயம், பொருமை முதலிய இவைகளெல்லாம் எப்படிக் காற்ருய்ப் பறந்தோடுகின்றன! காதலே! பொறுமையை வஹி! உனது ஆநந்த பரவசத்தைத் தணித்துக்கொள்! உன் சந்தோஷத்தை அத்துமீற விடாதே, இந்த அதிகத்தை அடக்கிக்கொள்! உன்னல் எனக் குண்டாகும் சந்தோஷம்

பொறுக்கமுடியவில்லை; அதைக் குறைத்துக்கொள், இல்லாவிடின் இது எனக்குத் தெவிட்டப்போகுமென அஞ்சுகிறேன்.

பா. என்ன காண்கின்றேனே இங்கு நான்? [ஈயப் பெட்டியைத் திறந்து] ஒப்பு உயர்வு இல்லா சரோஜினியின் உருவமா? சிருஷ்டிக்கு ஒப்பாக அவ்வளவு அழகாய்ச் சித்திரம் எழுதிய தெய்வீகம் பொருந்தியவன் யார்? இந்தக்கண்கள் அசைகின்றனவோ? அல்லது, எனது கண்களில் பிரதிபிம்பிப்பதினால், சலனப்படுவனபோல் தோற்றுகின்றனவா? இதோ இவ் வதரங்கள் பிரிந்திருக்கின்றன சுகந்த சுவாசத்தினால், இத்தனை இனிய பிரிவே அத்தனை இனிய நண்பர்களைப் பிரித்திடல் வேண்டும். இவ்விடம் இவளது அளகபாரத்தை சித்தரித்தவன், சிலந்தியின் வலையில் ஈக்கள் சிக்குவதைவிட அதிகமாய், ஆண் மக்களுடைய ஆவியெல்லாம் இந்த அழகிய வலைக்குட் சிக்கச்செய்ய வேண்டுமென்று, இவ்வாறு வரைந்தனன். ஆயினும் இந்தக் கண்களை எப்படி வர்ணித்தான்? இரண்டையும் வர்ணிக்கும் சக்தி அவனுக்கு எப்படிக் கிடைத்தது? ஒரு கண்ணைத் தீட்டியவுடன், அவனது இரு கண்களையும் அது வுள்ளே பறிக்கும் சக்தியைப் பெற்றதாகி, மற்றொரு கண்ணை எழுத அசக்தனாயிருக்குமே அவனை! ஆயினும் இப் படத்தைத் தக்கபடி மதிக்கவல்ல என் வார்த்தைகள் எவ்வளவு குறைபடுகின்றனவோ, அவ்வளவு குறை படுகின்றது இப் படமானது அதோ இருக்கும் நிஜ உருவை வர்ணிப்பதில். என் அதிர்ஷ்டத்தை திரட்டிச் சுருக்கிய சுருள் இதோ இருக்கின்றது.

" வெளியுருவைக் கண்டு மோசம் போகாதே
விரும்பியது சரியே, வேண்டு மிச்சுகம்
பெற்றதிது பெறும்பே றெனவே,
உற்று நீர் ஒன்றை, உள்ளத்தி லெண்ணீர்.
இது உமக்கு இன்பம் தருவதேல்,
இவ் வதிர்ஷ்டமதை யேசுகமெனக் கொள்வீர்

காதலி யவளைக் கருணையாய் நோக்கி
ஏதமி லவள்வாய் முத்தம் கொள்வீர்!"

இன்பமாம் சாசனம்!—கருத்தினிய மானே, உன் விருப்பத்தின்படியே! [அவளை முத்தமிட்டு] கட்டளைப்படி கொடுக்கவும் கொள்ளவும் காத்து நிற்கின்றேன். பந்தயத்தின் பொருட்டு யுத்தம் புரியும் வீர ரிருவருக்குள், ஜனங்கள் மெச்சும்படி ஜெயித்ததாக எண்ணு மொருவன், கல்லென ஒலிக்கும் கரகோஷத்தைக் கேட்டு மதி மயங்கினவனாய், அச் சந்தோஷ ஆரவாரம் தன் பொருட்டோ அல்லவோ என்று சந்தேகித்துக் கண்ணை விழித்து விழித்துப் பார்ப்பது போல், கவினுடைக் காதலியே, நானும், காண்பது கனவோ, உண்மையோ வென உள்ளத்தில் ஐயம் கொண்டவனாய், உன் வாயால் உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டு ஊர்ஜிதமடையக் காத்து நிற்கின்றேன்.

ச. பிராணநாதா, இதோ நிற்கின்றேன் நான். இப்பொழுது என்னை உள்ளபடி காண்கின்றீர். என்னைப்பற்றி மாத்திரம் நான் கருதுவேனாயின், இப்பொழுது இருப்பதைப் பார்க்கிலும் மேம்பட்டிருக்க வேண்டுமென்று கோருவது பேராசையாகும். ஆயினும், உமக்காக இதைவிட இருபது மடங்கு மேலான ஸ்திதியில் இருக்கக் கோருவேன்; அழகில் இன்னும் ஆயிரமடங்கு அதிகப்பட்டவளாயும், பணத்தில் இன்னும் பதினாயிர மடங்கு அதிகமா யுள்ளவளாயு மிருக்க விரும்புவேன். உம்மால் அதிகமாய் நமக்கு மதிக்கப்படும் பொருட்டு, அழிவிலா நற்குணத்திலும், அழகிலும், அருஞ் செல்வத்திலும், ஆப்த நண்பரிலும், இன்னும் அதிகப்பட்டவளாயிருக்கவேண்டு மென்பதே என் கோரிக்கை. என்னிடத்துள்ள குணங்களை யெல்லாம் ஒருங்குசேர்த்தாலும் ஒன்றுமில்லாதவளாவேன்! விவரமாகக் கூறுமிடத்து, நான் ஒன்றுமறியாப் பேதை, ஒன்றும் கற்றவளல்ல, ஒன்று மனுபவமற்றவள். ஆனால் இந்த ஒரு நற் பாக்கிய முண்டு; இனி

மேற் கற்கக் கால மல்ல என்கிற வயதாகவில்லை. இதைவிட மேலான பாக்கிய மொன்றுண்டு; அதாவது, கற்பித்தால் வராது என்று சொல்லும்படியாக அவ்வளவு மந்த புத்தி யுடைவளாய் வளர வில்லை. இவையெல்லாவற்றையும் விட மேலான பாக்கியமு மொன்றுண்டு; அதாவது, வணக்க முடைய என்பேதை யறிவை, நல் வழியில் பயிற்றுவிக் கும்படி, எனது நாதனுகவும், நாயகனுகவும், அரசனுக வும் உம்மிடம், ஒப்புவிக்கின்றேன். நான் உம்முடையவளாயி னேன் இட்சணமுதல். என்னுடைய வெல்லாம் உம்முடை யதாக மாற்றப்பட்டன. இதுவரையில் இந்த அழகிய மாளி கைக்கு அரசியாயிருந்தேன், என் வேலைக்காரர்களுக் கெல் லாம் எஜமானியா யிருந்தேன், நான் எனக்கே சொந்தமா யிருந்தேன். இப்பொழுதோ, இந்தவீடும், இந்த வேலைக் காரர்களும், இந்தச்செல்வமும், நானும், உம்முடைய வாகி விட்டோம். பிராணநாதா, இவைகளை யெல்லாம் இந்த மோதிரத்துடன் உமக்குக் கொடுக்கிறேன். இந்த மோதி ரத்தை இழந்துவிட்டாலோ, அல்லது கழற்றி விட்டாலோ, அல்லது யாருக்காவது கொடுத்துவிட்டாலோ, அதை உமது காதல் குன்றினதற்கு அறிகுறியாகவும், உம்மை நிந்திக்க எனக்கொரு காரணமாகவும், கொள்வேன்.

பா. என் அழகியே, என்னை வாய்திறந்து பேச வகையறியாதவ னுய்ச் செய்துவிட்டாய் நீ. என் உடலிலுள்ள உதிரமே உரைத்திடுகின்றது என்காதலை; பிரஜைகளைப் பிரியமாய் ஆண்டிடும்படி அரசன் ஒருவன், அருமையாம் பிரசங்கம் அழ குறச் செய்து முடித்ததும், சந்தோஷத்தினுல் சப்தித்திடும் ஜனங்கள் ஒன்ருய்ப் பேசும் எல்லாவார்த்தைகளும் ஒருங்கு கூடி, அர்த்தமொன்று மில்லா ஒரே கோஷ்டமாகி, தெரி வித்தும் தெரியாமலும் இருக்கிற களிப்பினைக் குறிக்கும் குழப்பத்தைப்போல, என் அறிவானது கலங்கி நிற்கிறது. ஆயினும் இந்த மோதிரத்தை என் விரலை விட்டு நீக்கினுல், உடனே என்னுயிரும் என் உடலை விட்டு நீங்கும். அந்தச்

சமயம் வந்தால். பானுசேனன் பரலோகம் போய்ச் சேர்ந்து விட்டான் என்று உறுதியாய்க் கூறு.

நீ. ஐயா,—அம்மணி, நாங்களெல்லாம் இதுவரையில் எங்கள் எண்ணம் ஈடேறவேண்டுமென்று காத்திருந்ததற்கு, இப்பொழுது அப்படியே நேர்ந்தமையால், உங்களை வாழ்த்துவதற்கு இதுதான் எங்களுக்குச் சமயம். நீங்க ளிருவரும் நீடுழி காலம் சுகமாய் தம்பதிகளாக வாழ்வீர்களாக!

கி. ஐயா, பானுசேனரே,—என் அம்மணி, நீங்கள் என்ன சந்தோஷத்தை யெல்லாம் விரும்புவீரோ, அந்தச் சந்தோஷத்தையெல்லாம் பெறுவீரெனக் கோருகிறேன். ஏனெனில், என்னிடமிருந்து ஒன்றையும் விரும்பமாட்டீர் என்று உறுதியாய்க் கூறுவேன். உங்களுடைய வாக்குத் தத்தத்தின்படி உங்களுக்கு விவாகத்தை முடித்திடுங்கால், எனக்கும் விவாகத்தைச் செய்துமுடிக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்ளுகிறேன் உங்களை.

பா. மனப் பூர்த்தியாய்; ஆயின் மனைவி யொருத்தியை நீயும் சம்பாதித்துக் கொள்ளல் வேண்டும்.

கி. நீரே எனக்குச் சம்பாதித்துவிட்டீர். அதற்காக உமக்கொரு நமஸ்காரம்! உமது கண்களைப்போலவே எனது கண்களும் சீக்கிரத்தில் பார்க்கும் சக்தியுள்ளன. நீர் தேவியைப் பார்த்தீர், நா னவளது தோழியைப் பார்த்தேன். நீர் காதல் கொண்டீர், நானும் காதல் கொண்டேன். தாமதம் என்பது உம்மிடத்தி லெப்படி யில்லையோ, அப்படியே என்னிடத்திலும் இல்லை. உம்முடைய அதிர்ஷ்டம் அந்தப் பெட்டிகளிடத்தில் இருந்தது, என் னதிர்ஷ்டமும் அங்கேயே இருந்தது, நடந்ததை நோக்குங்கால். ஏனெனில், இதோ நிற்கும் மங்கையுடன் என்னா லானமட்டும் கஷ்டப்பட்டு வேண்டிப் பார்த்தேன், வா யுலர்ந்து போகும்படி என் காதலைக் குறித்து எத்தனையோ சத்தியங்கள் செய்து பார்த்தேன்.

யால் இந் நிருபம் உமக்குக் கொண்டுவரும் விஷயத்திலும் ஆட்சேபனையின்றி பாதியை நான் பகிர்ந்துகொள்ளலாம்.

பா. கண்ணே, சரோஜினி! உலகத்தில் எவ்வளவு துக்ககரமான சமாசாரம் ஒரு நிருபத்தில் எழுதக்கூடுமோ, அவ்வளவும் இந் நிருபத்தில் அடங்கி யிருக்கின்றது. காதலியே என் காதலை உனக்கு நான் முதலில் வெளியிட்டபொழுது, என் செல்வமெல்லாம் என் குடிப் பிறப்பே—நான் உத்தம குலத்தில் உதித்தவன், அவ்வளவே—என்று வெளிப்படையாய்க் கூறினேன். நான் அங்ஙனம் கூறிய துண்மையே. ஆயினும் பெண் ணரசியே, நான் ஒன்று மில்லாதவன் என்று கூறினதிலும் அதிக வீம்பு பேசினேன் என்பதை, இப்பொழுதறிவாய். நான் செல்வ மொன்று மில்லாதவன் என்று உன்னிடம் கூறினபோதே, அம்மட் டன்று, ஒன்று மில்லாத வனினும் ஹீன ஸ்திதியை யுடையவன், என்று சொல்லியிருக்கவேண்டும். என் செலவின் பொருட்டு, கடன் வாங்கி, என் ஆருயிர் நண்பனுக்கு அதற்காகக் கட்டுப்பட்டிருக்கிறேன், அந்த நண்பனை அவனது ஜன்மத் துவேஷிக்குக் கட்டுப்படுத்தியிருக்கிறேன். கண்ணே, இதோ இந் நிருபத்தைப் பார்! இக் கடிதத்தை என் நண்பனது உடலென எண்ணுவாய். இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும், அவனது உடலினின்றும் உயிர் நிலையான இரத்தத்தைச் சொரியும் ஆழமான காயமெனக் கருதுவாய். —ஆயினும் சோமேஸ்வரரே! இது உண்மைதானா? அநந்தநாதனுடைய கப்பல்கள் எல்லாம் அழிந்துபோயினவா? திரிபுரம், மலையாளம், சிங்களம், தூத்துக்குடி, வங்காளம், குர்ஜரம் முதலிய இடங்களுக் கெல்லாம் சென்ற கப்பல்களில், ஒன்ருவது திரும்பி வரவில்லையா? கப்பல்களை யழிக்கும் கற் பாறைகளில் தாக்காது ஒன்ருவது தப்பி வர வில்லையா?

சோ. ஒன்றும் தப்ப வில்லை! அன்றியும், இப்பொழுது அக் கடனைத் தீர்க்கக் கையில் ரொக்கப் பண மிருந்தாலும், அந்த

மாறுபாடி அதை வாங்கிக்கொள்ளமாட்டேன் என்கிருறும். ஒரு மனுஷ்யனை அடியுடன் அழிக்க வேண்டுமென்று பேராசை கொண்டிருக்கும் அவனைப்போன்ற மனுஷ்ய உருவம் படைத்த ஒரு பிராணியை, அவனியில் எங்கும் கண்டதில்லை நான். காலையும் மாலையும் அரசனிடம் போய்க் காத்திருந்து நிர்ப்பந்திக்கின்றான். தனக்கு நியாயப்படி தீர்மானிக்காவிட்டால் அநியாய ராஜ்யமென்று முறையிடுகின்றான்; பெரிய வர்த்தகர்கள் இருபது பெயர், உயர்ந்த பதவியிலிருக்கும் மந்திரி முதலானோர், அரசன், எல்லோரும் அவனைச் சமாதானப்படுத்திப் பார்த்தார்கள். தன் பத்திரத்தின்படி நியாயம் நடத்தி அபராதத்தைப் பெறவேண்டுமென்னும் குரூரமான பிடிவாதத்தினின்றும் அவனைத் திருப்ப, ஒருவராலும் முடியாமற் போயிற்று.

ஜ. தன்னுடைய பந்துக்களாகிய தூப்லாலிடமும், சேஷலரிடமும், அநந்தநாதரிடமிருந்து தனக்குச் சேரவேண்டிய தொகையை இருபது மடங்கு அதிகமாகப் பெறுவதைப் பார்க்கிலும், அவருடைய சதையையே பெறுவேன் என்று சத்தியம் செய்ததை, அவருடனிருந்தபொழுது நான் கேட்டிருக்கின்றேன். அன்றியும், ஐயா, அதிகாரிகள் நியாய சட்டத்தைக் கொண்டு அவரை அடக்காவிட்டால், அநந்தநாதர் பாடு கஷ்டமாய்த்தான் முடியும் என்பதை நான் அறிவேன்.

ச. இவ்வாறு ஆபத்தில் அகப்பட்டிருப்பவர் உமது ஆப்தரான நண்பரா?

பா. அவனைவிட ஆப்தன் அவனியில் எனக்கு வேறொருவரில்லை. இணையிலாக் கருணையுடையவன், அண்டினவரை ஆதரிப்பதில் அத்தனை அன்பன், உதவி புரிவதில் ஒருகாலும் தளராத தயாள குண முடையவன்; இவ்வுலகில் உயிர் வாழும் வேறெம் மனிதனைவிட அவனிடம் பூர்வீகமான தண்ணளியானது அதிகமாய்க் குடிகொண்டிருக்கிறது.

ச. அந்த மாறுபாடிக்கு அவர் கொடுக்கவேண்டிய தொகை எவ்வளவு?

பா என்பொருட்டு, மூவாயிரம் பொன்.

ச. என்ன! இவ்வளவுதானு? அவனுக்கு ஆறுயிரம் பொன் கொடுத்து அந்தப் பத்திரத்தைக் கிழித் தெறியும். உம்முடைய தவறினுல் இப்படிப்பட்ட உத்தமனுன நண்பனது கேசத்தி லொன்று கெடுமுன், அந்தத் தொகைக்கு இரட்டிப்பாய்ப் பன்னீராயிரம் பொன் கொடும்; அதுவும் போதாமற் போனுல், அதற்கு மும்மடங்கு கொடும். முதலில், இன்றைத் தினமே நமது கலியாணச் சடங்கை முடித்துவிடும். உடனே உமது நண்பரிடம் வாணீபுரம் போய்ச் சேரும். உமது மனத்தில் இக்குறையை வைத்துக்கொண்டு நீர் என் பக்கத்தில் இருப்பது எனக் கிஷ்ட மில்லை. இச்சிறு கடனை இருபது மடங்கு அடைக்கத் தக்க பொன்னை உமக்குத் தருகிறேன். அதைக் கொண்டுபோய் அக்கடனை யடைத்தபின், உமது ஆப்தரை அழைத்து வாரும்; இங்கு என் தோழி நீலகேசியும் நானும், அதுவரையில் கன்னிகைகளாகக் காலம் கழிக்கின்றேம். வாரும் விரைவில்; நமது விவாகம் முடிந்தவுடன் நீர் புறப்படவேண்டும். உமது நண்பரை யெல்லாம் அழையும் நமது மணத்திற்கு; உற்சாகத்துடனிரும். கஷ்டத்தினுல் உம்மைப் பெற்றமையால், காத லும்மீது அதிகங் கொண்டிருக்கிறேன். முதலில் உமது சிநேகிதர் என்ன எழுதியிருக்கின்றுர் கேட்போம்.

பா. [படிக்கிறுன்.] "என்னினிய நண்பனே! பானுசேனு! என் மரக்கலங்களெல்லாம் மாண்டுபோயின! என் கடன்காரர்கள் எல்லாம் நிர்பந்திக்கின்றுர்கள். என் கையில் சொத்தில்லை. மாறுபாடிக்கு நான் எழுதிக் கொடுத்த பத்திரம் தவணை கடந்துபோய்விட்டது. அதில் குறித்த அபராதத்தைக் கொடுத்து நான் உயிர் வாழ்வது அசாத்திய மாகையால், என்னுயிர் போகுமுன், உன்னை ஒரு முறை காணவே

னுயின், என் கடனையெல்லாம் எனக்குத் தீர்த்தவனுவாய் ! ஆயினும், உனக்கெப்படி சவுகர்யமோ அப்படிச்செய். உன்னுடைய அன்பானது இங்கு வரும்படி உன்னை உந்தாவிட்டால், என்னுடைய நிருபமானது அவ்வாறு செய்ய வேண்டியதில்லை."

ச. பிராணநாதா, சீக்கிரம் எல்லா வேலையையும் முடித்துக் கொண்டு போகப் புறப்படும்.

பா. போய்வரும்படி நீயே உத்தரவளிப்பதினுல், நான் உடனே புறப்படுகின்றேன். நான் மீண்டு வருமளவும் அரைக் கணமும் அவ்விடம் அதிகமாகத் தாமதியேன். காதலியே, மீட்டும் உன்னைக் காணுமளவும் கண்ணுறங்கேன்.

[எல்லோரும் போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி

இடம்—வாணீபுரம். ஓர் வீதி.

ஷாம்லால், சாம்பநாதன், சிறைச்சாலைச் சேவகன் வருகிருன்.

ஷா. காவற்காரா ! ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள் இவனை பச்சாத்தாபத்தைப்பற்றி என்னிடம் பேசவேண்டாம்—பணத்தை வட்டியில்லாமல் கொடுத்த மூடன் இவன்—காவற்காரா ! ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள் இவனை.

அ. அப்பா, ஷாம்லால் நான் சொல்வதைச் சற்றே கேள்.

ஷா. நான் என் பத்திரத்தின்படி நடத்துவேன். என் பத்திரத்திற்கு விரோதமாக ஒன்றும் பேசாதே ! பத்திரப்படி நிறைவேற்றுவதாக நான் சத்தியம் செய்திருக்கிறேன். ஒரு காரணமுமில்லாதிருக்கும்பொழுது என்னை நாயென்றழைத்தாயல்லவா? ஆகவே, நான் நாயானபடியால், என்பற்களுக்குப்

பயப்படு. இராஜா இருக்கின்றார் எனக்கு நியாயம் நடத்த. —என்ன பயித்தியக்காரனாய் இருக்கிறாய் நீ, காவற்காரா! அவன் கேட்டானென்று, அவனை எப்படி வெளியில் அழைத்துக் கொண்டு புத்தியில்லாத்தனமாய் வருகின்றாய்? எனக்கு ஆச்சரியமா யிருக்கின்றது.

அ. உன்னை வேண்டிக்கொள்கிறேன், நான் சொல்வதைச் சற்று கேள்.

ஷா. நான் என் பத்திரத்தின்படி நடத்துவேன், நீ சொல்வதை ஒன்றும் நான் கேட்கமாட்டேன். நான் என் பத்திரத்தின் படி நிறைவேற்றுவேன். ஆகையால் நீ பேசுவதிற் பிரயோசன மில்லை. ஹிந்துக்கள் வந்து வேண்டுகிறார்களே என்று, தலை யசைத்து, என் மனமிளகி, பெருமூச் செறிந்து, மதி மயங்கி, பச்சாத்தாபப்பட்டு, உள மிரங்கும் மந்த புத்தியை யுடைய மடையனல்ல நான்.—பின் தொடராதே!— உன் பேச்சு வேண்டாமெனக்கு! என் பத்திரத்தின்படியே நான் நிறைவேற்றுவேன். [போகிறான்.]

சா. மனிதர்களுடன் சகவாசம் செய்யும் இத்தனைப் பிடிவாதமுள்ள நாயை இதுவரையில் நான் கண்டதில்லை.

அ. அவன் போகட்டும். வீணாக நான் இனி அவனைப் பின் தொடர்ந்து வேண்டமாட்டேன். அவன் வேண்டுவது என் னுயிர்போலும்; அதற்கு நியாயமும் எனக்கு நன்றாய்த் தெரியும். அவனுக்குக் கடன்பட்டு அவன் கையிற் சிக்கிய அநேகரை, அவர்கள் என்னிடம் வந்து துக்கப்பட்டபொழுது, நான் மீட்டிருக்கின்றேன்; ஆகவே என்னைத் துவேஷிக்கிறான் அவன்.

சா. இந்த அபராதத்தின்படி நடப்பதற்கு அரசர் ஒருகாலும் உடன்படார் என்று உறுதியாய் நம்புகிறேன்.

அ. நியாத்திற்கு விரோதமாய் நடக்க முடியாது. இந்த வாணீபுரம் வையகத்தி லுள்ள நானா ஜாதி வர்த்தகர்களும்

வந்து சேருமிடம், அதனால் நமது பட்டணம் பெரும் லாபத்தை அடைகிறது; ஆகவே நியாய சட்டப்படி நடத்தாவிட்டால், ராஜ்யத்திற்கு அதனால் பெரும் அவதூறு உண்டாகும். ஆகவே நீர் விடை பெற்றுப் போம். இந்த நஷ்டங்களும் துயரமும் என்னுடலை மிகவும் மெலியச் செய்திருக்கின்றன; இந்தக் கொடியனுடைய மாறுபாடிக்கு நான் என்னுடலிலிருந்து நாளை ஒரு ராத்தல் மாமிசம் கொடுக்கமுடியுமோ என்று சந்தேகப்படுகிறேன்.—நட, அப்பா காவற்காரா, நட,—ஈசனருளால் அவன் கடனை நான் தீர்ப்பதை பானுசேனன் வந்து பார்த்தாற் போதுமெனக்கு! அப்புறம் எனக் கொன்றும் கவலையில்லை. [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நான்காம் காட்சி

இடம்...மணிபுரம். சரோஜினியின் வீட்டில் ஓர் அறை.

சரோஜினி, நீலகேசி, லீலாதரன், ஜலஜா, பாலதாசன் வருகிறார்கள்.

லீ. அம்மணி, நான் அதை உம்மெதிரில் எடுத்துரைப்பதாயினும் நீர் மேன்மையாம் தெய்வீகமான நட்பின் திறத்தை உண்மையாய் அறிந்துடையீர் என்று நான் கூறவேண்டும்; உமது பிராணநாதன் உம்மை விட்டுப் பிரிந்திருப்பதை நீர் பொறுத்திருப்பதில், அது நன்றாய் விளங்குகின்றது. ஆயினும், இந்தப் பெருமையை யாருக்காகக் காட்டுகிறீர் என்பதையும், எப்படிப்பட்ட உத்தம புருஷனுக்கு நீர் உதவுகிறீர் என்பதையும், உமது கணவனுக்கு அவர் எவ்வளவு ஆப்த நண்பன் என்பதையும், நீர் அறிவீராயின், உமக்கு வழக்கமாம் உதாரத்தினால் உண்டாகும் சந்துஷ்டியைவிட, இவ் வேலையில் அதிக சந்துஷ்டி யுடையவராவீர் என்பதை நான் அறிவேன்.

ச. பிறருக்கு நன்மை செய்த விஷயத்தில், பிறகு நான் எப்பொழுதும் துக்கப்பட்டே னில்லை, இப்பொழுதும் துக்கப்படப் போகிறதில்லை ஒன்ருய்ச் சம்பாஷித்து ஒன்ருய்க் காலம் கழிக்கும் அன்பு சமமாய் ஒருவர்மீதொரு வர் வைத்த சினேகிதர்களுக்குள், சாயலிலும் நடை யுடை பாவனைகளிலும், நற்குணத்திலும் சமத்வம் இருக்க வேண்டும்; ஆகவே இந்த அநந்தநாதர் என்பவர், எனது பிராணநாதருடைய அத்யந்த நண்பரா யிருப்பதால், எனது பிராணநாதரைப் போலவே யிருக்கவேண்டு மென்று நான் எண்ணவேண்டியிருக்கிறது. அங்ஙனம் இருக்கு மாயின், என் உயிருக்குச் சமானமானவரை, நரகத்தின் குரூரத் தினின்றும் மீட்க, நான் செய்யும் காரியமெல்லாம் எவ்வளவு அற்பமானது! இது சற்றேறக்குறைய என்னையே நான் புகழ்ந்துகொள்வதாகும்; ஆகவே இனிவேண்டாம் அதைப் பற்றி. வேறு விஷயங்களைக் கேளும் லீலாதரரே, என் னுடைய நாதன் திரும்பிவருமளவும், என் வீட்டின் காரியங் களையெல்லாம் உமது கையில் ஒப்புவிக்கின்றேன்; அவை களை யெல்லாம் நீர் எஜமானனுய்ப் பார்த்து வாரும். என் வரையில், நீலகேசி ஒருத்தியை எனக்குத் துணையாகக் கொண்டு அவளது புருஷனும் எனது நாதனும் திரும்பி வருகிறவரையில், ஜகதீசனைக் குறித்துப் பூஜை செய்து விரதமாய் இருக்கவேண்டுமென்று, சுவாமிக்கு ஒரு பிரார்த் தனை செய்துகொண்டேன் இரகசியமாய். இதற்கு இரண்டு காத தூரத்தில் ஒருமடம் இருக்கிறது. அங்கு போய் நாங்கள் தங்கியிருக்கிறேம். எனது அன்பினுலும், தற்கால அவசியத்தினுலும், நான் உம்மீது சுமத்தும் இவ்வேலையை நீர் மறுக்கலாகாதென வேண்டுகிறேன் நான்.

லீ. அம்மணி, நியாயப்படி நீர் எனக்கிடும் கட்டளைகளை யெல் லாம் நான் நிறைவேற்றுவேன், மனப் பூர்வமாய்.

ச. எனது பரிஜனங்கள் எல்லாம் இவ் விஷயத்தில் என் எண் ணத்தை அறிவார்கள் முன்பே. ஆகவே எனது பிராண நாதருக்கும் எனக்கும் பதிலாக, உம்மையும் ஜலஜாவையும்

எஜமானனும் எஜமானியுமாக ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே நாம் மறுபடியும் சந்திக்கும் வரையில் சுகமாய் இங்கு இருப்பீராக.

வீ. நீங்கள் உமது காலத்தைச் சந்தோஷமாய்க் கழித்து சுகமாய் வாழ்வீராக!

ஐ. அம்மணி, உமது மனோபீஷ்டம் நிறைவேறுமாக என்று நான் பிரார்த்திக்கின்றேன்.

ச. அந்தப் பிரார்த்தனைக்காக உனக்கு வந்தனம் செய்கிறேன். அவ்வாறே, உனது மனோபீஷ்டமும் நிறைவேறுமாக என்று நான் கோருகிறேன். ஜலஜா, நான் போய்வருகிறேன்.

[வீலாதரனும், ஜலஜாவும் போகிறார்கள்.]

பிறகு, பாலதாசா,—இதுவரையில் உன்னை யோக்யனாகவும் உண்மை யுடையவனாகவும் கண்டேன், இனிமேலும் அங்ஙனமே காணுவேனாக. இந்த நிருபத்தைக்கொண்டு, மனிதனால் எவ்வளவு வேகமாய்ப் போகமுடியுமோ, அவ்வளவு வேகமாய், மதுரா நகரம் போய்ச் சேர். என்னுடைய தாயாதி பல்லவராயரிடம், அவரது கையில், நேராக இதைச் சேர்ப்பாயாக; அன்றியும், அவர் உனக்குக் கொடுக்கும் உடைகளையும், காகிதங்களையும், மனோ வேகமாய், வாணீபுரம் போகும் பொதுத் துறை யருகில், கவனமாய் என்னிடம் கொண்டு வந்து சேர்.—வார்த்தை யாடுவதில் காலத்தைப் போக்காதே, உடனே புறப்பட்டுப் போ; உனக்குமுன் அங்கு வந்திருப்பேன் நான்.

பால. அம்மணி, நான் கூடிய சீக்கிரத்திற் போகிறேன். [போகிறான்]

ச. வா, நீலகேசி; நான் இப்பொழுது செய்யவேண்டிய வேலை இருக்கின்றது; அது இன்னதென்று உனக்கு இன்னும் தெரியாது. அவர்கள் நம்மைப்பற்றி நினைக்குமுன், நமது கணவர்களை நாம் காண்போம்.

நீ. அவர்கள் நம்மைப் பார்ப்பார்களா?

ச. பார்ப்பார்கள், நீலகேசி; ஆயினும் நம்மிடத்தில்லாததை நாம் உடையவர்களென்று அவர்கள் எண்ணும்படியான உடையில் நம்மைக் காண்பார்கள்; நாமிருவரும் இரண்டு வாலிபர்களைப் போல் வேடம் தரித்திடுங்கால், உன்னைவிட அதிக அழகுடை இளைஞனாய்க் காண்பேன், உன்னைவிட அதிக தைரியத்துடன் எனது உடைவாளைத் தரிப்பேன், என்று என்ன பந்தயம் வேண்டுமென்றாலும் கட்டுகிறேன் நான்; பாலப் பருவம் போய் யௌவனம் வருமுன் இருக்கும் கீச்சுக் குரலுடன் பேசுவேன்; மெல்லிய நடையை ஆடவர்க்குரிய கம்பீர நடையாக்கிடுவேன்; சச்சரவுகளைக் குறித்து டம்பனும் வாலிபனைப்போல் வார்த்தையாடுவேன்; உத்தமிகளான காரிகைகள் என் காதலைப் பெறவேண்டினார்களென்றும், நான் அவர்களை வெறுக்க, வெய்துயிர்த்து ஆவியை விட்டனரென்றும், விசித்திரமான பொய்களை விளம்பிடுவேன்; அதைத் தடுக்க என்னால் முடியாமற் போயிற்றென்பேன்; பிறகு நான் பச்சாத்தாபப்பட்டு அவர்களைக் கொல்லாதிருக்கலாகாதா எனக் கோரியதாகக் கூறுவேன்; இம்மாதிரியான இருபது பொய்களைப் பேசி, ஒரு வருஷத்துக்கு முன்பாகவே நான் பள்ளிக்கூடத்தை விட்டிருக்கவேண்டுமென்று மனிதர்கள் சத்தியம் செய்யும்படிச் செய்வேன். டம்பம் பேசும் காளைகளின் விகடங்கள் ஆயிரம் என் மனத்திலிருக்கின்றன, அவைகளையெல்லாம் நடத்திக் காட்டுவேன்.

நீ. ஏன், நாம் ஆடவர்களாய் மாறிடுவோமா?

ச. சீ! இதென்ன கேள்வி? என்ன அசங்கியமான அர்த்தம் செய்கிறாய்? அதிருக்கட்டும்; போவோம் வா, நமக்காகத் தோட்டத்தின் வாயிலில் காத்திருக்கும் வண்டியில் நாமேறியதும், எனது சூழ்ச்சியை முழுவதும் உனக்குத் தெரிவிக்கின்றேன்; ஆகவே துரிதப்படு, இன்றைத்தினமே ஆறு காதம் செல்லவேண்டும் நாம். [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி.

இடம்—வாணீபுரம், ஒரு தோட்டம்.

லாவண்யனும், ஜலஜாவும் வருகிருர்கள்.

லா. ஆம், உண்மையில்—இதோ பாருங்கள், தாய் தந்தைகள் செய்யும் பாபமெல்லாம் அவர்கள் குழந்தைகளின் தலையின் பேரில்தான். ஆகவே உண்மையைக் கூறுமிடத்து, உங்களைக் கண்டால், எனக்குப் பயமா யிருக்கிறது. நான் உங்களிடத்தில் எப்பொழுதும் ஒன்றையும் ஒளித்த தில்லை; ஆகவே, இவ் விஷயத்தில் எனக் கிருக்கும் பயத்தை உமக்குத் தெரிவிக்கிறேன்; ஆகவே சந்தோஷமா யிரும்; ஏனெனில் வாஸ்தவமாய் நீங்கள் நரகம் போகவேண்டியதுதான். அதிலிருந்து தப்ப ஒரு கோரிக்கை யிருக்கிறது, அதுவும் சரியான கோரிக்கை யல்ல, பாவமான கோரிக்கை.

ஜ. அதென்ன கோரிக்கை யப்பா, சொல்; உன்னை வேண்டுகிறேன்.

லா. உம்முடைய தகப்பனுருக்கு நீர் பிறக்கவில்லையென்று கொஞ்சம் கோரலாம்—அதாவது, நீர் ஜைனன் மகளல்ல வென்று.

ஜ. அதுவும் ஒருவிதத்தில் பாபமான கோரிக்கையாம்; ஏனெனில் அப்பொழுது என் தாயார் செய்த பாபமானது என் தலையில் வந்து விடியுமன்றோ?

லா. ஆயின் உண்மையில் உமது தந்தை தாயர் இருவராலும் நீர் சபிக்கப்பட் டிருக்கிறீரென அஞ்சுகிறேன்; தாயாருடைய பாபத்தினின்றும் தப்பினுல், தகப்பனுருடைய பாபத்தில் வீழ்கிறீர், தகப்பனுருடைய பாபத்தினின்றும் தப்பினுல், தாயாரின் பாபத்தில் வீழ்கிறீர். ஆகவே இரண்டு விதத்திலும் நீர் நரகத்திற்குப் போகவேண்டியதுதான்.

ஜ. அந் நரகத்தினின்றும் என் கணவர் என்னைக் காப்பற்றுவார்; அவர்தான் என்னை ஹிந்து வாக்கிவிட்டாரே.

லா. உண்மையில், அவ ரிழைத்த பாபம் எல்லாவற்றையும் விட அதிகமாம். ஒருவனைக் கொன்று மற்றொருவன் வாழும்படியான ஸ்திதியில், இவ் வுலகில் எத்தனை ஹிந்துக்கள் உயிர் வாழ முடியுமோ, அத்தனை பெயர் முன்பே யிருந்தோம். இப்பொழுது சமணர்களை யெல்லாம் ஹிந்துக்க ளாக்கிவிட்டால், மாம்சத்தின் விலை அதிகப்பட்டுப் போம். நாம் எல்லோரும் மாமிசம் தின்பவர்களாக மாறிவிட்டால், அதிக பணம் கொடுத்தாலும் அனலில் வதக்க அத்தனை மாம்சமும் அகப்படாது.

ஜ. இதோ, லாவண்யா. என் பிராணநாதரிடம் நீ கூறுவதைச் சொல்கிறேன். இதோ வருகிறார் அவர்.

லீலாதரன் வருகிறான்.

லீ. லாவண்யா, நீ இவ்வாறு எனது மனைவியுடன் மூலைகளில் இரகசியம் பேசிக்கொண் டிருப்பாயாயின் நான் உன்மீது பொறாமை கொள்வேன் சீக்கிரத்தில்.

ஜ. பிராணநாதா, எங்களைப்பற்றித் தாங்கள் பயப்படவேண்டாம்; லாவண்யனும் நானும் சண்டைபோட்டுக்கொண்டிருந்தோம். நான் சமணனுடைய பெண்ணாய்ப் பிறந்ததினால், எனக்கு மோட்சம் கிடைக்காதென்று உறுதியாய்க் கூறுகிறான்; நீர் மகாராஜாவுக்குத் தக்க பிரஜையல்லவென்றும் கூறுகிறான்; ஏனெனில் சமணர்களை யெல்லாம் ஹிந்துக்களாக மாறச் செய்வதினால், மாம்சத்தின் விலையை உயர்த்திவிடுகின்றீராம்.

லீ. அந்த அபராதத்திற்கு நான் தக்க நியாயம் சொல்லிக் கொள்ளுகிறேன் மகாராஜாவிடம்.—லாவண்யா, நேற்றிரவு அந்த சமணப் பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்தாயே நீ, அது என்ன சமாசாரம்? அதற்கு யார் உத்தரம்சொல்வது?

லா. அந்தப் பெண் என்னை தன் மதத்தில் சேர்த்துக்கொள்ளப் பார்த்தாள். அதற்கு நான் என் மதமே நல்ல மதம், நீசொல்வது சம்மத மல்ல என்று சொல்லிவிட்டேன்.

லீ. மடையர்களாலும் பதங்களை மாற்றிப்பேச எவ்வளவு முடிகிறது! சீக்கிரத்தில் அறிவிற்குச் சிறந்த அழகு மௌனமாயிருத்தலாய் முடியுமென்றும், வார்த்தையாடல் கிளிப்பிள்ளைகளிடம் மாத்திரம் மெச்சப்படுமென்றும், நினைக்கின்றேன் — அதிருக்கட்டும் அடா, உள்ளே போய் போஜனம் ஆய்விட்டதா என்று விசாரி.

லா. இன்னும் ஆய்விட வில்லை. அப்படியே இருக்கிறது, ஒருவரும் சாப்பிடவில்லை இன்னும்.

லீ. ஈசனே! என்ன படுங்காளிப் பயல் இவன்! வேலைக்காரர்களை சாப்பாட்டுக்குச் சித்தமா யிருக்கின்றார்களா என்று விசாரி.

லா. காலைமுதல் சித்தமா யிருக்கிறார்கள்! இப்பொழுது விட்டால் அல்லவோ தெரியும், அரை க்ஷணத்தில் தீர்த்துவிடுவார்கள்!

லீ. என்னடா கஷ்டமா யிருக்கிறது! போஜனத்துக்கு நாங்கள் வரலாமா என்று கேட்டுவா.

லா. அதை அவர்களைக் கேட்பானேன்? உங்களுக்கல்லவா தெரிய வேணும், உங்களுக்குப் பசிக்கிறதா இல்லையா என்று?

லீ. சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுதெல்லாம் சச்சரவுதானு! ஒரே விசையில் உன் புத்தியின் குவியலை யெல்லாம் கொட்டி அளக்கமாட்டாயா? நான் ஸ்பஷ்டமாய்ச் சொல்வதை நீ அறிந்துகொள்ளமாட்டாயா? உள்ளே வேலைக்காரர்களிடம் போய், உடனே இடம் செய்து, இலையைப் போட்டு, உணவைப் பரிமாறச் செய்.

லா. இதோ உள்ளே போகிறேன்! உடனே இடம் செய்யச் சொல்கிறேன்! இலையைப்போடச் சொல்கிறேன்! சாப்பாட்டைப் பரிமாறச் சொல்கிறேன்—நீங்கள் வரும்போது மூன்று சாமான்களைக் கொண்டு வாருங்கள் ஒவ்வொருவரும் — ஒரு வாய், ஒரு கை, ஒரு வயிறு. [போகிறான்.]

லீ. என்ன புத்தி கூர்மை! அவனது வார்த்தைகள் என்ன பொருந்தினவா யிருக்கின்றன! இவன் தன் மனமெனும் களஞ்சியத்தில் எத்தனை வார்த்தைகள் சேகரித்து வைத்திருக்கிறான்! இவனைப் பார்க்கிலும் உயர்ந்த பதவியி லிருந்தும், இவனைப்போல் அநேகம் வார்த்தைகள் அறிந்தவர்களாயினும், கடினமான பதமொன்றைத் தக்கபடிஉபயோகிக்க அறியாதவர்களாய், அர்த்தத்தை அழித்திடும், அநேகரை நான் அறிந்துள்ளேன்—ஜலஜா, நீ என்னவா யிருக்கின்றாய்? அப்புறம், என் இனிய கண்ணே, உன்னுடைய உண்மையான எண்ணத்தைக் கூறு; பானுசேனருடைய மனைவியைப்பற்றி என்ன நினைக்கின்றாய்?

ஜ. அவர்களது அருங் குணமானது உரைக்கற்பால தல்ல, பானுசேனர் யோக்யமான வாழ்க்கை யுடையவரா யிருத்தல் அவசியம்! இப்படிப்பட்ட குணவதியை மனைவியாகப்பெற்ற புண்ணியத்தினால், இவ் வுலகின்கண்ணே மேலுலகத்தின் ஆனந்தத்தை அனுபவிக்கின்றார்; அவ்வாறு இவ்வுலகில் அதை அவர் அறியாவிட்டால், அவர் நியாயப்படி சுவர்க்கம் ஏகத் தக்கவ ரல்ல; தெய்வலோக வாசிகள் இருவர், பூமண்டலத்திலுள்ள புண்ணியவதிகள் இருவரைப் பந்தயமாக வைத்து விளையாடினால், அவர்களுள் ஒருத்தி சரோஜினியாவாள், மற்றொருத்தியுடன் மற்றும் செல்வத்தைச் சேர்த்தால்தான், இவளுக்குச் சமமாகுவாள்; ஏனெனில் இந்த அதிர்ஷ்ட ஹீனமுடைய அவனியில், அவளுக் கிணையே கிடையாது.

லீ. பானுசேனருக்கு எப்படி அவள் மனைவியாக வாய்த்தனளோ, அவ்வண்ணமே நான் உனக்குப் புருஷனாகக் கிடைத்திருக்கிறேன்.

ஜ. அன்று; அதைப்பற்றியும் என் எண்ணத்தைக் கேட்கின்றீரா?

லீ. பிறகு கேட்கின்றேன் நான், முன்பு போஜனம் கொள்ள உள்ளே போவோம்.

ஜ. அப்படியல்ல; நான் 'பசியுட னிருக்கும்பொழுதே உமது குணங்களைப் புகழ்கின்றேனே.

ஸீ. வேண்டாம், உன்னை வேண்டுகிறேன், விருந்தான பின்பு அந்தப் பேச்சை வைத்துக்கொள்வோம். அப்பொழுது நீ எதைச் சொன்னபோதிலும் எல்லாவற்றையும் ஜீர்ணித்து விடுவேன்.

ஜ. சரி! ஆனால் வாரும், வர்ணிக்கிறேன் உம்மை.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நான்காம் அங்கம்

முதற் காட்சி

இடம்—வாணீபுரம். நியாயஸ்தலம்.

வாணீபுரத் தரசன், மந்திரிகள் முதலானோருடனும் அநந்தநாதன், பானுசேனன், கிரிஜாநாதன், சோமேஸ்வரன் சாம்பநாதன் முதலானோருடனும் வருகிறார்.

வா.அ. எங்கே, அநந்தநாதர் இங்கு வந்திருக்கின்றாரா?

அ. சித்தம், மகாராஜா, தங்கள் தயவை எதிர்பார்க்கின்றேன்.

வா.அ. ஐயா, உமது விஷயத்தில் எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கின்றது. நீர் இப்பொழுது கருங் கல்லினும் கடினமான சித்த முடைய, பச்சாதாப மென்பதைக் கனவிலும் கருதாத, கருணை யென்பது நெஞ்சில் கடுகு அளவும் இல்லாத, காதகன் கையிற்பட்டு, அவனுக்கு உத்தரவு சொல்ல வேண்டி வந்திருக்கின்றது என்பதை அறிவீரல்லவா?

அ. அவனது கடூரமான மார்க்கத்தினின்றும் அவனைச் சாந்தப் படுத்தி, அவன் மனத்தை திருப்பும்பொருட்டு, மஹாராஜா

அவர்கள் மிகுந்த கஷ்டம் எடுத்துக்கொண்டதாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆயினும் அவனோ ஒரே பிடிவாதமாயிருக்கின்றான்; அவனது மாச்சரியத்தினின்றும் என்னை மீட்டுக்கொள்ள நியாய மார்க்கம் ஒன்றும் காணோம்; ஆகவே, அவனது ஆக்ரிஷத்தையெல்லாம் நான் பொறுக்க வேண்டியதுதான்; அவனது கொடுமையையும் கோபத்தையும் சாந்தத்துடன் சகித்துக்கொள்ளச் சித்தமாகயிருக்கின்றேன்.

வா.அ. ஒருவன் போய் அந்தச் சமணனை அழைத்து வாருங்கள் சபைக்கு.

சோ. வாயிலண்டை காத்திருக்கிறான்.—இதோ வருகிறான், அரசே.

ஷாம்லால் வருகிறான்.

வா.அ. வழி விடுங்கள்; நமது சமூகத்திற்கு நேராக வந்து நிற்கட்டுமவன். ஷாம்லால், கடைசி நிமிஷம்வரையில் இவ்வாறு தீய குண முடையவன்போலிருந்து, முடிவில் இப்பொழுது உன்னிடம் மேலுக்குத் தோன்றும் ஆச்சரியகரமான கடூர குணத்திலும், அதிக ஆச்சரியமான ஜீவகாருண்யத்தையும் பச்சாத்தாபத்தையும் காட்டப்போகிறு யென்று நானும் நினைக்கின்றேன், மற்றெல்லோரும் அப்படியே நினைக்கின்றனர். அன்றியும் இப்பொழுது நீ கட்டாயமாய்க் கேட்கும் இந்தச் செல்வமிழந்த வர்த்தகனுடைய உடம்பில் ஒரு ராத்தல் மாம்சமாகிய அபராதத்தை, க்ஷமிப்பதுமன்றி, பச்சாத்தாபமென்பதைக் கொஞ்சமேனும் பாராட்டத் தேர்ந்திலாத பிடிவாதமுடைய பாதகரான பாமரர்களுடைய கல்லினும் கடின மனத்தையும், இரும்பை யொத்த ஹிருதயத்தையும் இளகச்செய்து கருணைகூறும்படிச்செய்யத்தக்க,ஒன்றின்மேலொன்ருய்த் தாளமுடியாதபடி தற்காலம் இவருக்கு நேர்ந்திருக்கிற, கோடீஸ்வரனை வர்த்தகனையும் குன்றச்செய்யும் நஷ்டங்களை, பரிவுடைக் கண்களாற் கண்டு, ஜீவதயை மிகுந்தவனுய், அன்புகூர்ந்து, அவர் கொடுக்கவேண்டிய அசலி

லேயே அரைப் பங்கு தள்ளிக் கொடுப்பாய் என்றும், நினைக்கின்றோம். உனது பரிவுடைய பதிலை எதிர்பார்க்கிறோம் நாங்கள் எல்லோரும்.

ஷா. என்னுடைய எண்ணத்தை முன்பே சந்நிதானத்திற்கு அறிவித்திருக்கின்றேன். என்னுடைய மதத்தின்மீது ஆணையிட்டு, எப்படியாவது என் பத்திரத்தின்படி எனக்குச் சேர வேண்டிய அபராதத்தைப் பெறுவேன், என்று சத்தியஞ் செய்திருக்கிறேன். அதைக் கொடுக்கமாட்டேன் என்று நீர் கூறிவிட்டால், அந்தப் பழி உமது செங்கோலையும், ராஜ்யத்தையும் சேரட்டும். மூவாயிரம் பொன்னைப் பெறுது புலால் வீசும் புன்மையான சிறிது மாம்சத்தை ஏன் இச்சிக்கின்றேன் என்று நீர் கேட்பீர்; அதற்கு நான் காரணம் கூறமாட்டேன். அது என் இஷ்டம் என்பேன். போதுமோ பதில்? என் வீட்டில் ஒரு எலி உபத்திரவம் செய்ய, அதை அழிப்பவனுக்குப் பதினாயிரம் பொன் தர நான், இச்சை கொண்டால், அதற் கென் சொல்வீர்?—என்ன? உமது கேள்விக்குப் பதில் போதுமா? சில மனிதர்களுக்கு, வாயைத் திறந்துகொண் டிருக்கும் வராகத்தைப் பார்க்க வெறுப்புண்டாகும்; சிலருக்கு, குலைக்கும் நாயைக் கண்டால், கோபம் அதிகமாய் மூளும்; சிலருக்கு, துருத்தியைப் பிடித்து ஒருவன் ஊதினால், துடப்பத்தை எடுத்து அடிக்கலாமா என்று தோற்றும். பிரீதியானது நமது குணகுணங்களுக்கு எஜமானனாகி, தன் விருப்பு வெறுப்பின்படி, அவைகளை ஆட்டி வைக்கின்றது. இப்பொழுது உமது கேள்விக்கு விடையைக் கேளும்; "வாயைத் திறந்துக்கொண்டிருக்கும் வராகத்தைக் கண்டால் உனக் கென்ன? ஒரு குற்றமும் செய்யா நாயைக் கண்டால் உனக் கென்ன? துருத்தியைப் பிடித்து ஒருவன் ஊதினால் உனக்கென்ன?" என்று நாம் கேட்டால், எப்படி அவர்களெல்லோரும், அதற்குத் தக்க நியாய மொன்றும் எடுத்துரைக்க முடியாது, தங்களுக்கு வெறுப்புண்டாவதினால் அவர்கள் மீது வெறுப்பு கொள்ளும்படியான, விலக்க

முடியாத அத்தனை வெட்கத்திற்கு ஆளாகின்றனரோ; அவ்விதமே, வேறு நியாயம் சொல்ல என்னால் ஏலாது; நான் சொல்லவும் போகிற தில்லை. எனக்கு நஷ்டம் வரும்படியாக இவ்வழக்கை அவர்மீது நான் விடாது தொடர்வதற்குக் காரணம் அநந்தநாதர்மீ தெனக் கிருக்கும் துவேஷமே; என் மனத்தில் குடிகொண்டிருக்கும் அவர்மீ துள்ள வெறுப்பே. உமது கேள்விக்குப் பதில் பெற்றீரா?

பா. பச்சாத்தாப மில்லாத பாபியே! உனது குரூரமான கிருத்தியத்தை க்ஷமிப்பதற்குத் தக்க பதில் ஆகாதே இது.

ஷா. உனக்கு நான் பதில் சொல்லி, உன்னைத் திருப்தி செய்ய வேண்டிய நியாய மில்லை.

பா. தங்களுக்கு அன்பில்லாத பொருளை அழிக்கின்றார்களா எல்லா மனிதர்களும்?

ஷா. தனக்கு அழிக்க மன மில்லாத பொருளை வெறுக்கின்றானா ஏவனாவது?

பா. முதற் குற்றத்திற்கே ஜன்மத் துவேஷம் பாராட்டலாமா?

ஷா. என்ன! உன்னை ஒரு பாம்பு இரண்டு முறை கடிக்கவிடுவாயோ?

அ. உன்னை வேண்டுகிறேன். அவனிடத்தில் ஏன் வீண் வார்த்தையாடுகிறாய்? அதைவிட, சமுத்திரக்கரையோரம் சென்று சப்திக்கின்ற அலைகளை அடங்கி யிருக்கும்படிச் சொல்லலாம், தன் குட்டிக்காக தாய் ஆட்டை ஏன் கூவி யழச் செய்கிறாயென்று கோனாயிடம் நியாயம் கேட்கலாம்; பெருங் காற்றினால் மோதப்படும்பொழுது, மலைமீதுள்ள பெரு மரங்களைத் தங்களுடைய உயர்ந்த சிகரங்களைச்சலனப்படவிடாமலும் சப்திக்காமலும் இருக்கும்படி கட்டளை யிடலாம்; இதைப்பார்க்கிலும் கடினமான பொருள் உலகத்தில் இல்லையென்று சொல்லும்படியான, இந்த மாறுபாடியின் மனத்தை இளகச்செய்ய முயல்வதைவிட, வேறு எந்த அசாத்திய

மான காரியத்தையும் செய்து முடிக்கலாம். ஆகவே உன்னை வேண்டுகிறேன் ; இனி ஒன்றும் கொடுப்பதாக நீ கூறவேண்டாம், வேறு பிரயத்னம் ஒன்றும் செய்யவேண்டாம். ஆலஸ்யம் ஒன்றுமில்லாமல் அதிவிரைவினிலேயே எனக்கு நியாயம் சொல்லப்படட்டும், சமணன் தன் இச்சைப்படி நடத்தட்டும்.

பா. உன்னுடைய மூவாயிரம் பொன்னுக்காக இதோ ஆறுயிரம் பொன் இருக்கிறது.

ஷா. அந்த ஆறுயிரம் பொன்னில் ஒவ்வொரு பொன்னையும் ஆறாக வகுத்து, அந்த ஒவ்வொரு பாகமும், ஒரு பொன்னுயிருந்தாலும், அதை நான் வாங்கிக்கொள்ளமாட்டேன்; என் பத்திரத்தின்படியே நான் பெறுவேன்.

வா.அ. நீ மற்றவர்களிடம் கருணை பாராட்டாவிட்டால் மற்றவர்கள் உன்னிடம் எப்படி கருணை பாராட்டுவார்கள் என்று எண்ணுகின்றுய் ?

ஷா. நான் தப்பிதம் ஒன்றும் செய்யாவிட்டால், மற்றவர்களுடைய கருணையை எதிர்பார்த்து அஞ்சுவானேன் ? உங்களிடத்தில் நீங்கள் விலைக்கு வாங்கிய எத்தனை அடிமைக்காரப் பறையர்கள் இருக்கிறார்கள் ? அவர்களை உங்களுடைய ஆடுமாடுகள் கழுதைகளைப்போல உங்களுக்கு ஈனமான அடிமைத் தொழில்கள் புரியும்படி செய்கிறீர்கள் ; ஏன் ? நீங்கள் விலை கொடுத்து வாங்கியபடியால் ; அவர்களை அடிமைத் தனத்தினின்றும் நீக்கிவிடுங்கள்; உங்கள் பெண்டு பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்துகொள்ளுங்கள் ; ஏன் அவர்கள் சுமைகளைத் தூக்கி வியர்க்கவேண்டும்? உங்களைப்போலவே அவர்களுக்கும் மிருதுவான மஞ்சங்கள் கொடுத்து, நீங்கள் உண்ணும் ருசியான உணவையே அவர்களுக்கும் கொடுக்கின்றதுதானே ? என்று நான் சொல்வேனாயின், "அந்த அடிமைகளெல்லாம் எங்கள் சொந்தம்" என்று பதில் உரைப்பீர்கள், அதே மாதிரி, நானும் உங்க

ளுக்குப் பதில் சொல்லுகின்றேன். அவரிடமிருந்து நான் இப்பொழுது கேட்கும் அந்த ஒரு ராத்தல் மாம்சம் நான் அதிக விலை கொடுத்து வாங்கியது, அது என்னுடையது; அதை நான் எப்படியும் பெறவேண்டும், அதை எனக்கு நீர் கொடுக்கமாட்டேன் என்றால், உங்கள் நியாயத்தின் பவிஷ்ய மென்ன? இந்த நாட்டு மஹாராஜாவின் நியாய சட்டங்களின் பல னென்ன?—நான் நியாயம் கேட்கின்றேன்; மஹாராஜா எனக்குப் பதில் சொல்லட்டும்; எனக்குக் கொடுப்பீரா, மாட்டீரா?

வா.அ. இதைத் தீர்மானிக்கும்படி நான் சொல்லி யனுப்பியிருக்கும், பல்லவராயர் என்னும் நம்முடைய மந்திரி, இன்று இங்கு வராவிட்டால், எனது அதிகாரத்தால், இவ்வழக்கினை விசாரியாது நிறுத்திவிடுவேன்.

சோ. மஹாராஜா, மதுரையினின்றும் அந்த மந்திரியிடமிருந்து, நிருபங்களுடன் இப்பொழுதுதான் வந்த ஒரு தூதன், வெளியே காத்துக்கொண் டிருக்கிறான்.

வா.அ. அந்த நிருபங்களை வாங்கி வா நம்மிடம்; அந்தத் தூதனை அழை.

பா. அநந்தா! உற்சாகமா யிரு, சொல்வதைக் கேள். இன்னும் தைரியத்தைக் கைவிட வேண்டியதில்லை. எனக்காக நீ ஒரு சொட்டு ரத்தத்தை இழப்பதன்முன் இந்த சமணனுக்கு என்னுடைய எலும்பு, ரத்தம், தசை, தேக முழுவதையும் கொடுக்கின்றேன், அஞ்சாதே.

அ. மந்தை ஆட்டில் மலிந்த ஆடே முதலில் பலி கொடுக்கத் தக்கது, கைந்திருக்கும் பழமே முதலில் பூமியில் வீழ்கின்றது; அதுபோலவே நான்தான் மரிக்கவேண்டும். நீ உயிருடனிருந்து எனக்குக் கர்மக் கிரியைகளைச் செய்வதைவிட உனக்கு மேன்மையாம் தொழில் என்னுளது?

நீலகேசி ஒரு நியாயவாதியின் குமாஸ்தாவைப்போல ஆண்வேடம்பூண்டு வருகிறாள்.

வா.அ. மதுரையி லிருந்தா வருகின்றாய்? பல்லவராயரிடமிருந்தா வருகிறாய்?

நீ. ஆம், மகாராஜா. பல்லவராயர் தம்மைப் பணிவதாகச்சொல்லச் சொன்னார். [ஒரு நிருபம் கொடுக்கின்றாள்.]

பா. ஏன் அப்பா, உனது கத்தியை அத்தனை ஆவலோடு தீட்டுகின்றாய்?

ஷா. அதோ, வாங்கிய கடனைக் கொடுக்க வகை யில்லாத, அந்த வணிகனிடமிருந்து அபராதத்தை அறுத்து எடுத்துக் கொள்ள.

கி. சண்டாளனான சமணனே! அவ்விடத்தில் தீட்டுவதைவிட, கல்லாகிய உன் மனத்தில் தீட்டு, அதிககூராகும். ஆயினும், எந்த ஆயுதமும், கொலைஞனுடைய கோடாலியுங்கூட, உன்னுடைய கொடிய பொறாமையைப்போல் அவ்வளவு கூருடைத்தா யிராது? என்ன பிரார்த்தனையினாலும் உன் கல் மனங் கரையாதோ?

ஷா. உன் புத்தியைக் கொண்டு நீ செய்யும்படியான பிரார்த்தனையினால் அது கரையாது.

கி. பிடிவாதக்கார நாயே! நீ பித்தம்பிடித்துச் சாகாயா! நீ உயிருடன் இருப்பதே தர்மத்திற்கு ஒரு நிந்தனையாகும். மிருகங்களுடைய ஆன்மாவானது மனிதர்களுடைய உடலிற்புகுகின்றது என்று சில பெரியோர்கள் கூறுவதை நம்பும்படிச் செய்கிறாய் நீ. போன ஜன்மத்தில் நீ ஒரு தொண்டனாய்ப் பிறந்திருக்கவேண்டும். மனிதர்களைக் கொன்று தின்றதற்காக அதை கழுத்திற் சுருக்கிட்டுக் கொல்ல,குரூரமான அதனுயிர் தூக்கு மரத்தினின்றும் பறந்தோடி வந்து, பாபிஷ்டியாகிய உன் தாயார் வயிற்றில் நீ இருந்தபொழுது, உன் உடலிற் பிரவேசித்திருக்கவேண்டும். அதனால், பங்கினி

யால் வதங்கி பசி வெறி கொண்டு, ரத்தத்தைக் குடிக்கப் பித்தங்கொண்டு திரியும் குரூரமான கோனுயைப்போன்ற குண முடையவனு யிருக்கிருய்.

ஷா. நீ இந்த மாதிரி கத்துவதினுல், என் பத்திர மென்னமோ ரத்தாகப் போகிற தில்லை; நீ ஏன் வாய் நோக வளவள வென்று கத்துகிருய் அப்பனே, உன் புத்தியைப் பத்திரப் படுத்திக் கொள்; இல்லாவிட்டால் சீக்கிரத்தில் பாழாய் விடும். நியாயத்தைப் பெற இங்கு நான் நிற்கின்றேன்.

வா.அ. பல்லவராயர் அனுப்பிய இந்நிருபத்தில், இதனுடன் நியாய சாஸ்திரம் நன்குணர்ந்த அதிபால்யரான வித்வான் ஒருவர் வருவதாக எழுதி யிருக்கின்றது. எங்கே அவர் ?

நீ. அருகாமையிற் காத்திருக்கின்ருர், அரசரது உத்தரவைப் பெற்று உள்ளே வர.

வா.அ. சந்தோஷமாய் வரட்டும்.—உங்களில் சிலர் சென்று மரியா தையுடன் நமது சபைக்கு அழைத்து வாருங்கள் அவரை. இதன் மத்தியில், பல்லவராயர் நிருபத்திலெழுதியிருப்பதை சபையார் அறியட்டும்.

நீ. [படிக்கிருன்.] ''மஹாராஜா அவர்கள் சந்நிதானத்திற்கு தங்களுடைய கடிதம் வந்து சேர்ந்தது. இச் சமயம் எனக்குத் தேகம் மிகவும் அசௌக்கியமா யிருக்கின்றது. ஆயினும் உமது கடிதம் வந்து என்னிடம் சேர்ந்த தருணத்தில் ராமநாதபுரத்திலிருந்து என்னைக் காண்பதற்காக வந்த நியாய சாஸ்திரம் நன் குணர்ந்த வித்வா னெருவர், என் பக்கத்தி லிருந்தார். அவர் பெயர் பாலதாசர். நான் அவருக்கு, வணிகனுன அநந்தநாதருக்கும் சமணனுக்கும் உண்டான வழக்கைப்பற்றித் தெரிவித்தேன். நாங்களிருவருமாக அநேக நியாய சாஸ்திரங்களை வாசித்துப் பார்த்தோம். இவ் வழக்கைப்பற்றி என் எண்ணத்தை அவருக்குத் தெரிவித் திருக்கின்றேன். அதை மனத்தில் வகித்து, என்னுல் அள

விட்டுக் கூறமுடியாத அவரது கல்வியைக்கொண்டு விர்த்தி செய்து, என் வேண்டுகோளுக் கிரங்கி, எனக்குப் பதிலாக சந்நிதானத்தின் கட்டளையை நிறைவேற்ற சமுகம் வந்து சேர்வார். இவர் வயதிற் சிறியவர். வயதிற் சிறியவராயி னும் இத்தனை புத்தியிற் பெரியவரை நான் இதுவரையிற் கண்டில னாதலால், அவரது இளமையானது அவர் தக்க படி மரியாதையைப் பெறுவதற்கு ஒரு தடங்கலாகா திருக்க வேண்டுமென்று நான்வேண்டுகிறேன். அவரைச் சந்நிதா னத்தின் கிருபைக்குப் பாத்திரனாக அனுப்புகிறேன்; விசார ணையில் அவரது புத்தியின் மேன்மை நன்ருய் வெளிப் படும்.''

வா. அ. கற்றுணர்ந்த பல்லவராயர் எழுதிய கடிதத்தைக் கேட்டீர் களல்லவா ?—இதோ, அவரனுப்பிய வித்வான் வருகிரு ரென நினைக்கிறேன்.

நியாயவாதியின் உடையில் சரோஜினி வருகிருள்.

வாரும், வாரும்; வயோதிகரான பல்வவராயரிடமிருந்தா வரு கின்றீர் ?

ச. ஆம், மஹாராஜா.

வா. அ. மிகவும் சந்தோஷம். உட்காரும் இவ்விடத்தில். இப்பொ ழுது இச்சபைக்கு முன்பாக நியாயத்திற்கு வந்திருக்கும் இந்த வழக்கின் விவரமெல்லாம் அறிவீரா ?

ச. எல்லா விவரமும் அறிந்திருக்கின்றேன். இங்கே யார் அந்த வணிகர் ? யார் அந்தச் சமணன் ?

வா. அ. அநந்த நாதரே !—ஷாம்லால்!—இருவரும் முன்பாக வந்து நில்லுங்கள்.

ச. ஐயா, உமது பெயர்தானு ஷாம்லால் ?

ஷா. ஷாம்லால்தான் என் பெயர்.

ச. நீர் கொண்டு வந்திருக்கும் வழக்கானது வெகு விந்தையான தே. ஆயினும் வாணீபுரத்து நியாய சட்டத்தின்படி, நீர்

செல்லும் மார்க்கம் தவறெனத் தடுப்பதற்கு ஹேது வில்லை. —அவரது கைக்குள் அகப்படுக்கொண் டிருக்கிறீ ரல்லவா நீர் ?

அ. ஆம்; அப்படித்தான் அவன் சொல்லுகிறுன்.

ச. பத்திரத்தை நீர் ஒப்புக்கொள்ளுகின்றீரா ?

அ. ஆம்.

ச. ஆனுல் மாறுபாடி கருணை கூறவேண்டும்.

ஷா. எந்தக் கட்டாயத்தின் மீது நான் அப்படிச் செய்யவேண்டும் ? அதைக் கொஞ்சம் சொல்லு மெனக்கு.

ச. கசக்கிப் பிழிய ஏலாது, காருண்ய குணம்; வானத்தினின்று மிழியும் இனிய மழைநீரைப்போல் அது வையகத்தின் மீது தாணுகப் பெருகுகின்றது. இரண்டு விதத்தில் அது இன்பம் தருவதாகும். அதைக் கொடுப்பவனுக்கும் இன்பத்தை யுண்டுபண்ணுகிறது, பெறுபவனுக்கும் இன்பத்தை யுண்டு பண்ணுகின்றது, அது எவ்வளவு வல்லமைச்சாலி யிடத் திருக்கின்றதோ, அவ்வளவும் அதற்கு மகிமை யாம். மன்னருக்கு அவரது மகுடத்தைப்பார்க்கிலும் அதிக அழகைத் தருவதாகும். அவரது செங்கோல் இவ்வுலக ஆட்சியின் திறத்தைக் காட்டும் ; அவரைக் கண்டு எல்லோரும் பயப் படச் செய்கின்ற அவரது பெருமைக்கும் அதிகாரத்திற்கும் அது ஓர் அறிகுறி யாகும். காருண்யமோ,இச் செங்கோலின் ஆளுகைக்கு மேலானது. அரசர்களுடைய ஹிருதயமே சிம் மாசனமாக அமர்ந்துளது. ஈசனுக்கே அது இன்றியமை யாக் குணமாம். ஆகவே கருணையோடு தர்மத்தை நடத்தும் இந்நில உலக மன்னரது ஆளுகையானது, ஜகதீசனுடைய ஆளுகையை மிகவும் ஒத்திருக்கும், ஆகவே, ஐயா, சமணனே, நியாயப்படி நடத்தவேண்டுமென்பதே உமது கட்சி யானபோதிலும். யோசியும். சரியான நியாயப்படி நமக்கு விதிப்பதானுல், நம்மில் ஒருவனும் நற்கதி யடையமாட்டான்,

நம்மீது கருணை கூறும்படி ஈசனைக் குறித்துப் பிரார்த்திக்கின்றோம்; அந்தப் பிரார்த்தனையே மற்றவர்களிடம் நாம் கருணையுடன் நடக்கவேண்டும் என்று நமக்குக் கற்பிக்கின்றது. உமது கட்சியினது நியாயத்தின் கடூரத்தைச் சற்றே தணிக்கும் பொருட்டே, இவ்வளவு தூரம் நான் எடுத்துக் கூறினது. நீர் அப்படித்தான் நடக்கவேண்டுமென்றால், பட்சபாத மில்லாத வாணீபுரத்து நியாய சட்டத்தின்படி, அதோ நிற்கும் வர்த்தகருக்கு விரோதமாகத் தீர்மானிக்கவேண்டியதுதான்.

ஷா. என் கர்மத்திற்கு நான் உத்தரவாதம்! என் பத்திரத்திற் கண்ட அபராதத்தை எனக்குக் கொடுக்கும்படி நியாயம் கேட்கின்றேன்.

ச. வாங்கிய கடனைத் தீர்க்க வகை யில்லையா இவர்க்கு?

பா. இதோ! அவருக்குப் பதிலாக இதோ அத்தொகையை மஹாராஜாவின் சந்நிதானத்தில் நான் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன். இது போதாதாயின், இருமடங்கு கொடுக்கின்றேன். அதுவும் போதாதாயின், அந்தத் தொகைக்குப் பதின்மடங்கு கொடுக்க நான் உடன்படுகின்றேன்; தவறுவேனாயின் என் கைகள், சிரசு, என் ஹிருதயத்தையே, அபராதமாகக் கொடுக்கின்றேன். இதுவும் போதாதென்றால், மூர்க்க குணமானது, சத்தியத்தை அழுத்திடப் பார்ப்பது நன்றாய் விளங்கும். ஆகவே உம்மை நான் மிகவும் வேண்டிக்கொள்ளுகின்றேன்; ஒரு முறை நியாய சட்டத்தை உமது அதிகாரத்திற்குட்படுத்தி சற்றே மாறச் செய்யும்; பெரிய நன்மை செய்வதன் பொருட்டு சிறு பிழையொன்றிழையும்; எப்படியாவது இந்தப் பிசாசின் எண்ணத்தில் கல்லைப் போடும்.

ச. அப்படிச் செய்ய லாகாது. ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை மாற்றுவதற்கு வாணீபுரத்தில் எவருக்கும் அதிகாரமில்லை. ஒரு முறை இவ்வாறு தவறி நடந்தால், அதுவே ஒரு திருஷ்டாந்தமாகக் குறிக்கப்பட்டு, பிற்பாடு இதைப்போன்ற பல

தவறுகள் ராஜாங்கத்தில் நுழைந்திட இடங் கொடுக்குமது; ஆகவே அது கூடாது.

ஷா. ஆஹா! தர்மராஜாவே நியாயம் சொல்ல வந்திருக்கின்றார் ஆம், தர்மராஜாதான். ஐயா! தர்மப் பிரபு, தாம் வயதில் சிறியவராயினும் உம்மை நான் எவ்வளவு மதிக்கின்றேன்!

ச. தயவு செய்து அந்தப் பத்திரத்தைக் காட்டும், நான் சற்றே பார்க்கவேண்டும்.

ஷா. நியாய சாஸ்திரம் நன் குணர்ந்த வித்வானே! இதோ இருக்கின்றது, இதோ இருக்கின்றது.

ச. ஷாம்லால், உமக்குச் சேரவேண்டிய தொகைக்கு மூன்று பங்கு கொடுக்கின்றார்கள்.

ஷா. ஐயோ! நான் சத்தியம் செய்திருக்கின்றேன்! சத்தியம் செய்திருக்கின்றேன்! எங்கள் கடவுளின் முன்பாகச் சத்தியம் செய்திருக்கின்றேன்! தப்புப் பிரமாணம் செய்த பாபத்திற்கா உடன்படுவேன் நான்? இந்த வாணீபுரம் முழுவதும் எனக்கு வருவதானாலும் செய்யேன் அங்ஙனம்.

ச. ஏன் இந்தப் பத்திரம் தவணை கடந்துவிட்டது. அதன் நிபந்தனைகளின் பிரகாரம் நியாயமாய் இந்தச் சமணர் இந்த வர்த்தகருடைய மாம்சத்தில் ஒரு ராத்தல், ஹிருதயத்திற் கருகாமையில் வெட்டி எடுத்துக்கொள்ளலாம்.—கொஞ்சம் கருணை புரியும்! உமது பணத்திற்கு மூன்று பங்கு பெற்றுக் கொள்ளும்; இந்தப் பத்திரத்தைக் கிழித் தெரியும்படி எனக்கு உத்திரவு கொடும்.

ஷா. அதில் கண்ட ஏற்பாட்டின்படி அந்தப் பத்திரத்தின் அபராதம் செலுத்தப்பட்டால், உடனே உத்திரவு கொடுக்கின்றேன். நீரோ தர்ம சாஸ்திரம் நன்கு யறிந்தவராய்க் காணப் படுகிறீர். உமக்கு நியாய சட்டம் தெரியும். சட்டத்திற்குச் சரியான அர்த்தம் கூறியிருக்கின்றீர். எந்த நியாய சட்டத்திற்கு நீர் ஓர் அஸ்திபாரமா யிருக்கின்றீரோ, அந்த நியாய

சட்டத்தின்மீ தாணைப்படி, எனக்குத் தீர்மானம் கொடுக்கும் படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்னுடைய உயிரின்மீ தாணைப்படி. எந்த மனிதனுடைய வார்த்தைகளாலும் என் எண்ணத்தினின்றும் என்னை மாற்ற முடியாது என்று சத்யம் செய்கிறேன். பத்திரத்தை விட்டு நான் அணுவளவும் அசையப் போகிறதில்லை.

அ. சீக்கிரத்தில் தீர்மானம் செய்யும்படி மனப் பூர்வமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ச. ஆனால் இதுதான் தீர்மானம் - அவரது கத்திக் கிரையாக உமது மார்பைச் சித்தப்படுத்தவேண்டியது தான்.

ஷா. தர்மப் பிரபு! தர்மப் பிரபு! என்ன கல்வியுடைய இளைஞர்!

ச. ஏனெனில் நியாய சட்டத்தின் நிஜமான கருத்திற்கு, இந்தப் பத்திரத்திற் கண்டிருக்கும் அபராதமானது, முற்றிலும் ஒத்ததாகவே யிருக்கின்றது.

ஷா. அது மிகவும் உண்மை! நிஷ்பக்ஷபாதமான நியாய முணர்ந்த பிரபுவே! வயதிற் சிறியவராயினும் புத்தி சூட்சுமத்தில் எவ்வளவு பெரியவரா யிருக்கின்றீர்!

ச. ஆகையினால் உமது மார்பைச் சித்தம் செய்யும்.

ஷா. ஆம், மார்பை—அப்படித்தான சொல்கிறது பத்திரமும்—சொல்ல வில்லையா தர்மப் பிரபு? "ஹிருதயத்திற்கு அருகாமையில்" — எழுதியிருக்கும் பதங்கள் அவைகளே.

ச. அப்படித்தா னிருக்கிறது; திராசு சித்தமா யிருக்கின்றதா மாம்சத்தை நிறுக்க?

ஷா. இதோ சித்தமாய் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

ச. ஷாம்லால், உமது செலவில் ஒரு ரண வயித்தியனைப் பக்கத்தில் ஆயத்தமா யிருக்கும்படி செய்யும், அவர் தேகத்திலுள்ள ரத்தமெல்லாம் இழந்து மரிக்காதிருக்கும்படி அவரது காயத்தைக் கட்ட.

ஷா. பத்திரத்தில் அப்படி ஏதாவது கண்டிருக்கின்றதா ?

ச. அப்படி விவரமாய் எழுதியில்லை—இல்லாவிட்டாலு மென்ன? தர்மத்திற்காவது நீர் அவ்வளவு செய்வது நல மாகும்.

ஷா. அதை நான் காணேன் ; அவ்வாறு பத்திரத்தில் எழுத வில்லை.

ச. ஐயா, வர்த்தகரே, தாம் ஏதாவது சொல்லிக்கொள்ள வேண் டிய திருக்கின்றதா ?

அ. அதிக மொன்று மில்லை. எல்லாவற்றிற்கும் ஆயத்தமாய்த் துணிந்திருக்கின்றேன்—பானுசேனு, எனக்கு விடை கொடு. நீ நீடூழி காலம் சுகமாய் வாழ்வாயாக ! உன்பொருட்டு இந்த ஸ்திதிக்கு வந்தேனென்று வருத்தப்படாதே ! ஏனெனில் இவ்விஷயத்தில், சாதாரணமாக மனிதர்களுக்குக் கிடைக் கும் ஸ்திதியினும் மேலான ஸ்திதி, அதிர்ஷ்டவசத்தால் எனக்குக் கிடைத்திருக்கின்றது. உலக வழக்கமோ, இள மையில் சீமான்களா யிருந்தவர்கள்,பிறகு தமது செல்வமெல் லாம் இழந்து,முதுமையில் தேக மெலிவடைந்து,வறிஞராய் மனக்கவலையுடன் தமது வாழ்நாட்களைக் கஷ்டத்துடன் கழிக் கச் செய்வதே யாம். அவ்வாறு நெடுநாள் நான் துயர மனு பவிக்காதபடி உடனே விரைவில் என் கவலையையெல்லாம் ஒழிக்கின்றேன். உனது உத்தமியான பத்தினியை நான் விசாரித்ததாகச் சொல். அநந்தநாதன் மடிந்த மார்க்கத்தை அவளுக் குரை. உன்மீது நான் எவ்வளவு அன்புடைய வனா யிருந்தேன் என்று சொல். நான் மடிந்த விதத்தை யுண்மையாய்த் தெரிவி. எல்லாக் கதையும் சொல்லி முடிந்த பின், பானுசேனனுக்கு ஒருகாலத்தில் உண்மையான நண் பன் ஒருவன் இருந்தானா இல்லையா என்பதை அவளே தீர்மானிக்கும்படி கேள். உனது நண்பனை இழக்கவேண்டி வருகின்றதே என்று நீ துக்கப்படாதே. உனது கடனைத் தீர்ப்பதற்காக அவன் துக்கப்படவில்லை. ஏனெனில் இந்தச் சமணன் மாத்திரம் ஆழமாய் வெட்டி எடுப்பானாயின் அந்

தக் கடனை யெல்லாம் என் முழு ஹிருதயத்துடன் செலுத்தி விடுவேன்.

பா. அநந்தா! நான் மணந்திருக்கும் மனைவி எனக் கென் னுயிரினும் இனியாள். ஆயினும் இவ் வுலகமும், என் னுயிரும், என் உயிருக் குயிரான மனைவியும், எல்லாம் உன் உயிருக்குச் சமானமாக மதிக்கமாட்டேன். அவைகளை யெல்லாம் உன்னை மீட்கும் பொருட்டு இந்தப் பிசாசுக்கு இழக்கத் துணிவேன், பலி கொடுக்கத் துணிவேன்.

ச. உமது மனைவி உமதருகிலிருந்து நீர் இவ்வாறு கூறுவதைக் கேட்பாளாயின், அதன் பொருட்டு உமக்கு வந்தனம் செய்ய மாட்டாள்.

கி. எனக்கும் ஒரு மனைவி யிருக்கின்றாள். அவள்மீது நான் அதிக காதல்கொண்டிருக்கிறேன் என்று உறுதியாய்க் கூறுவேன்; ஆயினும் இந்தக்ஷணம் அவள் தெய்வலோகத்திலிருந்து எந்தத் தேவதையையாவது பிரார்தித்து இந்தப் பாபிஷ்டியான சமணன் பாழான மனத்தைத் திருப்பமாட்டாளா என்று கோருகிறேன்.

நா. இந்தக் கோரிக்கையை அவள் முதுகின் பின்னாக நீர் கூறுவது நலமாம். இல்லாவிடின் இக் கோரிக்கையானது உமது வீட்டில் கலகத்தினை விளைக்கும்.

ஷா. [ஒரு புறமாக] ஹிந்து மதத்தைச் சார்ந்த கணவர்களின் குணத்தைப் பார்! பெண்ணொருத்தி யிருக்கிறாள் எனக்கு. இப்படிப்பட்ட ஹிந்து மதஸ்தன் ஒருவன் அவளுக்குப் புருஷனாக யிருப்பதைவிட, பிணத்தைப்பிடுங்கித் தின்னும் பேயே புருஷனா யிருக்க விரும்புவேன். —வீணில் கால தாமதம் செய்கின்றோம்!—சீக்கிரம் தண்டனை விதிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

ச. அதோ நிற்கும் வர்த்தகருடைய மாம்சத்தில் ஒரு ராத்தல் உம்முடைய தாகும். சந்நிதானத்தில் உமக்கது தீர்மானமாகின்றது, சட்டமானது உமக் கதை யளிக்கின்றது.

ஷா. மகாப் பிரபு! தர்மப் பிரபு!

ச. அந்த மாம்சத்தை அவரது மார்பினின்றும் நீர் வெட்டி எடுத்துக் கொள்ளவேண்டும்; சட்டம் உமக் கதையளிக்கின் றது, சந்நிதானத்திலும் அப்படியே தீர்மான மாகின்றது.

ஷா. கற்றுணர்ந்த தர்மப் பிரபு!—தீர்மானமாகிவிட்டது,—வா - சித்தப்படு.

ச. கொஞ்சம் பொறும். இன்னும் கொஞ்சம் இருக்கின்றது இந்தப் பத்திரமானது உமக்கு ஒரு துளி ரத்தத்தையும் கொடுக்கவில்லை. அதில் விவரமாய் எழுதியிருப்பதெல்லாம், ஒரு ராத்தல் மாம்சம்தான். ஆகவே உமது பத்திரத்தின் படி பெற்றுக்கொள்ளும், உமக்குச் சேரவேண்டிய ஒரு ராத்தல் மாம்சத்தை எடுத்துக்கொள்ளும். ஆயினும் அதை அறுத் தெடுப்பதில் ஒரு ஹிந்துவினுடைய தேகத்தினின் றும் ஒரு துளி ரத்தம் சிந்துவீராயின், உமது நிலம் பொருள் எல்லாம், வாணீபுரத்துச் சட்டத்தின் பிரகாரம் ராஜாங்கத்திற்கு ஜப்தியாகி விடும்.

கி. ஆ! தர்மப் பிரபு! தர்மப் பிரபு! — அடே சமணு! கவன மாய்க் கேள்.—கற்றுணர்ந்த தர்மப் பிரபு!—

ஷா. அதுவா சட்டம்?

ச. நியாய சட்டத்தை நீரே பாரும்! சட்டத்தின் பிரகாரம் நடக்கவேண்டுமென்று நீர் நிர்ப்பந்திப்பதால் நீர் விரும்பு வதற் கதிகமாய் சட்டத்தின் பிரகாரம் நியாயம் செலுத்தப் படும், அஞ்சாதீர்.

கி. ஆ! கற்று ணர்ந்த தர்மப் பிரபு!—சமணு, கவனி.—கற்று ணர்ந்த தர்மப் பிரபு!

ஷா. ஆனால் பத்திரத்தின் தொகைக்கு மூன்று பங்கு கொடுங் கள்.—அதை ஒப்புக்கொள்ளுகிறேன். இந்த ஹிந்து பிழைத் துப் போகட்டும்.

பா. இதோ இருக்கின்றது பொன்.

ச. பொறும்!—சமணருக்கு நியாயப் பிரகாரம் நடத்தவேண்டும்—பொறும்—அவசரம் வேண்டாம்.—அந்த அபராதமன்றி வேறொன்றையும் அவர் பெறலாகாது,

கி. அடே சமணு!—தர்மப் பிரபு! கற்றுணர்ந்த தர்மப் பிரபு!

ச. ஆகவே மாம்சத்தை வெட்டியெடுத்துக்கொள்ள ஆயத்தப்படும். ஒரு துளி ரத்தமும் சிந்தக்கூடாது. அன்றியும் சரியாய் ஒரு ராத்தல் மாம்சந்தான் நீர் வெட்டி எடுத்துக் கொள்ளவேண்டும்; குறையவுங் கூடாது; அதிகப்படவுங் கூடாது. ஒரு ராத்தல் மாம்சத்தைவிட, கொஞ்சமேனும், அதிகமாகவோ குறைவாகவோ வெட்டி எடுத்தாலோ-அது குண்டுமணியளவில் இருபதி லொரு பங்கு அதிகபளுவாகவோ குறைவாகவோ இருந்தபோதிலும், அல்லது திராசின் முள்ளானது ஒரு மயிரளவு இந்தப் பக்கமாவது அந்தப் பக்கமாவது திரும்பியபோதிலும்—நீர் இறக்கவேண்டியதுதான், உமது சகல சொத்துக்களும் ராஜாங்கத்திற்கு ஜப்தி யாகவேண்டியதுதான்.

கி. ஆஹா! சமணு! தர்மராஜாவே வந்திருக்கிறார் உனக்கு நியாயம் சொல்ல! இரண்டாவது தர்மராஜா! சமணப் பேயே! அகப்பட்டது உன் குடுமி என் கையில்!

ச. சமணர் ஏன் தாமதிக்கிறார்? உமது அபராதத்தைப் பெற்றுக்கொள்ளும்.

ஷா. எனது அசலைக் கொடுத்துவிடுங்கள், நான் போகின்றேன்.

லா. இதோ சித்தமாய் வைத்திருக்கிறேன் உனக்காக, இதோ இருக்கின்றது.

ச. மஹாராஜாவின் சந்நிதானத்தில் அதை வேண்டாமென்று மறுத்திருக்கின்றார். ஆகவே அவர் பெறவேண்டியது நியாயப்படி தீர்மானமும், அவரது பத்திரத்தின் அபராதமுமே,

இ. ஆம், ஆம்! தர்மராஜா! நீர் தர்மராஜா என்பதற்குச் சந்தேகமில்லை, இரண்டாவது தர்மராஜா! இந்த மாறுபாடிக்கு யமதர்மராஜாவாக உதித்திருக்கின்றீர்! — அப்பா, சமணனே! அந்தப் பெயரை எனக்குக் கற்பித்ததற்காக உனக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

ஷா. என்னுடைய அசல் தொகையும் எனக்குக் கிடைக்காதா?

ச. உனக்கு அந்த அபராதம் ஒன்றுதான் கிடைக்கும். வேறொன்றும் கிடைக்காது. அந்த அபராதத்தையும் நான் கூறியவண்ணம் பெறவேண்டும், இல்லாவிடின் உனது உயிர் போம், சமணனே.

ஷா. ஆயின் அதை அவனே வைத்துக்கொண்டு நாசமாய்ப் போகட்டும்! வீண்வார்த்தையாட இனி தாமதியேன் இங்கு.

ச. பொறு! சமணனே! சட்டத்தின் வலையில் இன்னொரு விஷயத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறாய்! அன்னியனொருவன் வாணீபுரத்துப் பிரஜைகளில் ஒருவனது உயிரைப் போக்க, நேராகவாவது சுற்று மார்க்கத்திலாவது, பிரயத்னம்செய்ததாக அவன்மீது ருசுவானால், எவனது உயிரைப் போக்க, அவன் பிரயத்னப்படுகிறானோ, அவன் அந்த அந்நியனுடைய சொத்துகளில் பாதியை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், மற்றொருபாதி ராஜாங்கத்துப்பொக்கிஷத்தைச் சேரவேண்டுமென்றும், அப்படிப்பட்ட குற்றவாளியின் உயிர் வேறெவராலும் காக்கமுடியாதபடி மஹாராஜாவின் தயைக் குட்பட்டிருக்கிறதென்றும், வாணீபுரத்து நியாய சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது, அந்த அபாயமான ஸ்திதியில் நிற்கின்றாய் நீ, என்று நானுனக் குரைக்க வேண்டும், ஏனெனில், நீ கபடமார்க்கத்திலும், நேராகவும், பிரதிவாதியின் உயிரைப் போக்கப் பிரயத்னப்பட்டதாக சந்தேகமற ருசுவாயிருக்கிறது. ஆகவே நான் முன்புஎடுத்துக்

கூறிய தண்டனைக் குள்ளா யிருக்கிறாய். ஆதலால், உடனே மஹாராஜாவின் பாதத்தில் விழுந்து கருணை கூறும்படி கேள்.

கி. நீ கழு வேறிச் சாக உத்தரவு கேள். அதிலும் ஒரு கஷ்ட மிருக்கின்றது, உனது சொத்துக்களெல்லாம் ராஜாங்கத் துக்குச் சேர்ந்து போய்விட்டபடியால் உன்னிடம் கழு மர மொன்று வாங்கவும் காசு கிடையாது. ஆகவே ராஜாங்கத் தின் செலவிலேயே உன்னைக் கழு வேற்றவேண்டும்.

வா.அ. நமக்கும் உனக்கும் இருக்கின்ற குணத்தின் தாரதம்யத்தை நீ அறிந்திடும் பொருட்டு, நீ கேட்பதன்முன் உன்னுயிரை உனக்குக் கொடுத்தேன். உனது ஆஸ்தியில் பாதி அநந்த நாதரைச் சேரும். மற்றொரு பாதி ராஜாங்கத்துப் பொது பொக்கிஷத்தைச் சேரும். நீ வணங்கி மன்னிப்புக் கேட் பாயாயின், கொஞ்சம் அபராதத்துடன் அதை விட்டுவிடி னும் விடுவேன்.

ச. ஆம், ராஜாங்கத்துக்குச் சேரவேண்டியதை, அநந்தநாத ருடையதை யன்று.

ஷா. வேண்டாம், என்னுயிரையும் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள், அதைமாத்திரம் மன்னிப்பானேன்? என் வீட்டின் அஸ்திபாரத்தை எடுத்தால், என் வீட்டையே எடுத்துவிடுகிறீர்கள்! நான் எதைக் கொண்டு பிழைக்கின் றேனோ அதைப் பிடுங்கிக்கொண்டால், என்னுயிரையே பிடுங்கிக்கொள்கிறீர்கள்!

ச. ஐயா, அநந்தநாதரே, இவனுக்கு ஏதாவது நீர் தயை பாராட்டக்கூடுமா?

கி. ஒரு கழு மரம் ஒன்று, விலை யில்லாமல், வேறொன்றும் கொடுக்கமுடியாது, அதுவும் தர்மத்துக்காக!

அ. மஹாராஜா அவர்களும் சபையோரும் மனமிரங்கி ராஜாங் கத்துக்குச் சேரவேண்டிய அவனது ஆஸ்தியில் பாதி அப ராதத்தை க்ஷமித்துவிட்டால், மற்றப் பாதியை நான் உப

யோகித்து விர்த்திசெய்து, இவனது பிற்காலம், இவனது பெண்ணைக் கள்ளத்தனமாய்க் கலியாணம் செய்துகொண்ட புருஷனுக்குக் கொடுப்பதாய்ச் சம்மதிக்கின்றேன். ஆனல் அதற்கு இன்னும் இரண்டு நிபந்தனைகளுக்கு இவன் உடன் படவேண்டும்.—முதலாவது, இந்தக் கிருபையைப் பெற்ற தற்காக, உடனே இச் சமணன் ஹிந்துமதத்தைச் சேர வேண்டும்; இரண்டாவது, இவன் சாகுங் காலத்தில் தனக் குள்ள பொருள்களையெல்லாம் தன் பெண்ணுக்கும் மரு மகனுக்கும் தானமாகக் கொடுப்பதாக ஒரு தான பத்திரம் அரச சபையிலேயே, இப்பொழுதே எழுதி வைக்கவேண் டும்.

வா.அ. இந்தப்படி அவன் செய்யவேண்டும்; இல்லாவிடின் இவ னது உயிரை க்ஷமித்ததாக நான் சற்று முன் கூறியதை மீட்டுக்கொள்வேன்.

ச. சம்மதந்தானு, சமணு? என்னசொல்கிருய் நீ?

ஷா. சம்மதந்தான்.

ச. ராயசம், தானபத்திரம் ஒன்று எழுது.

ஷா. இவ்விடத்தை விட்டுப்போக எனக்கு உத்தரவுகொடுக்கும் படி கேட்டுக்கொள்ளுகிறேன், எனக்குத் தேக மொன்றும் சௌக்கியமாயில்லை. தான பத்திரத்தை என்னிடம் பின் ஞல் அனுப்புங்கள், நான் அதில் கையெழுத்துப் போடு கிறேன்.

வா.அ. போ! ஆனல் சொன்னதைச் செய்.

கி. உனக்குத் தீட்சை கொடுக்க ஒரு குருக்கள் பெறுவாய், நான் நியாதிபதியா யிருந்தால் இன்னும் மூன்று பெய ரைக் கொடுத்திருப்பேன்—உன்னைக் கழுவி லேற்ற.

[ஷாம்லால் போகிருன்.]

வா.அ. ஐயா, தாங்கள் அரண்மனைக்கு வந்து, இன்று என்னுடன் போஜனம் கொள்ளவேண்டும்.

ச. மஹாராஜா அவர்கள் என்னை மன்னிக்கும்படி மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றிரவே நான் மதுரைக்குப் புறப்படவேண்டும்; ஆகவே நான் உடனே புறப்படவேண்டிய அவசியம் இருக்கின்றது.

வா.அ. உமக்குச் சாவகாச மில்லாதது எனக்கு மிகவும் வருத்தமா யிருக்கின்றது —அநந்தநாதரே, இவருடைய மனத்தை நீர் திர்ப்தி செய்யவேண்டும், ஏனெனில் இவருக்கு நீர் மிகவும் நன்றியறித லுடையவரா யிருக்கவேண்டுமென்று எண்ணுகிறேன்.

[வாணீபுரத்தரசன், மந்திரிகள் பரிஜனங்கள் புடைசூழப் போகிறான்.]

பா. ஐயா, நானும் எனது நண்பனும் இன்று பெரும் பழியினின்றும் தப்பிப் பிழைத்தது உமது புத்தி சாதுர்யத்தால். ஆகவே, அதற் கீடாக, அந்தச் சமணனுக்குச் சேரவேண்டிய மூவாயிரம் பொன்னையும், நீர் மேற்கொண்ட சிரமத்திற்காக, உபசாரமாக, உமக் களிக்கின்றோம்.

அ. அதற்குமேலும், இனி எக்காலத்திலும் உமக்கு அன்பிலும் ஊழியத்திலும் கடன் பட்டவர்களா யிருக்கின்றோம்.

ச. எவன் மனம் திர்ப்தி யடைகின்றதோ அவன் பட்ட கஷ்டத்திற்குத் தக்க பலனைப் பெற்றவனாகிறான். எனக்கோ, உம்மைக் காப்பாற்றியதே பெரும் திர்ப்தியா யிருக்கின்றது; அதனாலே நான் பெரும் பலன் பெற்றதாக மதிக்கிறேன். என் மனமானது பணத்தின்மீது இதுவரையில் நாடினதன்று. இவ் விஷயத்தில் நாம் மறுபடியும் சந்திக்கும் பொழுது, என் ஞாபக மிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் சுகமாய் நெடுநாள் வாழ்வீராக எனக் கோருகிறேன்; நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

பா. ஐயா, நான் எப்படியும் உம்மைப் பலாத்காரம் செய்ய வேண்டும் இன்னும். உமது சிரமத்துக்கு — கூலியாக வல்ல —ஞாபகக் குறியாக, பரிசாக ஏதாவது எங்களிடம் பெற்றுப்போம். நான் உம்மை இரண்டு விஷயங்கள் எனக்கு தயைசெய்யும்படி வேண்டிக்கொள்ளுகின்றேன், என்வேண்டு கோளை மறுக்க லாகாதென்றும், என்னை மன்னிக்க வேண்டுமென்றும்.

ச. நீர் என்னை மிகவும் நிர்ப்பந்திப்பதனால், அதற் குடன்படு கின்றேன்; உமது கைக்குட்டையைக் கொடும். உமது ஞாபகமாக வைத்திருக்கின்றேன்—உமக் கென்மீ துள்ள பிரீதிக்கு அடையாளமாக, இந்த மோதிரத்தை எடுத்துக் கொள்ளுகின்றேன் உம்மிடமிருந்து. உம்முடைய கையை இழுத்துக் கொள்ளாதீர்? நான் வெறொன்றும் எடுத்துக் கொள்ளமாட்டேன். உமது பிரீதியில், நீர் இதை எனக்கு மறுக்கலாகாது.

பா. ஐயா, இந்த மோதிரம்—ஐயோ! இது அற்பமானது; இதை உமக்குக் கொடுத்து நான் அவமானத்துக் காளாக்கிக் கொள்ளமாட்டேன் என்னை.

ச. எனக்கு வேறொன்றும் வேண்டாம்; அதுதான் வேண்டும். இப்பொழுது நான் நினைத்துப் பார்க்கும்பொழுது, அதன் மீதுதான் நாடுகின்றது என் மனம்.

பா. இதன் விலையைவிட இதில் வேறு விசேஷ மிருக்கின்றது. தண்டோரா செய்து, வாணீபுரத்தி லுள்ள மிகுந்த விலை யுயர்ந்த மோதிரத்தைக் கண்டுபிடித்து, உமக்கு எப்படியும் வாங்கித் தருகின்றேன். இவ் விஷயத்தில் மாத்திரம் என்னை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன் உம்மை.

ச. ஐயா, இப்பொழுது தெரிகின்றது எனக்கு, நீர் கொடுக் கிறேன் என்று சொல்வதில் தாராளமாய்த்தானிருக்கிறீர்; முதலில், எப்படிப் பிச்சை கேட்பது என்று கற்பித்தீர்;

இப்பொழுது, பிச்சை கேட்டால் அதை எப்படி மறுப்பது என்று கற்பிக்கின்றீர் என எண்ணுகிறேன்.

பா. ஐயா, இந்த மோதிரம் என் மனைவி எனக்குக் கொடுத்தது. அவள் அதை என் விரலி லிட்டபொழுது, அதை நான் ஒரு காலும் இழக்கவாவது, விற்கவாவது, கொடுக்கவாவது கூடாதென்று, சத்தியம் செய்யும்படிச் செய்தாள்.

ச. இந்தப் போக்கானது தானம் கொடாம லிருக்க அநேகருக்கு உதவுகின்றது. உமது பெண்சாதி பயித்தியக்காரியா யல்லா மல், இந்த மோதிரத்தைப் பெற நான் எவ்வளவு அருஹன் என்பதை அறிந்திருப்பா ளாயின், இதை நீர் எனக்குக் கொடுத்ததற்காக உம்மீது எக்காலமும் துவேஷம் பாராட்ட மாட்டாள்.—சரி, நீர் சுகமா யிரும், நான் வருகிறேன்.

[சரோஜினியும், நீலகேசியும் போகிறார்கள்.]

அ. பானுசேனா, அவருக்கு அந்த மோதிரத்தைக் கொடுத்து விடு. அவரது மகிமையும் என் அன்பும் உன் மனைவியின் கட்டளைக்கு எதிராகச் சீர்தூக்கப் படட்டும்.

பா. போ! கிரிஜாநாதா, ஓடிப்போய் அவரைப் பிடித்து அவ ரிடம் இந்த மோதிரத்தைக் கொடு. உன்னால் முடியுமானால் அவரை அநந்தநாதர் வீட்டுக்கு அழைத்து வா. போ உடனே! சீக்கிரம். [கிரிஜாநாதன் போகிறான்.]

பா. வா. நீயும் நானும் அங்கே போய்ச் சேர்வோம். நாளைத் தினம் பொழுது விடிந்தவுடன் நாம் மணிபுரத்துக்குப் பறந் தோடிப் போவோம்.—வா. அநந்தநாதா. [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி.

இடம்.—வாணீபுரம் ஓர் வீதி.

சரோஜினியும், நீலகேசியும் வருகிறார்கள்.

ச. சமணனுடைய வீடு எது என்று விசாரித்து, அவனிடம் இந்தப் பத்திரத்தைக் கொடு, அவன் கையெழுத்து செய்யட்டும் இதில். நாமின்றிரவே புறப்பட்டுப்போய், நமது கணவர்கள் வருவதற்கு ஒருதினம் முன்பாகவே, வீடு சேர்வோம். இந்தப் பத்திரம் லீலாதரருக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருவதாகும்.

கிரிஜாநாதன் வருகிறான்.

கி. ஐயா, அம்மட்டும் உம்மைக் கண்டுபிடித்தேன்! பானுசேனர் மறுபடியும் ஆலோசனை செய்து, இம் மோதிரத்தை உமக்குக் கொடுத்தனுப்பினார்; உம்மை போஜனத்துக்குத் தயவு செய்து வரும்படியும் வேண்டுகிறார்.

ச. அது முடியாது; அவர்மோதிரத்தை நான் மிகவும் சந்தோஷமாய்ப் பெற்றுக் கொள்ளுகின்றேன்; அதை அப்படியே அவரிடம் கூறும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அன்றியும் வயோதிகனை சமணன் வீட்டை இச் சிறுவனுக்கு சற்றே காண்பிக்கும்படி வேண்டுகிறேன் உம்மை.

கி. அப்படியே செய்கின்றேன்.

நீ. தங்களிடம் ஒரு வார்த்தை [சரோஜினியுடன்] எனது கணவன் மோதிரத்தையும் நான் பெறப் பார்க்கின்றேன்; எப்பொழுதும் கையைவிட்டுக் கழற்ற லாகாதெனப் பிரமாணம் செய்யும்படி செய்தேனே அதை!

ச. நீ பெறுவாய், சந்தேகமில்லை! அவர்க ளிருவரும் புருஷர்களுக்கே தங்கள் மோதிரங்களைக் கொடுத்ததாக அதிகமாகச் சத்தியம் செய்வார்கள்; நாமும் அது பொய் என்று அவர்களுக்குமேல் சத்தியம்செய்து அவர்களை வெட்கப்

படச் செய்வோம்.—போ புறப்படு, துரிதப்படு;—நானிருக்குமிடம் நீ அறிவாயே ?

நி. வாரும், ஐயா, வாரும்.—அந்த வீட்டை எனக்குக் கொஞ்சம் காண்பிக்கின்றீரா ? [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

ஐந்தாம் அங்கம்.

முதற் காட்சி

இடம்.—மணிபுரம். சரோஜினியின் வீட்டைச் சார்ந்த பூந்தோட்டம்.

லீலாதரனும், ஜலஜாவும் வருகிறார்கள்.

லீ. நிலவு மிகவும் பிரகாசமாய்க் காய்கிறது! மந்தமாருதமானது, இச் செடிகளின்மீது மிருதுவாய் அவைகள் ஓசை செய்யாதபடி, சுகந்தமாய் வீசும், இத்தன்மையான ஓ ரிரவில்தான், ஸ்ரீராமர் கந்தமாதனத்தின்மீதேறி இளங்கொடியாகிய சீதை காவலிலிருக்கும் இலங்கையை நோக்கி, அவள் பிரிவை யாற்ருது பெருமூச் செறிந்தார்.

ஜ. இத்தன்மையான ஓரிரவில்தான், காதலால் வருந்திய ராதையானவள், கிருஷ்ணனைத் தேடி, எங்கும் காணுது, கால் சோர்ந்து, இடை துவண்டு, தேகம் மெலிந்து, கண் மழுங்கி கவலையுற்று, கருத்தழிந்தாள்.

லீ. இத்தன்மையான ஓ ரிரவில்தான், தமயந்தியானவள், காரிருளில் தன்னைக் கைவிட்டுப்போன காதலனை நினைந்து கண்ணீர் கலங்கக் காடெங்கும் தேடித் திரிந்தனள்.

ஜ. இத் தன்மையான ஓ ரிரவில்தான், சகுந்தலையானவள் மறுதினம், துஷ்யந்தனிடம் போகவேண்டி தன் மெல்லிய

கைகள் நோக வன மலர்களைப் பறித்து மாலையாகக் கட்டிக் கொண்டிருந்தனள்.

லி. இத் தன்மையான ஓரிரவில்தான், செல்வ வந்தனை சமணன் வீட்டிலிருந்து ஜலஜா, செலவாளியாகிய தன் காதலனுடன், வாணீபுரம் விட்டோடி மணிபுரம் வந்து சேர்ந்தனள்.

ஜ. இத் தன்மையான ஓரிரவில்தான், லீலாதரர் என்னும் இளைஞர், அவள்மீது அதிக காதல்கொண்டிருப்பதாகச் சத்தியம் செய்தார்.—பல உறுதிமொழிகள் கூறி அவள் மனத்தைக் கவர்ந்தார், ஆயினும் அவைகளில் ஒன்றேனும் உண்மையானதல்ல.

லீ. இத் தன்மையான ஓரிரவில்தான், அழகிய ஜலஜா, சண்டைக்காரச் சிறுமியைப்போல் தன் காதலன்மீது வீணிற் பழி சுமத்த, அவன் அதை மன்னித்து விட்டான்.

ஜ. இம்மாதிரியாக பொழுது விடியுமளவும் உமக்குமேல் பேசிக்கொண்டிருப்பேன், வேறொருவரு மிங்கு வராவிட்டால்.—அதோ கவனியும், யாரோ மனிதனுடைய கால் சப்தம் கேட்கிறது.

ஸ்தாவிரன் வருகிறான்.

லீ. நிசப்தமான இந் நிசியில் இத்தனை வேகமாக வருவது யார்?

ஸ். ஒரு நண்பன்.

லீ. ஒரு நண்பன்! எந்த நண்பன்? அப்பா, நண்பா, உன் பெயரை வெளியிடும்படி வேண்டுகிறேன்.

ஸ். என் பெயர் ஸ்தாவிரன்; எனது எஜமானி பொழுது விடியுமுன் இங்கே மணிபுரம் வந்து சேர்வார்களென்று உம்மிடம் சேதி சொல்ல வந்தேன்; தன் கணவனுடன் சுகமாய் வாழ வேண்டி, வழியிலுள்ள கோயில்களி லெல்லாம் தங்கிப் பணிந்து பூஜை செய்துகொண்டு வருகிறார்கள்.

லீ. அவர்களுடன் யார் வருவது ?

ஸ். பூஜ்யரான ஓர் சந்நியாசி ஒருவரும், அவர்களுடைய தோழியும் தவிர, வேருெருவருமில்லே. எனது எஜமானன் திரும்பி வந்து விட்டாரா? கொஞ்சம் தயவுசெய்து சொல்லவேண்டும்.

லீ. இன்னும் அவர் வர வில்லே; அன்றியும் அவரைப்பற்றி ஒரு சேதியும் நாங்கள் கேட்டோ மில்லே.—ஜலஜா, வா, நாம் உள்ளேபோய், வீட்டின் எஜமானியை மரியாதையுடன் நல்வரவழைப்பதற்குத் தக்க ஏற்பாடு செய்வோம்,

லாவண்யன் வருகிருன்.

லா. பலே, பலே ! ஹோ, ஹா ! பலே, பலே !

லீ. யார் அது கூவுகிறது ?

லா. பலே ! எஜமானும் எஜமானியுமாகிய லீலாதரரையும் அவரது மனேவியையும் பார்த்தீரா நீர் ? பலே பலே!

லீ. அடே, உன் கூச்சலே நிறுத்து; இதோ.

லா. பலே! எங்கே ? எங்கே ?

லீ. இங்கே.

லா. அவரிடம், என் எஜமானிடமிருந்து, நிரம்ப நற் செய்தியுடன் ஒரு தபால் வந்ததாகச் சொல்லும்; பொழுது விடியுமுன் என் எஜமான் இங்கே வந்து சேர்வார். [போகிருன்.]

லீ. கண்ணே, ஜலஜா, நாம் வீட்டிற்குள்ளே போயிருந்து, அவர்கள் வரவை எதிர் பார்ப்போம்.—ஆயினும் பெரிதல்ல;-நாம் ஏன் உள்ளே போகவேண்டும்;—அப்பா, தோழா, ஸ்தாவிரா வீட்டிலே, உங்கள் எஜமானி சமீபத்தில் வந்திருப்பதாகத் தெரிவிக்க வேண்டுகிறேன் உன்னே ; வாத்தியக்காரர்களே வெளியில் இங்கே அழைத்துவா.

[ஸ்தாவிரன் போகிருன்.]

இந்த உயர் நிலத்தின்மீது நிலவு என்ன சுகமாய் நித்திரை செய்வதுபோ லிருக்கிறது! இங்கே நாம் உட்கார்ந்து சங்கீதத்தின் ஒலியானது மிருதுவாய் நமது செவிக்குள் புகச் செய்வோம். நிசியும் நிசப்தமுமே, சங்கீதத்திற்கு ஒரு சுருதியைப் போல் மிகுந்த சுகத்தை யுண்டுபண்ணத் தக்கன; ஜலஜா, உட்கார் அதோ பார், ஆகாயத்தின் விதானமானது ஒள்ளிய அபரஞ்சியினால் இழைக்கப்பட்டதுபோல் என்ன அழகாய் விளங்குகின்றது! நீ கண்கொண்டு காணும் ஒவ்வொரு சிறிய நட்சத்திரமும், தன் நாதனான சந்திரனது காதலைப் பெற, தன் இனிய குரல் கொண்டு பாடுகின்றதென நினை. அகிலமெல்லாம் அந்தச் சங்கீதம் நிறைந்திருக்கின்றது. ஆயினும் அழிந்திடும் மண்ணாலாகிய இவ்வுட லென்னும் ஆடையானது, நமது ஆன்மாவைக் கவர்ந்திருக்கும் வரையில், அந்தத் தெய்வலோகத்துச் சங்கீதம் நமது செவிக்குப் புலப்படாது.

வாத்தியக்காரர்கள் வருகிறார்கள்.

ஹா! வாருங்கள், ஒரு பாட்டைப் பாடி உறங்கும் மதியை விழிக்கச்செய்யுங்கள்; உங்களுடைய இனிமையான ஸ்வரங்களினால், உமது எஜமானியுடைய காதைத் துளைத்து, வாத்தியத்துடன் வரவழையுங்கள் அவர்களை வீட்டிற்கு.

[சங்கீதம்.]

ஜ. திவ்வியமான சங்கீதம் என் செவியிற்பட்டால் என் மனமானது களிப் படைகிற தில்லை ஒருபொழுதும்.

லீ. அதற்குக் காரணம், உனது ஆன்மாவானது அதிக கவனத்துடன் இருப்பதேயாம்; எதேச்சையாய்த் திரியும் மதர்த்த மிருகங்களின் மந்தையையாவது, உடலி லூற்ற இரத்தக் கொழுமையினால் வெறித்தனமாய்க் குதித்தும் எக்காளமிட்டும் உரத்த சப்தத்துடன் கனைத்தும் திரியும், கைப்பழக்கப்படாத குதிரைக்குட்டிகளின் கூட்டத்தையாவது, கவனித்

துப்பார். வாத்யத்தின் கோஷமாவது, அல்லது சங்கீதத்தின் ஸ்வரமாவது அவைகளின் செவியிற் பட்டமாத்திரத்தில், உடனே சங்கீதத்தின் இனிமையான சக்தியினால், தங்கள் குரூரமான பார்வை சாந்தமான பார்வையாக மாற, அவைகள் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டு அசைவற நிற்பதைக் காண்பாய். ஆகவே கவியானவர், ஸ்ரீகிருஷ்ணனது குழலோசையைக் கேட்டு செடிகள் முதலியனவும், கற்களும், ஆறுகள் முதலியனவும், உருகி ஆனந்த சாகரத்தில் மூழ்கியதாக வர்ணித்திருக்கின்றார். ஏனெனில், உலகத்தில் எப்படிப்பட்ட ஜடமாயிருந்தபோதிலும், கடினமான தாயினும் எப்படிப்பட்ட மூர்க்கமான தாயினும், சங்கீதமானது தற்சமயம் அதன் குணத்தை மாறச்செய்கிறது. சங்கீத ஞானம் சற்றுமில்லாது மதுரமான சங்கீதத்தைக்கேட்டு மனமுருகாத மனிதன் ஒருவன் உண்டேல், அவனை ராஜத்துரோகி யென்றும், சதிக்காரன் என்றும், பறித்துண்ணும் கொடியனென்றும், நாம் மதிக்கவேண்டும். அவனது உணர்ச்சியானது அரு நரகைப்போல் இருண்டதாயும், அவனது ஆன்மா அந்தகாரத்தில் முழுகியதாகவும், நாம் அறியவேண்டும். அப்படிப்பட்ட மனிதனை அரைக்ஷணமும் நாம் நம்பலாகாது. அதோ, சங்கீதத்தைக்கேள்.

சற்று தூரத்தில் சரோஜினியும், நீலகேசியும் வருகிறார்கள்.

ச. அதோ, நமது கண்ணுக்குப் புலப்படுகின்ற விளக்கு எனது அறைக்குள் எரிகின்றது. அந்தச் சிறு விளக்கின் ஒளியானது எவ்வளவு தூரம் பிரகாசிக்கின்றது! இப்பாழான உலகத்தில் அவ்வாறே நெடுந்தூரம் பிரகாசிக்கின்றது ஒரு நற்செற்கை.

நா. சந்திரன் பிரகாசித்தபொழுது அந்த விளக்கை நாம் பார்க்கவில்லை.

ச. அவ்வாறே பெரிய ஒளியானது சிறு ஒளியை மழுங்கச் செய்கிறது; ஒருமஹாராஜாவின் பிரதிநிதி அம்மஹாராஜா அருகில் வருமளவும்தான் பிரகாசிக்கின்றான் மஹாராஜாவைப் போல்; அரசன் அருகில் வந்தவுடன். ஓடையானது பெரும் ஆற்றில் கலந்து மறைவதேபோல், அவனது பெருமையெல்லாம் அரசனுடைய தேஜஸில் ஐக்ய மாகிவிடுகிறது.—அதோ கேள்! வாத்யம்!

நா. அம்மா, அது உமது வீட்டில் வாசிக்கப்படும் வாத்தியமே.

ச. அயலி லிருந்தால்தான் அறிகிறேன் ஒன்றின் மகிமையை; இந்தச் சங்கீதம் பகற் பொழுதைவிட, இரவில் அதிக இனிமையாயிருக்கின்றது என்று எண்ணுகிறேன்.

நா. இரவில் நிசப்தமா யிருப்பதால் அது அத்தனை இனிப்பாகக் கேட்கின்றது, அம்மணி.

ச. நாம் கவனிக்காவிட்டால், காக்கையும் குயிலைப்போல் பாடுவதுதான். வானம்பாடியானது பகற் காலத்தில் வாத்துகள் எல்லாம் கத்தும்பொழுது பாடினால் கோட்டானுக்குச் சமானமான சங்கீத வித்வானாக மதிக்கப்படும் என எண்ணுகிறேன். ஒவ்வொரு விஷயமும் இவ்வுலகத்தில் சரியான காலத்திலும் சரியான இடத்திலும் இருந்தால்தான் தக்கபடி சோபித்து தக்க புகழ்ச்சியைப் பெறும். பொறு-ஹா!—சந்திர னிவ்விடத்தில் உறங்குவதுபோல நிசப்தமாய் நிலவு உறங்குகிறது; அதற்கு நாம் நித்திராபங்கம் வரச் செய்ய லாகாது.

[வாத்யம் நின்று விடுகிறது.]

லீ. அது சரோஜினியின் குரல், அன்றேல் நான் அதிக மோசம் போனவனே.

ச. குருடனானவன் கடுங் குரலைக் கேட்டு, காகம் என்பது போல், என்னைத் தெரிந்துகொள்கிறார் லீலாதரர்.

லீ. அம்மணி, வரவேண்டும், வரவேண்டும்!

ச. எங்கள் கணவர்கள் சௌக்கியமாய் வீடு வந்து சேரவேண்டுமென்று பூசனை இயற்றிக்கொண்டிருந்தோம். எங்கள் பிரார்த்தனையினால் அது சீக்கிரம் முடியுமென்று கோருகிறோம். அவர்கள் வீடு வந்து சேர்ந்து விட்டார்களா?

லீ. அம்மா, இன்னும் அவர்கள் வந்து சேர வில்லை. ஆனால் அவர்கள் சீக்கிரம் வந்து சேர்வதாக ஒரு தூதன் முன்னதாகச் செய்தி கொண்டுவந்திருக்கிறான்.

ச. நீலகேசி, நீ வீட்டிற்குள்ளே போய் நாம் வீட்டை விட்டு வெளியே போயிருந்ததைப்பற்றி அவர்கள் கொஞ்சமும் கவனிக்கவேண்டிய தில்லை என்று உத்தரவு செய், எனது வேலைக்காரர்களுக் கெல்லாம்—லீலாதரரே, நீரு மப்படியே:—ஜலஜா நீயு மப்படியே.

[எக்காளம் ஒன்று ஒலிக்கின்றது.]

லீ. அம்மா, உமது கணவர் அருகில் வந்திருக்கவேண்டும். அதோ அவர் எக்காளத்தின் ஒலி! அம்மணி, நாங்கள் கோள் சொல்லமாட்டோம், நீர் அஞ்சவேண்டியதில்லை.

ச. மலிந்த பகற் பொழுதைப்போ லிருக்கிறது இன்றிரவு; பகலைவிட கொஞ்சம் மங்கலா யிருக்கிறது; சூரியன் சற்றே மறைந் திருக்கும்பொழுது பகல் எப்படி இருக்குமோ, அப்படி யிருக்கின்றது இப்பொழுது.

பானுசேனன், அநந்தநாதன், கிரிஜாநாதன் பரிவாரங்களுடன் வருகிறார்கள்.

பா. சூரிய னில்லாத வேளையில் நாம் வெளியே நடப்போமானால், நாகலோகத்தவர் பகலை நாம் கொண்டாடுவதாகும்.

ச. நான் உமக்கு வெளிச்சம் தருகின்றேன் பதிவிரதையான மனைவி தன் புருஷனுக்கு ஒரு விளக்கைப்போ லிருக்க வேண்டும். அதெல்லா மிருக்கட்டும்—பிராணநாதா, நீர் திரும்பி வந்தது சந்தோஷம்.

பா. மிகவும் சந்தோஷம். இதோ, என் நண்பர், இவர்தான் அநந்தநாதர், இவருக்கு நல் வரவு கூறுவாய். இவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டவனு யிருக்கின்றேன்.

ச. நீர் எவ்விதத்திலும் அவருக்கு மிகவும் கடமைப்பட்டவரா யிருக்கவேண்டியது நியாயந்தான். ஏனெனில், நான் கேள் விப்படுகிற பிரகாரம், அவர் உமக்காக மிகவும் கடன் பட்டிருந்தா ரன்ருே?

அ. அந்தக் கடனை யெல்லாம் அவர் தீர்த்துவிட்டார்.

ச. ஐயா, தாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தது எங்கள் பாக்கி யம். தங்களுக்குச் செய்யவேண்டிய மரியாதை வாசாவினு லன்றி வேறு வழிகளிற் காணப்படவேண்டும்; ஆகவே இந்த மரியாதை வார்த்தைகளை மட்டுப்படச் செய்கிறேன்.

[கிரிஜாநாதனும் நீலகேசியும் ஒரு புறமாகப் பேசுகிருர்கள்.]

கி. அதோ, அந்த சந்திரன்மீ தாணைப்படி, சத்தியம் செய் கிறேன், நீ என்னை வீணுக தூஷிக்கிருய். வாஸ்தவத்தில், அந்த நியாயவாதியின் கணக்குப் பிள்ளைக்குக் கொடுத் தேன். நீ அதை ஹிருதயத்திற் கொண்டு இவ்வளவு கோபித்துக் கொள்கிற விஷயத்தில், அவன் அலியாயிருக் காறு என்று கோருகிறேன்.

ச. ஆ! இதற்குள்ளாக ஒரு சண்டையா? என்ன சமாசாரம்?

கி. ஒரு சிறிய பொன்வளையம், ஒரு அற்ப மோதிரம் இவள் எனக்குக் கொடுத்தாள், அதைப்பற்றி; "என்மீது காத லோடிரு என்னைக் கைவிடாதே" என்று பழய கதை யொன்று எழுதியிருந்தது அதன்மீதில்.

நீ. என்ன! அதில் எழுதியிருந்த கதையும் அதன் விலையும் பற்றி நீர் பேசுவானேன்; நானதை உமக்குக் கொடுத்த பொழுது, நீர் சாகுமளவும் அதை உமது விரலில் அணிந் திருந்து, சமாதியிலு மும்மை விட்டுப் பிரியாதிருக்கு

மென்று நீர் பிரமாணம் செய்திரா இல்லையா ? எனக்காக இல்லாவிட்டாலும், நீர் செய்து கொடுத்த பிரமாணங் களின் பொருட்டாவது, அதை நீர் ஜாக்கிரதையாகப் பாது காத்து வைத்திருக்க வேண்டாமா ? நியாயவாதியின் கணக் கனுக்கா கொடுத்தீர் ! போம் போம், சுவாமியறிய அதைப் பெற்ற கணக்கனுக்கு முகத்தில் மீசையே முளையாது ?

கி. இபபொழுது இல்லை, இன்னும் வயதானால் மீசை முளைக் கும்.

நீ. பெண் பிள்ளை ஆண் பிள்ளை யானால்தான் அப்படியாகும் !

கி. இதோ ! இந்தக் கையறிய நான் ஒரு பையனுக்குத் தான் கொடுத்தேன்; ஒரு மாதிரியான சிறுவன், சின்ன குட்டைப் பிள்ளை, உன் உயரம் தானிருப்பான், அந்த நியாயவாதி யின் ராயசம்; தான்பட்ட கஷ்டத்திற்கு கூலியாகவேண்டு மென்று கெஞ்சினான், கொடேன் என்று மறுக்க என்மனம் தாளவில்லை.

ச. நீர் செய்தது தவறு; நானும்மிடம் ஸ்பஷ்டமாகச் சொல்ல வேண்டும். உமது மனைவி உமக்கு முதல் முதல் கொடுத்த பொருளை அவ்வளவு சுலபமாகக் கொடுத்து விடலாமா? அதுவும் சத்தியம் செய்து உமது விரலிலிட்டது; ஆகவே ஆணையினால் ஆணியறைந்ததுபோல் உமது விரலை விட்டு நீங்கா திருக்கவேண்டாமா; இதோ என் பிராணநாதருக்கு நான் ஒரு மோதிரம் கொடுத்திருக்கிறேன், அதை ஒரு பொழுதும் விட்டுப் பிரிவதில்லை என்று அவர் பிரமாணம் செய்யும்படி செய்திருக்கிறேன். இதோ இருக்கின்றார்; இவ் வுலகத்தி லுள்ள பொருளை யெல்லாம் கொடுப்ப தானாலும் அதற்காக அதைக் கொடுக்க மாட்டார். அவர் விரலை விட்டுக் கழற்றவு மாட்டார். அதை, என்றும் அவர் பொருட்டு நான்பிரமாணம் செய்வேன் ! ஐயா, கிரிஜா நாதரே, உமது மனைவிக்கு மிகவும் வருத்தம் விளைக்கின்றீர்

கருணையின்றி; எனக் கிம்மாதிரியான துயரம் நேரிட்டால் பயித்திய மன்றோ பிடித்துப் போம் எனக்கு.

பா. [ஒரு புறமாக] பேசாமல் என்கையை அப்படியே வெட்டிக் கொண்டு, அந்த மோதிரத்தைக் காப்பதில் அந்த கையைப் பறிகொடுத்தேன் என்று சத்தியம் செய்வதே நலம்.

கி. பானுசேனர் தன் மோதிரத்தை, அதைப் பெறுதற்கு மிகவும் அருகனான அந்த நியாயவாதி அதிகமாய் வற்புறுத்தி வேண்டிக் கேட்டதின் பேரில் அவருக்குக் கொடுத்து விட்டார்; பிறகு, எழுதுவதில் கொஞ்சம் கஷ்டம் எடுத்துக் கொண்ட அவருடைய ராயசக்காரனான அந்த கணக்கன், என்னுடைய மோதிரத்தைத் தரும்படி வேண்டினான்; அவர்களிரண்டு பெயரும் அந்த மோதிரங்களை யன்றி வேறொன்றையும் வாங்கிக் கொள்ள மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்தார்கள்.

ச. பிராணநாதா! நீர் எந்த மோதிரத்தைக் கொடுத்தீர்? என்னிட மிருந்து நீர் பெற்ற மோதிரத்தை யன்றோ?

பா. தவறிழைத்தது மன்றி அதனுடன் பொய் யொன்றும் பேசுவதானால், நான் அதல்ல, என்பேன்; இதோ நீயே பார்க்கின்றாயே அந்த மோதிரம் என் விரலிலில்லை—போய் விட்டது.

ச. கையில் மோதிரம் எப்படி யில்லையோ அப்படித்தான் பொய்யான உமது மனத்திலும் மெய்யென்பதில்லை. ஈசன் மீது ஆணைப்படி, அந்த மோதிரத்தை நான் பார்க்கு மளவும் உமது படுக்கையை நான் அண்டமாட்டேன்.

நா. நானும் என்னுடைய மோதிரத்தைப் பார்க்கு மளவும் உமது படுக்கையை அண்டேன்.

பா. கண்ணே! சரோஜினி! அந்த மோதிரத்தை நான் யாருக்குக் கொடுத்தேன் என்பதை நீ அறிந்திருந்தால், அந்த மோதிரத்தை யாருக்காகக் கொடுத்தேன் என்பதை நீ அறிந்

இருந்தால், எதற்காக அந்த மோதிரத்தைக் கொடுத்தேன் என்பதையும், நான் எவ்வளவு அதிருப்தியுடன் அதைக் கொடுத்தேன் என்பதையும், நீ யோசித்துப் பார்ப்பையாகில், இதைத்தவிர வேறொன்றும் வாங்கமாட்டேன், என்று அவர் பிடிவாதம் செய்ததை நீ கருதுவையாயின், நீ உனது கோபத்தைக் கொஞ்சம் தணித்துக் கொள்வாய்.

ச. அந்த மோதிரத்தின் மகிமையை நீர் அறிந்திருப்பீராயின், அந்த மோதிரத்தைக் கொடுத்தவள் குணத்தையாவது நீர் கொஞ்சம் அறிந்திருப்பீராயின், அதைக் காப்பாற்றுகிறேன் என்று நீர் கூறிய சத்தியத்தின் திறத்தையாவது அறிந் திருப்பீராயின், நீர் அதைக் கைவிட்டிருக்கமாட்டீர்! எந்த மனிதன்—அதை நானொரு விரதமாக அணிந்திருக்கின் றேன், அதைக் கொடுக்க முடியாதென்று கொஞ்சம் உறுதி யாக அதன் பொருட்டு பேசியிருப்பீராயின்—அது தான் வேண்டுமென்று நியாயமில்லாதபடி பலவந்தப் படுத்தி யிருப்பான்? நீலகேசி நான் நம்பவேண்டியதை எனக்குக் கற்பிக்கின்றாள். என் உயிரின் மீதாணைப்படி, யாரோ பெண்பிள்ளைக்குத்தான் அதை நீர் கொடுத்திருக்கின்றீர்!

பா. இல்லை, என் உயிரின் மீதாணைப்படி, அதைப் பெற்றது பெண்பிள்ளை யல்ல, ஓர் நியாயவாதி புருஷன்; அவருக்கு நான் மூவாயிரம் பொன் தருவதாகச் சொன்னேன், வேண்டாமென்று மறுத்து அந்த மோதிரம் தான் வேண்டு மென்று கேட்டார், எனது பிரிய நண்பனது உயிரைக் காப் பாற்றியவரா யிருந்த போதிலும், அவருக்கு அதை நான் கொடுக்கமாட்டேன் என்று மறுத்து அவர் வெறுத்துச் செல்லும்படி விட்டேன். அதன் மீது, கண்மணி! நான் என்ன சொல்வது? அந்த மோதிரத்தை அவனுக்கனுப்பும் படி பலவந்தப் படுத்தப் பட்டேன்; மானமும் வெட்கமும் என்னை பாதித்தது, நன்றியற்ற மனிதன் என்று பல நகைக்கும்படி, எனது நற்பெயரை நான் அவ்வளவு கெடுத்

துக் கொள்ள என்றால் முடியாமற் போச்சுது. என் கண்மணியே •என்னை மன்னிப்பாய், இதோ இரவின் தீபங்களாகிய இந்த நட்சத்திரங்கள் சாட்சியாகச் சொல்கின்றேன், நீ அங்கே அருகிலிருந்திருப்பா யாயின், நீயாக அந்த மோதிரத்தை அந்த புத்திமானான நியாயவாதிக்குக் கொடுக்கும்படி என்னை வேண்டி யிருப்பாய் !

ச. ஆனால் அந்த நியாயவாதி என் வீட்டின் அருகாமையில் வராமலிருக்கட்டும் எப்பொழுதும்; என் பொருட்டு என்றும் காப்பதாக நீர் சத்தியம் செய்த நான் எவ்வளவோ ஆசை வைத்திருந்த அம்மோதிரத்தை நீர் அவருக்குக் கொடுத்துவிட்டபடியால், நானும் உம்மைப்போலவே தயாள குணமுள்ளவளாவேன். என்னிடமுள்ள வஸ்துக்களில் அவர் எதைக் கேட்டாலும் நான் மறுக்கமாட்டேன், என் உடலைக் கேட்டபோதிலும் கொடுத்து விடுவேன். எப்படியாவது நான் அவரை அறிவேன், அதற்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. வீட்டைவிட்டு ஓரிரவும் வெளியில் உறங்காதீர், ஜாக்கிரதையாக என்னைக் காத்திரும். அங்ஙனம் நீர் செய்யாது, என்னைத் தனியே விடுவீராயின், இதுவரையிலும் அழிந்திடா என் கற்பின் மீதாணைப்படி அந்த நியாயவாதியை என் படுக்கைத் தோழனாய்க் கொள்வேன்.

நெ. நான் அவருடைய கணக்கனை அங்ஙனம் கொள்வேன்; ஆகவே என்னை நானே காத்துக் கொள்ளும்படி என்னைத் தனியே விட்டு ஏகுவதில் ஜாக்கிரதை யாயிரும்.

கி. சரி, செய் அப்படியே, அப்பொழுது நான் அவனைக் கண்டுபிடிக்காம லிருக்கும்படிக் காப்பாற்றிக் கொள்ளட்டும்! கண்டு பிடித்தேனோ அந்த கணக்கன்கதி அதோ கதிதான்

அ. ஐயோ ! துர்பாக்கியனான நானன்றோ இவ்வளவு சச்சரவுக்கும் காரணமா யிருக்கிறேன்.

ச. ஐயா, தாங்கள் ஒன்றும் வருத்தப்படவேண்டாம், உமது நல் வரவு இதனாலொன்றும் குறைபடாது.

பா. சரோஜினி, நான் கட்டாயமாய்ச் செய்யும்படி நேரிட்ட இக் குற்றத்தை மன்னிப்பாய். இதோ இத்தனை சிநேகிதர்களும் கேட்கும்படி நான் உனக்கு சத்தியம் செய்கின்றேன்.—எனது உருவத்தை நான் அங்கு காணும், உனது அழகிய கண்களின்மீ தாணைப்படி.—

ச. அது ஒன்றை மாத்திரம் ஆலோசித்துப் பாரும்! என் இரு கண்களில் அவர் தன்னை இரட்டையாகக் காண்கிறார், ஒவ்வொரு கண்ணிலும் ஒவ்வொரு உருவமாக—இரண்டகமான உமது உயிரின்மீது ஆணை வையும், அது நம்பத்தக்க ஆணையே.

பா. இல்லை, நான் சொல்வதைக் கேள்; இப் பிழையைப் பொருத்தருள், இனிமேல் எப்பொழுதும் நான் உனக்குச் செய்துகொடுத்த சத்தியத்தினின்றும் தவறுவதில்லை என்று என் ஆன்மாவின்மீது பிரமாணம் செய்கிறேன்.

அ. ஒரு முறை என துடலை அவரது கடனுக்காக ஈடு கொடுத்தேன்; அந்த உடலானது உனது பிராணநாதருடைய மோதிரத்தைப் பெற்றவர் வந்திராவிட்டால் இந்நேரம் அதோகதியா யிருக்கும். இனி உனது நாதன் உனக்குச் செய்த சத்தியத்தினின்றும் தவறமாட்டார் என்று, என்னுடைய உயிரையே ஜாமீனாகக் கொடுக்கத் துணிகிறேன் மறுபடியும்.

ச. சரி, நீர்தான் அவருக்கு ஜாமீனாக இருக்கவேண்டும். இதைக் கொடும் அவரிடம்; முன்பு கொடுத்ததைவிட ஜாக்கிரதையாக இதையாவது பாதுகாக்கும்படி சொல்லும்.

அ. இதோ, பானுசேனா, இதைப் பிரியாது வைத்திருப்பதாகச் சத்தியம் செய்.

பா. ஈசனே! இதுதான் நான் அந்த நியாயவாதிக்கு கொடுத்த மோதிரம்!

ச. அவர் எனக்குக் கொடுத்தார். பிராணநாதா, என்னை மன்னியும். அவர் இம் மோதிரத்தைக்கொண்டு என்னுடன் இருந்தார் நேற்றிரவு.

நீ. பிராணநாதா, நீரும் என்னை மன்னியும். அந்த சிறிய குட்டையான கணக்கன். நியாயவாதியின் குமாஸ்தா. இதோ இந்த மோதிரத்தை எனக்குக் கொடுத்து நேற்றிரவு என்னுடன் படுத் துறங்கினர்.

கி. ஏன்! இது, வேனிற் காலத்தில், பாதைகளெல்லாம் செம்மையா யிருக்கும்பொழுது அவைகளைச் செப்பனிடுவ தொக்கும். இதென்ன விதி! இதற்குள்ளாகவா நமக்கு இக்கதி வாய்க்கவேண்டும்!

ச. எங்களை தூஷியாதீர் வீணில். உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாகத்தா னிருக்கும். இதோ ஒரு நிருப மிருக்கின்றது. அதை சாவகாசமாய்ப் படித்துப் பாரும், அது மதுரையிலிருந்து பல்லவராயர் எழுதியது. அதனுல் அந்த நியாயவாதி சரோஜினி யென்றும், நியாயவாதியின் கணக்கன் அதோ நிற்கும் நீலகேசி யென்றும் விளங்கும். இதோ நிற்கும் லீலாதரரைக் கேட்டால், நீங்கள் புறப்பட்டுப்போன உடனே, நானும் புறப்பட்டுப்போய், இப்பொழுது சற்று முன்பாகத்தான் திரும்பி வந்தேன் என்று தெரிவிப்பார். இன்னும் நான் என் வீட்டிற்குள் நுழையவில்லை. அநந்தநாதரே, வாரும், நீர் கோருவதைவிட அதிக சந்தோஷமான சமாசாரம் உமக்கு வைத்திருக்கின்றேன் நான். இந்த நிருபத்தை சீக்கிரம் பிரித்துப் பாரும்; அதனுல் உமது பெருங் கப்பல்களில் மூன்று அகஸ்மாத்தாய் சகல சரக்குகளுடன் துறைமுகம் வந்து சேர்ந்ததாக அறிவீர்; எப்படி இந்த நிருபம் எனக்குக் கிடைத்தது என்கிற ஆச்சரியமான விஷயத்தை நான் உமக்குத் தெரிவிக்கமாட்டேன்.

அ. எனக்கு பேச வாயில்லை.

பா. நியாயவாதியாக வந்தது நீயா? உன்னை நான் கண்டு பிடிக்காமற் போனேனே!

கி. தாங்கள் தானோ கணக்குப் பிள்ளை? தாங்கள் தானோ நேற்றிரவு என் மனைவியுடன் படுத்திருந்தவர்?

நீ. ஆம், அதற்காக அவர்மீது நீர் கோபங்கொள்ள வேண்டிய தில்லை, ஒரு பெண் ஆடவனாக மாறினா லன்றி.

பா. என் கண்ணுக் கினிய நியாயவாதியே! நீர் எனது படுக்கைத் தோழனா யிரும்! நானில்லாத காலத்தில் என் மனைவி யுடன் படுத்துறங்கும்.

அ. அழகிய அம்மணி, நீர் எனக்கு உயிரும் அளித்தீர். உயிர் வாழ்க்கைக்குரிய பொருளையும் அளித்தீர். இந்த நிருபத்தில் எனது கப்பல்கள் உண்மையில் பத்திரமாய் துறை முகம் வந்து சேர்ந்ததாகப் படித் தறிகிறேன்.

ச. என்ன லீலாதரரே, என்னுடைய கணக்குப்பிள்ளை உமக்கும் நல்ல சந்தோஷத்தை யுண்டுபண்ணத்தக்க சமாசாரங்கள் கொண்டுவந்திருக்கிறார்.

நீ. ஆம், அதற்கு கூலியில்லாமலே அதைக் கொடுக்கிறேன் அவரிடம். செல்வ வந்தனாகிய சமணன் மறிக்கும் காலத்தில், அவன் வைத்துப் போகும் பொருள் எல்லாம், உமக்கும் ஜலஜாவுக்கும் சேரும்படியாக, இதோ இத் தான பத்திரத்தின் மூலமாகக் கொடுக்கிறேன்.

லீ. அழகிய வஞ்சியரே, அரை வயிற்றுக் கஞ்சி கேட்பவர்களுக்கு அமிர்தத்தை அளிக்கின்றீர்கள் நீங்கள்!

ச. ஏறக்குறைய பொழுது விடியும் சமய மாயிற்று. ஆயினும் நடந்தேறிய இவ் விஷயங்களைப்பற்றி நீங்கள் எல்லாம் இன்னும் நன்றாய்த் திர்ப்தியடைய வில்லையென்று நம்புகிறேன். வாருங்கள் உள்ளே போவோம். நீங்கள் என்னென்ன கேள்விகள் கேட்கவேண்டுமோ கேளுங்கள். நாங்கள் உண்மையாய் எல்லாவற்றிற்கும் பதி லுரைக்கின்றோம்.

கி. அகபடியே ஆகட்டும். என் நீலகேசி சத்தியம் செய்து பதில் சொல்லவேண்டிய முதற் கேள்வி என்னவென்றால், மறு நாள் இரவு வரைக்கும் காத்திருக்க இஷ்டமா? அல்லது பொழுது விடிய இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கும் இப்பொழுது படுக்கப்போக இஷ்டமா; ஆயினும் பொழுது விடிந்தால், இருட்டா யிருக்கலாகாதா என்று விரும்புகிறேன் நான், நியாயவாதியின் கணக்கனுடன் படுத் துறங்கும் பொருட்டு. சரி, இனி நான் உயிர் வாழ்நா ளெல்லாம், நீலகேசியின் மோதிரத்தைக் காப்பதில் நான் பயப்படுவதுபோலவேறொன்றிற்கும் அத்தனை அஞ்சிலேன்.

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை-1.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
24	15	கதந்தர மற்றவள்	சுதந்தரமற்றவள்
30	15	குதிரைக்கும்	குதிரைக்கு
38	10	தீவர்த்தியால்	தீவர்த்தியாள்
39	3	தீவிர்த்தி	தீவர்த்தி
68	13	சித்தரித்தவன்	சித்திரித்தவன்
77	16 17	ஷாம்லால், சாம்பநாதன் சிறைச்சாலைச் சேவகன் வருகிறான்.	ஷாம்லால், சாம்பநாதன் அநந்தநாதன். சிறைச்சாலை சேவகன் வருகிறார்கள்.
112	10	உன்மை	உண்மை
121	12	அனிந்திருக்கின்றேன்	அணிந்திருக்கின்றேன்.

இடைக்குமிடம் :

ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,
70, ஆச்சாரப்பன் தெரு,
சென்னை—1.

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை-1.